# கோகுலம்

Gokulam

பிப்ரவரி 83 • ரூ.2



**CHILD CRAFT:** The How & Why Library (15 Vols)

Child Craft stimulates children's Curiosity...
builds upon their interest.

It is a topically arranged learning link between the home and school, providing information at the child's level of understanding. It is comprehensive, stimulating interest in social studies, science, literature, the arts & music from the very earliest years.

Price **Rs. 1550/-**

on display


at

# HIGGINBOTHAMS LTD.,

814, Anna Salai,

MADRAS-600002

Branches at: NEW DELHI – CALCUTTA – BOMBAY
BANGALORE – MYSORE – MANGALORE
HYDERABAD – GUNTUR – TRIVANDRUM
ERNAKULAM – OOTACAMUND – MADURAI
COIMBATORE – TIRUCHIRAPPALLI



**அருமைச் சிறுவர் சிறுமியரே,**

உங்கள் அனைவருக்கும் கோகுலத்தின் சார்பில் மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

'கோகுலம்' மீண்டும் வெளிவருவதை அறிந்ததும், உங்களுக்குத் தான் எத்தகைய மகிழ்ச்சி! நாள்தோறும் மகிழ்ச்சியைத் தெரிவித்து உங்களில் பலர் எழுதுகிறீர்கள்.

'கோகுலம்' மீண்டும் வெளிவரப் போகிறது என்ற செய்தியைக் கேட்டு, உங்களையெல்லாம்விட அதிகமான மகிழ்ச்சியைத் தெரிவித்தவர்கள் யார், தெரியுமா? காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்தாம்! அவர்களின் நல்வாழ்த்தும் கோகுலத்துக்குக் கிடைத்திருக்கிறது.

உங்களைப் போன்ற நல்ல குழந்தைகளுக்கு, நல்ல நல்ல கதைகளாக, நல்ல நல்ல பாடல்களாக, அறிவை வளர்க்கும் பல புதுப் புதுச் செய்திகளாகத் தரவேண்டுமே என்ற அக்கறையுடன் இந்த இதழைத் தயாரித்திருக்கிறோம்.

நீண்ட காலமாகச் சிறுவர்களுக்காக எழுதிவரும் பல புகழ்பெற்ற எழுத்தாளர்களும், சில புதிய எழுத்தாளர்களும் இந்த மலரில் எழுதியிருக்கிறார்கள். அவர்களைப் போலவே பிரபல ஓவியர்களும் தங்கள் திறமையைக் காட்டியிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும் படியுங்கள். உங்களுக்கு இந்த இதழ் பிடித்திருந்தால், உங்கள் நண்பர்களிடமும் சொல்லுங்கள். உங்கள் அப்பா, அம்மாவிடம் கொடுத்து அவர்களையும் படிக்கச் சொல்லுங்கள். 'கோகுலம்' உண்மையிலேயே நல்ல பத்திரிகைதான் என்றும், இது உங்கள் பண்பு வளர, அறிவு ஓங்க நிச்சயம் உதவக் கூடியதுதான் என்றும் உங்களது பெற்றோர்கள் நினைத்தால், தொடர்ந்து வாங்கித் தரச் சொல்லுங்கள்.

உங்களுடைய ஆர்வமும் உங்கள் பெற்றோர்களின் ஆதரவும் இருக்குமானால், அப்புறம் எங்களுக்கு என்ன கவலை?

மேன்மேலும் நல்ல முறையில் கோகுலத்தை வெளியிடுவோம். மேன்மேலும் உங்களுக்குத் தொடர்ந்து மகிழ்ச்சி ஊட்டுவோம்.

—அழ. வள்ளியப்பா
கௌரவ ஆசிரியர்



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

# கோகுலம்


கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

மலர்—1 இதழ்—1

1983 பொங்கல் திருநாளில் மலரும் பிப்ரவரி மாத இதழ்



குன்றக்குடியான்



திருச்சி பாரதன்

## உள்ளே உள்ளவை



| | | |
|---|---|---|
| பிள்ளையாரே! பிள்ளையாரே! | —குன்றக்குடியான் | 4 |
| கண்ணன் வருகிறான் | —திருச்சி பாரதன் | 4 |
| ஜகத்குருவின் ஆசி | —ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் | 5 |
| ஆனந்தக் கண்ணீர் | —'தேவி' | 6 |
| நேரு பிறந்தநாள் பரிசு | — | 10 |
| சீன தேசத்துக் குட்டிக்கதைகள் | —ஜான்ஸி | 11 |
| உதவாத டெலிபோன் | —அழ. வள்ளியப்பா | 14 |
| பிடித்த புத்தகங்கள் | —சூர்யமூர்த்தி.ஏ.ஆர்.ஆனந்த் | 17 |
| ஓசிப் பயணம் | —மு. வை. அரவிந்தன் | 18 |
| இளமையில் இவர்கள் | — | 19 |
| கூடைப்பந்து ஆடுவோம் | —குண்டுமணி | 22 |
| பெயர்மட்டுமா தங்கம்? | —ஜோதிர்லதா கிரிஜா | 24 |
| பெருமாள் மாடு | புவனை கலைச் செழியன் | 27 |
| வீரவேல்! வெற்றிவேல்! | —சுகி சிவம் | 28 |
| யானையும் பானையும் | —'அழகி' | 32 |
| அதற்கு என்ன? | —மா. கண்ணப்பன் | 32 |
| கோகுலம் சிறுவர் சங்கம் | — | 33 |
| இமயம் முதல் குமரி வரை | —சோமலெ | 35 |
| காணவில்லை | —வெ. நல்லதம்பி | 38 |
| சேகரின் பொழுதுபோக்கு | — | 44 |





அழகு பழனிச்சாமி



மா. கண்ணப்பன்



மு. வை. அரவிந்தன்



குண்டுமணி

ஜோதிர்லதா கிரிஜா




சோமலெ



வெ. நல்லதம்பி



நாகரத்தினம்



எச். கிருஷ்ணமூர்த்தி




| | | |
|---|---|---|
| நாடோடிப் பாடல்கள் | — | 48 |
| கைக்குழந்தையிலேயே நடித்தேன் | — மன்னை சௌரிராஜன் | 50 |
| கைக்குடையும் கால்செருப்பும் | —நாகரத்தினம் | 54 |
| கேள்வி நேரம் | — | 55 |
| கவிவரின் பயணங்கள் | —எச். கிருஷ்ணமூர்த்தி | 57 |
| விடுமுறை நாள் | —தம்பி சீனிவாசன் | 65. |
| பூக்கூடை | — | 66 |
| ஒரு ரூபாய் நோட்டு | —பூதலூர் முத்து | 68 |
| வெளிநாட்டு விடுகதைகள் | — | 70 |
| படித்துச் சிரிப்போம் | —லலிதா செல்லப்பா | 72 |
| புது டீச்சர் | —நெ. சி. தெய்வசிகாமணி | 73 |
| என்னைக் கவர்ந்த மாணவன் | —ஆர். பி. சாரதி | 76 |
| தேரைக் கொடுத்தான் பாரி | — | 77 |
| புகைப்பட ஆல்பம் | — | 79 |
| தாத்தா போட்ட நாடகம் | —அழகு பழனிச்சாமி | 82 |
| நான் செய்த நல்ல செயல் | —கே. பத்மப்ரியா | 84 |
| இன்று புதிதாய்ப் பிறந்தோம் | —இனியவன் | 85 |
| குப்புசாமி அப்புசாமி | —அழ. வள்ளியப்பா | 96 |


தம்பி சீனிவாசன்




**தனிப்பிரதி ரூ. 2/-** **ஆண்டுச் சந்தா ரூ. 24/-**


அழகி



# கோகுலம்


**கிண்டி, சென்னை-600 032**




புவனா கலைச்செழியன்



இனியவன்



நெ. சி. தெய்வசிகாமணி



பூதலூர் முத்து



## பிள்ளையாரே!

குன்றக்குடியான்

பிள்ளையாரே! பிள்ளையாரே!
பெரிய சாமி நீரே! — என்
கள்ள மில்லா நெஞ்சத்திலே
கல்வி ஊன்று வீரே!

உள்ள மெல்லாம் உன்வசமே!
உண்மை அறி வீரே! — நீர்
அள்ள அள்ளக் குறைவிலாத
அறிவு தரு வீரே!

வள்ளிப் பெண்ணை முருகனுக்கு
மனைவி ஆக்கி வீரே! — எனைத்
தள்ளிவிட வேண்டாம்: ஐயா
தந்தை தாயும் நீரே!

நல்ல புத்தி பெறவழிகள்
சொல்லித் தரு வீரே! — நான்
பள்ளிப் பிள்ளை வேண்டுகிறேன்;
பாதை காட்டு வீரே!

## கண்ணன் வருகிறான்

திருச்சி பாரதன்

கோகு லத்தில் கண்ணனே
குழலை ஊதி வருகிறான்!
மாடு கன்று தொடரவே
மகிழ்ச்சி யாக வருகிறான்!

ஏரிக் கரையின் மீதிலே
ஏறி இறங்கி வருகிறான்!
ஆர்வத் துடனே பாடலை
அழகாய்ப் பாடி வருகிறான்!

என்றும் இனிமேல் இன்பமே
என்று சொல்லி வருகிறான்!
அன்பாய் கீதை போதனை
அறியச் செய்ய வருகிறான்!





அட்டைப்படம்

**கன்றுக் குட்டியை அலங்கரிப்போம்
கரும்பு தின்னக் கொடுத்திடுவோம்**

**அன்பாய் நாங்கள் கட்டிஅணைத்து
ஆசை தீரக் கொஞ்சிடுவோம்**

புகைப்படம்: உத்ரா
சிறுமி: நாராயணி
சிறுவன்: பிரேம்சாயி



# ஜகத்குரு ஆசி

சென்னை-17
14—12—82

'இளமையிற்கல்' என்பது தமிழ்ப் பழமொழி. 'ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது' என்பதும் ஒரு பழமொழி. இளம்வயதிலேயே - குழந்தைப் பருவத்திலேயே நல்ல பண்புகளும் ஒழுக்கமும் — கடவுள் பக்தியும் — தேச பக்தியும் பெரியோர்கள் புகட்ட வேண்டும்.

தற்போது கல்வி நிலையங்களில் அறக் கல்வி, நீதிக் கல்வி எல்லாம் பெயர் அளவுக்குக்கூடச் சொல்லிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. பெரியோர்கள் வாசிக்கும் பல பத்திரிகைகளில் குழந்தைகளுக்கென ஒரு பகுதி ஒதுக்கி அதன் மூலம் குழந்தைகளையும் சீக்கிரமே பெரியவர்களின் உணர்ச்சியுடையவர்களாக ஆக்கி விடுகிறார்கள். மேலும் குழந்தைகளுக்கென வெளிவரும் பல புஸ்தகங்கள் சண்டைக் கதைகளையே அதிகமாகக் கொண்டிருக்கின்றன.

நல்ல பண்புகளையும், குணங்களையும், பக்தியையும், விஞ்ஞான பூர்வமான அறிவுக் கதைகளையும், வேடிக்கையின் மூலம் பலவித நீதிகளையும் — கணக்குகளையும் — ஆலோசிக்கும் தன்மையையும் வளர்க்கும் நோக்கத்துடன் ''கோகுலம்'' மறுமலர்ச்சி பெற்றுத் தொடர்ந்து நடைபெற இருப்பதுகேட்டு மிகுந்த சந்தோஷிக்கிறோம்.

பெற்றோர்கள் செலவைப் பார்க்காமல் ஒவ்வொரு மாதமும் இந்தப் பத்திரிகையைத் தங்கள் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்துப் படிக்க உதவ வேண்டும். பள்ளிப் படிப்பு அடுத்த ஆண்டுக்கு உதவும் — கோகுலத்தில் வரக்கூடிய நிகழ்ச்சிகள் வாழ்நாள் முழுவதும் உதவிகரமாக இருக்கக்-கூடியவை. குழந்தைகளும் நன்றாகப் படித்து, புத்தியை நல்வழியிலேயே வளர்த்துக் கொண்டு, நல்லவர்களாக வாழ்ந்து, வரும் காலம் நல்லதாக அமைவதற்கு முயல வேண்டுமென ஆசிர்வதிக்கிறோம்.

- காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

### தேசத் தந்தைக்குச் சிறுவன் கொடுத்த பழங்கள்



# ஆனந்தக்கண்ணீர்

தேவி

**கா**ந்தித் தாத்தா எத்தனையோ முறை உண்ணாவிரதம் இருந்திருக்கிறார். நம் நாட்டு நலனுக்காகவும், சமூக நலனுக்காகவும் அவர் உண்ணாவிரதம் இருந்தார்.

ஒரு சமயம் ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்காக அவர் உண்ணாவிரதம் இருந்தார். அவர் உண்ணா விரதம் இருப்பதை அறிந்த ஏராளமான பேர் அவரைப் பார்க்க வந்தார்கள். அப்போது ஒரு ஹரிஜனச் சிறுவன் அங்கே வந்தான். அவனைக் காந்தித் தாத்தா அருகிலே அழைத்தார்.

''தம்பி, உன் பெயரென்ன?'' என்று அன்போடு கேட்டார். ''விட்டோபா'' என்றான் அந்தச் சிறுவன்.

''தாத்தா, நீங்கள் இருபத்தியோரு நாட்கள்கூடச் சாப்பிடாமல் இருப்பீர்களாமே, என்னால் ஒருவேளை கூடப் பட்டினி கிடக்க முடியவில்லையே'' என்றான் விட்டோபா.

காந்தித் தாத்தா சிரித்தார்.

''தாத்தா, நீங்கள் எப்போது விரதத்தை முடிப்பீர்கள்?'' என்று கேட்டான் விட்டோபா.

''என் கோரிக்கை நிறைவேறியதும் உண்ணா விரதத்தை நிறுத்தி விடுவேன்'' என்றார் காந்தித் தாத்தா.

''தாத்தா, உண்ணா விரதத்தை முடிக்கும்போது எப்படி முடிப்பீர்கள்?'' என்றான் விட்டோபா.

''எலுமிச்சம் பழச் சாறு அல்லது ஆரஞ்சுப் பழச் சாறு அருந்தி உண்ணா விரதத்தை முடிப்பேன். ஆனால், இந்தத் தடவை நீ கொண்டு வருகிற ஆரஞ்சுப் பழத்தைச் சாப்பிட்டுத்தான் உண்ணா விரதத்தை முடிக்கப் போகிறேன்'' என்றார் காந்தித் தாத்தா.

''பாபுஜி, நீங்க விரதம் முடிக்கிறபோது நிச்சயம் ஆரஞ்சுப் பழம் கொண்டு வருவேன்'' என்றான் விட்டோபா. அவனுக்கு ஓரே ஆனந்தம்.

'காந்திஜி பெரிய மகாத்மா. அவர் நாம் கொண்டு வந்து கொடுக்கிற ஆரஞ்சுப் பழத்தைச் சாப்பிட்டு விரதத்தை முடிக்கப் போறதாச் சொல்லுகிறாரே!' என்று மகிழ்ச்சி அடைந்தான்.

வீட்டுக்குப் போனதும் முதல் காரியமாக ஒரு சிறு பெட்டியைத்தேடி எடுத்தான். அதில் அவன் அம்மா அவ்வப்போது தருகின்ற சில்லறைக் காசுகளைப் போட்டு வைத்தான்.

அவன் வீட்டிலே பல வேளைகளில் சாப்பாடு இருக்காது. சாப்பாடு இல்லாதபோது காலணாவோ, அரையணாவோ அவன் அம்மா அவனிடம் கொடுத்து ஏதாவது கடை வீதியில் வாங்கித் தின்னச் சொல்லுவான். ஆனால், அவனோ எதுவும் வாங்கித் தின்ன மாட்டான். அம்மா கொடுக்கும் காசுகளைப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்துவிட்டுப் பட்டினி கிடப்பான்.

ஒரு நாள் மாலையில் விட்டோபா பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்து



கொண்டிருந்தான். அப்போது ''காந்திஜி நாளைக் காலையில் உண்ணாவிரதத்தை முடிக்கப் போகிறார்'' என்று சிலர் தெருவில் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டான்.

உடனே அவன் வீட்டுக்கு வேகமாக ஓடினான். பெட்டியைத் திறந்து அதில் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கிறது

என்று பார்த்தான். ஐந்தணா இருந்தது. அதை எடுத்துக் கொண்டு ஒரு பெரிய பழக் கடைக்கு ஓடினான்.

'காந்தித் தாத்தாவுக்கு ஒரே ஒரு பழத்தைக் கொண்டு போனால் நல்லாயிருக்காது. குறைந்தது மூன்று பழங்களாவது கொண்டு போகணும்' என்று தீர்மானம் செய்து கொண்டான்.

ஆனால், அந்தப் பழக் கடையில் மூன்றணாவுக்குக் குறைந்து ஆரஞ்சுப் பழமே இல்லை. ஐந்தணாவுக்கு இரண்டு பழங்கள்கூடக் கிடைக்காது.

'சரி, வேறு கடைக்குப் போகலாம்' என்று இன்னொரு கடைக்குப் போனான். ஆனால் அங்கும் அதே விலைதான்.

விட்டோபா கடைக்காரரைப் பார்த்து, ''ஐயா, ஆரஞ்சுப் பழம் எனக்காக இல்லை. நாளைக் காலையில் உண்ணா விரதத்தை முடிக்கப் போகிறாரே நம் காந்தித் தாத்தா, அவருக்குத்தான்'' என்று கெஞ்சிக் கேட்டான்.

இதைக் கேட்டதும் அந்தக் கடைக்காரர் கேலியாகச் சிரித்தார்.

''ஆமா, இவரு கொண்டு போய்க்கொடுக்கிறஆரஞ்சுப் பழத்தைச் சாப்பிட்டுத்தான் பாபுஜி உண்ணா விரதத்தை முடிக்கப் போகிறாரோ? பாபுஜி பேரைச் சொல்லிக் குறைச்சல் விலையிலே வாங்கலாம்னு பார்க்கிறாயா? போ, போ'' என்று துரத்தினார்.

விட்டோபா அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். ஊரின் கடைசியிலே ஒரு சிறிய பழக் கடை இருந்தது. அங்கே ஓடினான். சின்னச் சின்னப் பழங்களாக அங்கு இருந்தன. பார்ப்பதற்கு நன்றாக இல்லை. ''என்ன விலை?'' என்று விசாரித்தான். ''ஒரு பழம் இரண்டணா'' என்றார் கடைக்காரர்.


''ஐயா, என்னிடம் ஐந்தணாத்தான் இருக்கிறது. மூணு பழம் வேணும். தயவு செய்து கொடுங்களய்யா'' என்று கெஞ்சினான் விட்டோபா.

''காசைக் கொடு'' என்று சொல்லி ஐந்தணாவைப் பெற்றுக் கொண்டு மூன்று பழங்களை விட்டோபாவிடம் கடைக்காரர் கொடுத்தார்.

மறுநாள் காலை விட்டோபா ஒரு பழைய துணியில் மூன்று ஆரஞ்சுப் பழங்களையும் முடிந்து எடுத்துக்கொண்டு காந்திஜியைப் பார்க்கப் புறப்பட்டான். அவன் போவதற்கு முன்பே அங்கு பெரிய கூட்டம் கூடி விட்டது. விட்டோபாவால் உள்ளே நுழையக்கூட முடியவில்லை. ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தான். காந்திஜியைச் சுற்றிப் பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் இருந்தார்கள். கூடை கூடையாகப் பழங்களும் அங்கே இருந்தன.

அவற்றைப் பார்த்த விட்டோபா, 'எத்தனை பழங்கள்! எவ்வளவு பெரிய பழங்கள்! பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். நாம் கொண்டு வந்திருக்கிற இந்தச் சின்னப் பழங்களையா காந்தித் தாத்தா சாப்பிடப் போகிறார்?' என்று நினைத்தவாறு நின்று கொண்டிருந்தான்.

அப்போது ஆசிரமத்தில் பணி புரியும் ஒரு தொண்டர் வந்தார். அவர் யாரையோ தேடுவது போல் இருந்தது.



''யாரைத் தேடுகிறீர்கள்?'' என்று கூட்டத்தில் இருந்த ஒருவர் கேட்டார்.

''ஒரு பையனை பாபுஜி கண்டு பிடித்துக் கூட்டி வரும்படி சொன்னார். அவன் கொடுக்கிற ஆரஞ்சுப் பழத்தைச் சாப்பிட்டுத்தான் அவர் உண்ணு விரதத்தை முடிக்கப் போகிறாராம். அந்தப் பையனைத்தான் தேடுகிறேன்.'' என்றார் அந்தத் தொண்டர்.

''ஒரு பையனா? அவன் பேரு என்ன?'' என்றார் இன்னொருவர்.

''விட்டோபா'' என்றார் தொண்டர்.

உடனே விட்டோபா, ''இதோ, இதோ, நான் இங்கே இருக்கிறேன். இதோ, இங்கே இருக்கிறேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

''விட்டோபா, வா சீக்கிரம். வா, வா சீக்கிரம்! உனக்காகத்தான் பாபுஜி காத்திருக்கிறார்.'' எல்லாரும் விட்டோபாவுக்கு வழி விடுங்க!'' என்றார் அந்தத் தொண்டர்.

விட்டோபா குதித்துக் கொண்டு காந்திஜியின் அருகில் சென்றான். பழந் துணியில் முடிந்து வைத்திருந்த மூன்று ஆரஞ்சுப் பழங்களையும் எடுத்து காந்திஜியின் முன்னால் வைத்தான்.

காந்திஜி அந்தப் பழங்களில் ஒன்றை எடுத்துச் சாப்பிட்டு விரதத்தை முடித்தார்.

காந்திஜி விட்டோபாவின் முதுகில் தட்டிக் கொடுத்து, ''விட்டோபா, நீ சொன்னபடி செய்துவிட்டாய்!'' என்றார்.

''பாபுஜி! நீங்களும் சொன்னபடி செய்து விட்டீர்களே!'' என்றான் விட்டோபா.

அப்போது அவன் கண்களில் நீர் வழிந்தது. அது ஆனந்தக் கண்ணீர்!


---


## பாம்பைக் கொல்லும் தவளை!

தவளையைப் பிடித்துப் பாம்பு தின்னும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், தவளையைக் கடித்துப் பாம்பு சாகும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

உண்மைதான். தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலும் ஒரு வகைத் தவளை இருக்கிறது. அதன் உடம்பிலே ஒரு விதமான விஷம் இருக்கிறது. அதனால் அதைக் கடித்த பாம்பு உடனே இறந்துவிடுகிறது! அந்தத் தவளையை நாய் கடித்தாலும் அதே கதிதானும்!

கிழக்கிந்தியத் தீவுகளில் ஒரு வகைத் தவளை இருக்கிறது. அது தண்ணீரிலும் வசிக்காது; தரையிலும் வசிக்காது. மரத்தில்தான் வாழும். மரத்தில் ஏறுவதற்கு ஏற்றபடி அதன் கால் விரல்கள் கூர்மையாக இருக்கும். கால்களில் ஒரு விதப் பசையும் இருக்கும்.





## தேள் முட்டையிடுமா? குட்டிபோடுமா?

தேள் முட்டை இடாது. ஆனால், முட்டைக்குள்ளிருந்துதான் குட்டிகள் வரும்.

அது எப்படி?

பெண் தேள் தன் வயிற்றுக்குள்ளேயே முட்டைகளை வளர்க்கும். சில நாட்கள் சென்று அது முட்டைகளாகப் போடாது. முட்டைகள் உடைந்து குட்டிகளாவே பிறக்கும்!

பிறந்த குட்டிகள் அம்மா முதுகிலே ஏறிக்கொள்ளும். அம்மா அவற்றைச் சுமந்து கொண்டே திரியும். சிறிது வளர்ந்ததும் குட்டித் தேள்கள் கீழ் இறங்கித் தனித் தனியாகச் சென்று விடும்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்
ஆக்ஞையின்படி நடைபெறும்

# தெய்வீகப் புத்தகக் காட்சி

இடம்: **பவானி புக் ஸென்டர்**

19, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033

**14-1-'83 முதல் 23-1-'83 வரை**

**சிறப்புச் சலுகை 10%**

---

ஸ்ரீ வத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் எழுதிய

ஸதாசாரம்
ஸந்தியாவந்தனம்
ஆபஸ்தம்பஸ்ரார்த்தம்
ஸூதக ஆசௌச விளக்கம்
யஜுர் உபாகர்ம விளக்கம்
ஸங்கராந்தி பூஜையும், கோ பூஜையும்.
ஷாற்பது ஸம்ஸ்காரங்கள்
சிவராத்ரி பூஜையும் கதையும்

OUR LATEST PUBLICATION

# HOLY ADVENT

(SAGE OF KANCHI)

Released by Hon'ble Chief Justice **K. B. N. SINGH**

on the occasion of the platinum jubilee celebrations of H. H. Sri Chandrasekarendra Saraswathi Swamigal of Kanchi Kamakoti Peetam

**Rs. 9/-** per copy

# நேரு பிறந்த நாளில் பரிசு

நேரு மாமாவுக்குக் குழந்தைகள் என்றால் மிகவும் பிரியம். அதே போல் புத்தகங்கள் மீதும் பிரியம் அதிகம். அதனால் ஒவ்வொரு இந்திய மொழியிலும் வெளிவந்துள்ள குழந்தைப் புத்தகங்களில் சிறந்தவற்றுக்கு ஆண்டு தோறும் நேருஜி பிறந்த நாளில் மத்திய அரசாங்கம் பரிசு வழங்குவதென முடிவுசெய்தது.

1955ஆம் ஆண்டு முதல்முதலாக இப்பரிசுகளை அறிவித்தார்கள். அந்த முதல் ஆண்டில் பரிசு பெற்ற தமிழ்ப் புத்தகம் எது தெரியுமா? 'ராமுவும் நானும்' என்ற புத்தகம்தான். நா. கி. நாகராஜன் அவர்கள் எழுதியது. பெரிய பெரிய விஞ்ஞான உண்மைகளையெல்லாம் ராமு என்ற சிறுவனுக்கு மிகவும் எளிமையான முறையில் விளக்கிக் கூறுவது போல் எழுதப்பட்டது.



முன்பெல்லாம் நேருஜியின் பிறந்த நாளன்றே எந்தெந்த மொழியில் எந்தெந்தப் புத்தகம் பரிசு பெற்றது என்பதை அறிவிப்பார்கள். பத்திரிகைகளும், வானொலி நிலையங்களும் யார் யார் பரிசு பெற்றார்கள் என்பதை அன்றைக்கே அறிவிக்கும். பரிசு பெற்றவர்களின் படங்களைக்கூடச் சில பத்திரிகைகள் வெளியிடுவதுண்டு.



■ நா. கி. நாகராஜன்

ஆனால், இப்போதெல்லாம் நேருஜியின் பிறந்த நாளில் இந்த அறிவிப்பு வருவதில்லை. என்றோ வருகிறது. அதுவும் எழுத்தாளர்களுக்கே தெரிவதில்லை.

இனியாவது ஒவ்வோர் ஆண்டும், நேருஜியின் பிறந்த நாளாகிய நவம்பர் 14ஆம் தேதியே குழந்தைப் புத்தகப் பரிசுகளை அறிவித்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்? குழந்தைகள் தின விழா மேலும் சிறப்பாக இருக்குமே! பரிசு பெற்ற புத்தகங்களைக் குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் குழந்தைகளின் தினத்திலேயே வாங்கிக்கொடுக்கவும் வசதியாக இருக்குமே!

# சீனா தேசத்துக் குட்டிக் கதைகள்

ஜான்ஸி

(சீனா தேசத்துச் சிறுவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் பள்ளிக்கூடத்தில் படித்த கதைகள். நீங்களும் படியுங்கள்.)

## வீரர்களுக்கு அம்பு

சீனாவுக்கும் பர்மாவுக்கும் அப்போது பெரும் போர்நடந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென, தங்களிடம் இருந்த அம்பு முழுவதும் தீர்ந்துவிட்ட விஷயத்தை அறிந்தனர் சீனர்கள். சீனத் தளபதிக்கு எதிரிகளிடம் அதிக அளவில் அம்பு இருப்பது தெரியும். எனவே, அவர் ஒரு தந்திரம் செய்தார். எதிரிகளின்அம்பை அவர்களிடமிருந்து பெறமுடிவு செய்தார்.



அவர் வைக்கோலைக் கொண்டு நிறைய மனித உருவங்களைச் செய்தார். அவை நம்மூர் சோளக் கொல்லைப் பொம்மை மாதிரி இருந்தன. அவற்றுக்கு வீரர்களின் ஆடைகளை உடுத்தி, போர் வீரர்களைப் போலவே செய்து விட்டார். அவற்றைக் கப்பலின் மேல் தளத்தில் நிற்க வைத்தார். உண்மையான வீரர்களில் சிலரையும் அனுப்பி வைத்தார். கப்பல் மிதந்து எதிரிகள் இருக்கும் கரையருகில் சென்றது. உடனே உண்மையான வீரர்கள் பலத்த ஒலி எழுப்பினர்.

நம்மைத் தாக்க எதிரிகள் வந்து விட்டனர் என எண்ணி, அம்பைச் சரமாரியாகப் பொழிந்தனர் பர்மாக்காரர்கள். எவற்றின் மீது தெரியுமா? போலி வீரர்கள் மீது! அதாவது வைக்கோலால் செய்யப்பட்ட வீரர்களது உருவங்களின் மீது அம்பெய்தினர்!

இறுதியில் நிறைய அம்புகளைத் தாங்கிய வைக்கோல் உருவங்களுடன் தங்கள் இருப்பிடத்துக்குத்திரும்பியது சீனக்கப்பல். பின் அந்த அம்புகளைத் தனியே எடுத்துப் போரில் பயன்படுத்த வைத்துக்கொண்டார்கள் சீனர்கள்.



## டாக்டருக்கு நீச்சல் பயிற்சி

உடல் சரியில்லாத நிலையில் இருந்தார் ஒருவர். அந்த நிலையில் அவர் குடும்பத்தினர், ஆற்றைக் கடந்து அக்கரையில் இருந்த ஒரு மருத்துவரை அழைத்து வந்து அவருக்கு மருத்துவம் செய்யும்படி கேட்டுக்கொண்டனர். மருத்துவர் மருந்துகளைக் கொடுத்தார்.

அவரது மருத்துவம் சரியில்லாததாலோ, அல்லது அந்த நோயாளியின் விதி முடிந்ததாலோ அவர் இறந்து விட்டார்.

ஆனால், அவரது குடும்பத்தினர் மருத்துவர்தான் நோயாளியைக் கொன்றுவிட்டார் என்று கூறி அவர் மீது கோபம் கொண்டார்கள். அவரை ஒரு கம்பத்தில் கட்டிப் போட்டுத் துன்புறுத்தினார்கள்.

இரவில் மருத்துவர் எப்படியோ கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு தப்பி ஓடி, ஆற்றிலே குதித்து, நீச்சலடித்து அதிக சிரமத்துடன் வீடு வந்து சேர்ந்தார்.

அப்போது வீட்டில் அவர் மகன் மருத்துவப் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருந்தான். மருத்துவர் அவனிடம்''மகனே, மருத்துவர் ஆக வேண்டுமெனில் முதலில் நீந்தக் கற்றுக்கொள். பிறகு மருத்துவப் புத்தகத்தைப் படிக்கலாம்'' என்றார்!

## உண்மையான வயது

முன் காலத்தில் சீனாவில கல்யாணத்திற்கு முன், மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்கும் வழக்கமில்லை. பெற்றோர் பார்த்தால் சரி; திருமணம் நடந்து விடும். திருமணத்தின் போதுதான் பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வார்கள்.

இப்படி இருக்கையில் ஒரு மாப்பிள்ளை திருமணத்திற்குப் பின் தன் மனைவியைப் பார்க்கிறார். அவள் தன்னை விட அதிக வயதுடையவளாக இருப்பாள் போலத் தோன்றுகிறது.



அவளிடம், ''உன் வயது என்ன?'' என்று கேட்கிறார். அவள், ''நாற்பத்து ஐந்து'' என்கிறாள். அவர் அதிர்ச்சியுடன் ''உன் பெற்றோர் உனக்கு முப்பத்தி எட்டு என்று தானே கூறினர்?'' என்கிறார்.

ஆனால் அவளோ, ''உண்மையில் சொல்லப் போனால் எனக்கு ஐம்பத்தி நாலு வயதாகிறது'' என்கிறாள்.

அவர் மேலும் அதிர்ச்சி யடைகிறார். ஆனால், அவர் அவளுக்கு ஐம்பத்தி நாலு வயது என்பதையும் நம்ப மறுக்கிறார். எப்படியும் அவள் வாயாலேயே அவளின் உண்மையான வயதை வெளிவரவைக்க வேண்டும் என நினைக்கிறார்.

இரவு படுக்கு முன்பு, அவர் அவளிடம், ''நான் போய் உப்பு ஜாடியை மூடிவிட்டு வருகிறேன். இல்லாவிட்டால் எலி வந்து உப்பைத் தின்றுவிடும்'' என்று கூறுகிறார்.

உடனே அவர் மனைவி, ''என்ன! எலி உப்பைத் தின்னுமா? நான் கேள்விப்பட்டதே இல்லையே! என்னுடைய அறுபத்து எட்டு வருஷ வாழ்க்கையிலே இன்றுதான் முதல் தடவையாகக் கேள்விப்படுகிறேன்'' என்றாள்.

உடனே அவருக்கு அவளுடைய உண்மையான வயது தெரிந்து விட்டது.

## குடிப்பதற்கா? குளிப்பதற்கா?

சீனாவில் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்த சன் என்பவர் தன் நண்பரை ஒருமுறை தன் வீட்டுக்கு அழைத்து வந்தார். டீ சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று கூறினார். ஆனால், அச்சமயம் வீட்டில் தேயிலைத் தூள் இல்லை. சன்னின் மனைவி வேலைக்காரனை அனுப்பி அருகில் யாரிடமாவது தேயிலைத் தூள் வாங்கி வரும்படி கூறினாள்.

அவள் பல தடவைகள் தண்ணீர் ஊற்றி ஊற்றி வெந்நீர் ஆக்கிக் கொண்டே இருந்தாள். ஆனால் தேயிலைத் தூள் வாங்கப் போனவனோ வரவில்லை. எனவே சன்னின் மனைவி கணவனிடம் கூறினாள்: ''உங்கள் நண்பரை குடிக்கச் சொல்வதற்கு பதில் வெந்நீரில் குளிக்கச் சொல்லலாம். குளிப்பதற்குத் தேவையான வெந்நீர் தயாராகி விட்டது!''





## குழாய்க்குள் பந்து

ஒரு சிறிய கிராமத்தில் என்போ என்னும் சிறுவன் வாழ்ந்து வந்தான். அவன் புத்திகூர்மையும் திறமையும் உள்ளவன்.

ஒருநாள் சில சிறுவர்களுடன்சேர்ந்து அவன் பந்து விளையாடிக் கொண்டிருந்தான். அந்தப் பந்து ஒரு நீண்ட குழாயின் மேல் பக்க ஓட்டை வழியாக உள்ளே விழுந்து அடியில் போய் விட்டது. என்போவைத் தவிர அனைவரும் 'இனிமேல் பந்து கிடைக்காது. அந்தக் குழாய்க்குள் போனது போனது தான்!' என்று நினைத்தனர்.

ஆனால் என்போ ஓடிப்போய் ஒரு வாளியில் தண்ணீர்கொண்டு வந்தான். மற்றக் குழந்தைகள் 'என்போ என்ன செய்யப் போகிறான்?' என்று ஆர்வத்துடன் பார்த்தனர். அவன் கொண்டு வந்த தண்ணீரைக் குழாயில் ஊற்றினான். அவன் தண்ணீரை ஊற்ற ஊற்ற அந்தப் பந்து குழாயின் மேல் மட்டத்திற்கு மிதந்து வந்தது. குழந்தைகள் விளையாடப் பந்து கிடைத்து விட்டது!

## படிப்புக்கு வெளிச்சம்

சீனாவின் ஒரு பகுதி மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் மிகுந்த வறுமையில் வாடினார்கள். இருட்டிய பிறகு விளக்கேற்றக் கூட வசதி யில்லாதவர்கள்.

அப்பகுதியில் காங் என்னும் சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குத் தேர்வு நெருங்கி விட்டது. விளக்கில்லாததால் இருட்டிய பிறகு படிக்க முடியவில்லை.

காங்கிற்கு, விளக்குப் பூச்சிகள் என்று கூறுவோமே மின் மினிப் பூச்சிகள், அவை மெல்லிய ஒளியைக் கொடுப்பது நினைவுக்கு வந்தது. எனவே அவன் நிறைய மின்மினிப் பூச்சிகளைப் பிடித்து வந்து ஒரு கண்ணாடிப் புட்டியில் போட்டு அடைத்துவைத்தான். அதனால் கிடைத்த ஒளி அவன் இரவில் படிப்பதற்குப் போதுமானதாக இருந்தது.

கோகுலத்தின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும்
எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

# ஸ்ரீ மீனாக்ஷி டிரஸ்ட்

( Regd. )


(கல்கி, மங்கையர் மலர் சென்னை நகர விநியோகஸ்தர்கள்)

3, மங்கேஷ் தெரு, தியாகராயநகர், சென்னை–600 017

தொலைபேசி PBX 442927

எங்களது இதர நிறுவனங்கள் :

★ எஸ். அப்பாஸ்வாமி ரியல் எஸ்டேட்
★ ஸ்ரீனிவாசா ரியல் எஸ்டேட்
★ ஸ்ரீ சக்தி ஃபைனான்ஸ்
★ ஸ்ரீ மீனாக்ஷி ஃபைனான்ஸ்
★ ஸப்தகிரி புக் ஷாப்
★ ரவி ஐஸ் கிரீம்ஸ்
★ ரவி ராம் பில்டர்ஸ்
★ ஸ்ரீ வித்யா இன்வெஸ்ட்மெண்ட்ஸ்



# உதவாத டெலிபோன்

அழ. வள்ளியப்பா

அந்த வட்டாரத்திலே கார்த்திகேயர்தான் பெரிய பணக்காரர். அவருடைய மாளிகை மிக மிகப் பெரிதாயிருக்கும். ஏராளமான செலவில் அவர் அதைக் கட்டி வைத்திருந்தார். அதன் உள்ளே எல்லா விதமான வசதிகளும் இருந்தன. டெலிவிஷன், ரேடியோ, டெலிபோன், பனிப்பெட்டி, மெத்தை போட்ட நாற்காலிகள், மின்சார விசிறிகள், அலங்காரப் பொம்மைகள் யாவும் இருந்தன.

அவருடைய மாளிகையில் இவ்வளவெல்லாம் இருந்தும் அவருடைய நெஞ்சிலே கொஞ்சமேனும் ஈரம் இல்லை. ஏழைகள் என்றாலே மனித இனத்தைச் சேர்ந்தவர்களில்லை என்பது அவருடைய நினைப்பு. மறந்தும் அவர் பிறருக்கு உதவ மாட்டார். தம்மைப் பொறுத்த வரையில் நன்றாக உண்பார்; உடுப்பார்; உறங்குவார்.

ஒரு நாள் இரவு மணி ஏழு இருக்கும்.

அந்தத் தெருக்கோடி வீட்டிலிருந்து ஒருவர் வேகமாகக் கார்த்திகேயரின் மாளிகையை நோக்கி வந்தார். மாளிகை வாசலுக்கு வந்ததும் ஒரு நிமிஷம் நின்றார். பிறகு, தயங்கித் தயங்கி உள்ளே சென்றார். அப்போது ''யாரது?'' என்ற குரல் மிகவும் அதிகாரத்துடன் கேட்டது. அது வேறு யாருடையதுமல்ல; கார்த்திகேயருடையதுதான்!

''ஐயா! என் குழந்தைக்கு இரண்டு நாளாக ஜுரம். இப்போது உடம்பு அனலாய்க் கொதிக்கிறது. குழந்தை கண் திறக்கவில்லை...'' வந்தவர் முழுவதையும் கூறுவதற்குள், ''அதற்கென்ன? இங்கே யாசகம் கேட்க வந்துவிட்டாயா? போ, போ. வேறு வேலை இல்லை'' என்று எரிந்துவிழுந்தார் கார்த்திகேயர்.

''யாசகம் கேட்க வரவில்லை. தயவு செய்து என் பேச்சைக் கேளுங்கள். எனக்குத் தெரிந்த ஒரு டாக்டர் இருக்கிறார். அவரிடம் டெலிபோனில் தகவலைச் சொன்னால் உடனே வந்துவிடுவார். அதனால் கொஞ்சம் டெலிபோன்...''

''சரிதான். டெலிபோனில் பேச வேண்டுமா? அதெல்லாம் முடியாது. இன்று உனக்குக் கொடுத்தால் நாளைக்கு இன்னொருவன் வந்து கேட்பான். அதெல்லாம் கெட்ட பழக்கம். முடியாது. இது என்ன, பொது டெலிபோனா கண்டவனெல்லாம் உபயோகப்படுத்த?''

''அப்படிச் சொல்லக்கூடாது. ஆபத்துச் சமயம். குழந்தை இருக்கிற நிலையிலே, இந்த நேரத்திலே வெளியிலே எடுத்துப் போக யோசனையாயிருக்கிறது. தயவுசெய்து...''

''தயவாவது செய்யறதாவது? குயவன் பானை சட்டி செய்கிறானே, அதைப் போலே என்னைத் தயவு செய்யச் சொல்கிறாயா? முடியாது. வீணாகத் தொந்தரவு செய்யாதே. அப்படி அவசரமாயிருந்தால் மூணாவது தெருவிலே இருக்கிறதே பொது டெலிபோன், அங்கே போய்ப் பேசு'' என்று கூறி வெளியில் அனுப்பிவிட்டார் கார்த்திகேயர்.

பாவம், பக்கத்திலே வேறு டெலிபோன் எதுவும் இல்லாததால், அந்த மனிதர் மூன்றாவது தெருவுக்கு ஓடினார். அங்குள்ள பொது டெலிபோன் உதவியால் டாக்டரை வரவழைத்துக் குழந்தையைக் காட்டினார். நல்ல காலம், கார்த்திகேயர் தயவு இல்லாமலே குழந்தை பிழைத்துக் கொண்டது!

அன்று நடு இரவு.

பின் தெருவிலிருந்து ஒரு சிறுவன் வியர்க்க விறுவிறுக்க ஓடோடிவந்தான். கார்த்திகேயரின் மாளிகையை அடைந்தான். ''ஐயா, ஐயா'' என்று கத்தினான். பலமாகக் கதவைத் தட்டினான். முன் அறையில் தூங்கிக் கொண்டிருந்த கார்த்திகேயர் பரபரப்புடன் எழுந்தார். விளக்கைப் போட்டு, கம்பிக் கதவுகளின் இடைவெளி வழியாக அந்தச் சிறுவனைப் பார்த்தார்.


''ஐயா! கொஞ்சம் கதவைத் திறவுங்கள், டெலிபோன் செய்ய வேண்

டும்; அவசரம்'' என்று துடித்துக் கொண்டே கூறினான்.

''உனக்கு அவசரமாக இருந்தால் எனக்கென்னடா? போ, போ. ஊரிலே இருக்கிறவனுக்கெல்லாம் இந்த டெலிபோன்தான் அகப்பட்டதாக்கும்?பேசாமல் மூணாவது தெருவுக்குப் போய் அங்கே இருக்கிற பொது டெலிபோனில் பேசு'' என்று உபதேசம் செய்தார் கார்த்திகேயர்.

''ஐயோ, அடுத்த தெருவிலே ஒரு வீட்டிலே தீப்பிடித்துக் கொண்டது. உடனே தீயணைக்கும் படைக்குப் போன் பண்ண வேண்டும். என்னை அனுமதிக்காது போனாலும், நீங்களாவது சீக்கிரம் தகவல் கொடுத்தால் உபகாரமாயிருக்கும். ஐயா, உங்களுக்குக் கோடி புண்ணியம்'' என்று கெஞ்சினான் சிறுவன்.

''டேய், வீணாக என்னை இந்த நேரத்தில் தொந்தரவு செய்யாதே. நீ சொன்னபடி செய்வதற்கு நான் என்ன, நீ வைத்த ஆளா? அடுத்த தெருவிலே நெருப்புப் பிடித்தால் எனக்கென்ன? போ, போ. இங்கே நிற்காதே'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் கார்த்திகேயர்.



சிறுவன் சிறிது நேரம் கெஞ்சிப் பார்த்தான். அவர் மனம் இளகவில்லை. சிறுவனுக்கு அதற்கு மேலும் அங்கு நிற்க மனமில்லை. கால தாமதம் ஆகக் கூடாதே என்று மூன்றாவது தெருவுக்கு ஓடினான்.

இதற்குள் தீப்பிடித்த வீட்டிலிருந்து நெருப்பு வேகமாகப் பரவ ஆரம்பித்தது. அந்த வரிசையிலிருந்த நான்கைந்து வீடுகளிலும் நெருப்புப் பற்றிக் கொண்டது. அந்த வீடுகளிலிருந்தவர்களெல்லாம் 'ஐயோ முறையோ' என்று கத்திக் கொண்டு, குழந்தைகளையும் முக்கியமான சாமான்களையும் தூக்கிக் கொண்டு வெளியேறினார்கள். நெருப்

பணைக்கும் படை வராததனால் அவர்களே கிணற்றிலிருந்தும், குழாயிலிருந்தும் குடம் குடமாகத் தண்ணீரை எடுத்துவந்து நெருப்பைஅணைக்க முயன்றார்கள். நிலைமை முற்றிவிட்டதால், சுலபமாக அணைக்க முடியவில்லை.


அதே சமயம், கார்த்திகேயரது வீட்டின் பின் பகுதியிலிருந்து ''ஐயோ, தீ! தீ!'' என்ற அலறல் கேட்டது. கார்த்திகேயர் திடுக்கிட்டு எழுந்தார். பின் பகுதியில் தூங்கிக் கொண்டிருந்த அவரது மனைவி, மக்கள், வேலைக்காரர்கள் எல்லாரும் ஓடி வருவது கண்டு ''என்ன? தீயா!'' என்று திகிலுடன் கேட்டார்.

''ஆமாம். பின் தெருவிலே பற்றிக் கொண்டது போலிருக்கிறது. நம் வீட்டு வைக்கோல் போரில் பிடித்து வீட்டுக்குள்ளேயும் வந்து விட்டது. ஐயோ, மாளிகை பற்றி எரிகிறதே!'' என்று கூச்சலிட்டார்கள் அவர்கள்.

உடனே கார்த்திகேயருக்கு அந்தச் சிறுவன் சொன்னது நினைவுக்கு வந்தது. டெலிபோனில் நெருப்பணைக்கும் படையினரைக் கூப்பிட நினைத்தார். அதற்குள் இரும்புப் பெட்டி நினைவு வந்து விட்டது. உடனே இரும்புப் பெட்டி இருந்த அறையை நோக்கி ஓடினார். ஆனால், அறைக்குள் நுழையப் போகும் சமயம் 'சடசட'வென்று நெருப்புப் பொறிகள் கிளம்பும் சத்தம் கேட்டது. 'குபீர், குபீர்' என்றுபயங்கரமாக நெருப்புச் சுடர்கள் பற்றி எரிவது தெரிந்தது. பின் பகுதியின் ஒரு பாகம் மடேர் என்று இடிந்து விழுந்தது. அறைக்குள் நுழைந்தால் உயிருக்கே ஆபத்து என்று நினைத்து மனைவி மக்களுடன் அவரும் வெளியேறிவிட்டார்.

மூன்றாவது தெருவுக்கு ஓடிய சிறுவன் பொது டெலிபோனில் தகவலை அறிவிக்க முயன்றான். அந்த டெலிபோனில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருந்ததால் அது சரியாக வேலை செய்யவில்லை. இருதயம் உள்ள மனிதனுக்கே அவசரத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லையே, அது எப்படிப் புரிந்து கொள்ளும்? 'சரி, இதையும் நம்பிப் பயனில்லை' என்று அந்தச் சிறுவன் எண்ணினான். நேராகக் குடல் தெறிக்க நெருப்பணைக்கும் படை இருக்கும் இடத்தை நோக்கி ஓடினான். தகவலை அறிவித்தான். உடனே அந்தப் படை புறப்பட்டது.

மணியை அடித்துக் கொண்டு வெகு வேகமாக நெருப்பணைக்கும் படையினர் அங்கு வந்தனர். அவர்கள் வந்து சேருவதற்கும், கார்த்திகேயரின் மாளிகை முழுவதும் பற்றி எரிவதற்கும் சரியாக இருந்தது!

## குவலயத்தில் "கோகுலம்" ஓங்குக!

### லிப்கோவின் வாழ்த்து :

கோவர்த் தனம்எடுத்த கோவே! குழல்ஊதி
ஆவர்க்கம் காத்த அரணியனே!—நீ வளர்ந்த
கோகுலமே போலக் குவலயத்தில் ஓங்க அருள்
கோகுலம் பார்புகழக் கூர்ந்து


சிறுவருக்கேற்ற சிறிய **லிப்கோ** வெளியீடுகள் :

| | ரூ.பை |
|---|---|
| 1. திருவிளையாடற் புராணம் (சுருக்கம்) | 1-50 |
| 2. பெரிய புராணம் (சுருக்கம்) | 1-50 |
| 3. திருப்புகழ் மஞ்சரி | 2-00 |
| 4. குறள் மணிக்கதைகள் புத்தகம் 1 | 1-50 |
| புத்தகம் 2 | 2-00 |
| 5. ஆனந்தனின் ஆசை | 2-25 |
| 6. நல்ல கதைகள் | 1-25 |
| 7. வள்ளுவர் வாய்மொழி (குறள் மூலம்) | 1-50 |
| 8. அடிப்படை இலக்கணம் 6, 7, 8 வகுப்புகளுக்கு | 1-60 |
| 9, 10 ,, | 1-80 |
| 9. ANCIENT FAMOUS FABLES Panchatantra X Other Fables each | 1-40 |
| 10. FAIRY TALES OF YORE each | 1-40 |
| 11. LIFCO TINY DICTIONARY (Eng. – Eng. – Tamil) | 4-50 |

பதிப்பகத்தார் :

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,** சென்னை-600 017

லிப்கோவின் திருச்சி விற்பனை நிலையம் :
17/1, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620 002
எம். தாமோதரம் & கம்பெனி, 108 கார்ப்பரேஷன் பழக்கடை, சென்னை-600 108
மற்றும் உள்ளூர் புத்தகக் கடைகளிலும்,
ஹிக்கின்பாதம்ஸ் ரெயில்வே ஸ்டால்களிலும் கிடைக்கும்.




## தரங்கம் பாடித் தங்கப் புதையல்

சென்ற மாதம் நேரு பிறந்த நாளில் என் அப்பா என்னை ராஜாஜி மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே பெரிய புத்தகக் காட்சி நடந்தது. அந்தக் காட்சியிலே நான் சொன்ன நாலு புத்தகங்களை என் அப்பா எனக்கு வாங்கித் தந்தார். அதிலே ஒரு புத்தகத்துக்குத் 'தரங்கம்பாடித் தங்கப் புதையல்' என்று பெயர். அது குழந்தைகள் தினமான அன்றுதான் வெளி வந்தது என்று சொன்னார்கள்.

இந்தப் புத்தகத்தை எழுதியவர் பெ. தூரன். இவருடைய பல புத்தகங்களை நான் முன்பே படித்திருக்கிறேன். கொள்ளிமலைக் குள்ளன், சங்ககிரிக் கோட்டையின் மர்மம் என்ற இவரது கதைகளில் வருகிற அதே தங்கமணி, சுந்தரம், கண்ணகி மூவரும் இந்தக் கதையிலும் வருகிறார்கள்.

தங்கமணி சரித்திரப் பேராசிரியர் வடிவேலுவின் மகன். கண்ணகி அவன் தங்கை. சுந்தரம் அவனுடைய அத்தை மகன்.

தங்கமணி துப்பறிவதிலே கெட்டிக்காரன். சுந்தரம் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். கண்ணகி மிகவும் பயந்த குணம் உடையவள். இந்த மூன்று பேருடன் ஜின்கா என்ற குரங்கும் சேர்ந்து கொள்கிறது.

சுந்தரத்திடம் ஒரு பைனகுலர்ஸ் இருக்கிறது. தங்கமணிக்கு அவன் அப்பா ஒரு புதுமையான கருவியைப் பரிசாகக் கொடுத்திருக்கிறார், அதற்குப் பெயர் உலோகக் கண்டுபிடிப்பான். ஜின்கா என்ற அந்தக் குரங்கைத் தங்கமணி நன்றாகப் பழக்கி வைத்திருக்கிறான்.

தங்கமணி தரங்கம்பாடி கோட்டைக்குள்ளிருக்கும் மாசிலாநாத சுவாமி கோயிலைத் துப்பறிகிறான். மற்றவர்களின் உதவியுடன் அங்கே புதைப்பட்டிருந்த பழங்காலத்து நாணயங்களையும், நவமணிகளையும் கண்டு பிடிக்கிறான். அத்துடன் ஒரு திருட்டு 'ஜிப்ஸி' கூட்டத்தையும் போலீஸில் அவர்கள் பிடித்துக் கொடுத்து விடுகிறார்கள்!

தரங்கம்பாடிக் கோட்டை, அங்கே வாழ்ந்த டேனிஷ் துரை, உப்பனாறு என்ற உப்புத் தண்ணீர் ஓடும் ஆறு, ஒழுகைமங்கலம் திருவிழா—இவைகளைப் பற்றியெல்லாம் படிக்கப் படிக்கச் சுவையாக இருக்கிறது.

இப்புத்தகத்தை வெளியிட்டவர்கள் வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை விலை ரூ. 2.50.

—என். சூர்யமூர்த்தி, சென்னை-17

## விளையாட்டுப் பிள்ளை

பெயரைப் பார்த்தவுடனே யாரோ ஒரு விளையாட்டுப் பையனைப் பற்றித்தான் இருக்கும் என்று முதலில் நினைத்தேன். பிறகு அட்டையில் இருக்கும் கண்ணன் படத்தைப் பார்த்ததும், 'ஓஹோ, கண்ணன் செய்த லீலைகளைப் பற்றித்தான் இருக்கும்' என்று எண்ணினேன். புத்தகத்தைக் கையில் எடுத்துப் படித்தேன்.

சோமு என்ற பையன் விடுமுறையில் சென்னைக்கு வருகிறான். மாமா வீட்டில்

தங்குகிறான். மாலை நேரத்தில் கடற்கரைக்குத் தினமும் செல்கிறான். ஒரு நாள் அவன் அப்படிச் செல்லும்போது சில சிறுவர்களுடன் விளையாடுகிறான். அப்போது அவர்கள் செய்த குறும்புகள் அவனுக்குப் பிடிக்கவில்லை.

விளையாட்டு முடிந்ததும் சோமு, அவர்கள் செய்த குறும்புகளை நினைத்துக்கொண்டே அங்கிருந்த பாரதியார் சிலைக்கு அருகில் வருகிறான். அங்கே உட்காருகிறான்.

அப்போது ''தம்பி'' என்ற குரல் கேட்கிறது. சுற்று முற்றும் பார்க்கிறான். யாரையும் காணோம்! விழிக்கிறான்.

''தம்பி, நான்தான் பாரதி. நான் தான் உன்னைக் கூப்பிட்டேன்.'' என்று அந்தச் சிலை பேச ஆரம்பிக்கிறது.

## ஓசிப் பயணம்!

**மு. வை. அரவிந்தன்**

தேர்தல் காலம் வந்தது
தெருவில் எங்கும் அமர்க்களம்!

தேர்தல் சின்னம் பலவிதம்
தெரியுது பார் சுவரிலே.

கட்சித் தொண்டர் கூட்டமாய்க்
காரில் ஏறி வருகிறார்.

வெற்றி பெறவே நினைப்பவர்
வீடு தேடி வருகிறார்.

வந்து, வணக்கம் செய்கிறார்;
வாக்குக் கேட்டுச் சிரிக்கிறார்;

துன்பமெல்லாம் போக்கிடத்
தொண்டு செய்வேன் என்கிறார்.

உறுதி மொழிகள் தருகிறார்;
ஓட்டுப் போடச் சொல்கிறார்.

கம்பங்களிலே உச்சியில்
கட்சிக் கொடிகள் பறக்குது.

விளம்பரங்கள் தட்டியில்
வெளியில் எங்கும் தொங்குது.

ஓய்வு ஒழிவு இன்றியே
ஒலி பெருக்கி அலறுது.

ஓசி வண்டிப் பயணமும்
உண்டு தேர்தல் காலத்தில்.

ஓசிப் பயணம் எனக்கில்லை.
ஏன்?
ஓட்டுப் போடும் வயதில்லை!



''அந்தப் பையன்கள் செய்த குறும்புகளைப் பற்றித்தானே நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இதெல்லாம் என்ன குறும்புகள்! என் கண்ணன் செய்த குறும்புகளைக் கூறட்டுமா?'' என்று கேட்டு, கண்ணன் செய்த குறும்புகளை ஒவ்வொன்றாகப் பாரதியார் கூறுகிறார். சோமு ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருக்கிறான்.

மறுநாள் மாலை, கண்ணன் எப்படி அவருக்குத் தோழனாக இருந்தான் என்பதைக் கூறுகிறார். இப்படியே தினமும் கண்ணன் எப்படி எப்படி யெல்லாம் இருந்தான், என்னென்ன செய்தான் என்று கூறுகிறார். கண்ணன் அவருக்குக் குழந்தையாக, தாயாக, தந்தையாக, குருவாக, தெய்வமாக, சீடனாக, சேவகனாகப் பல மாதிரி இருந்ததை யெல்லாம் கூறுகிறார். கேட்கக் கேட்க சோமுவுக்கு ஆனந்தமாக இருக்கிறது; ஆச்சரியமாகவும் இருக்கிறது.

சோமுவின் விடுமுறை முடிவதற்கு முதல் நாள் பாரதியார், வழக்கம்போல் பேச்சை முடிக்கிறார். பிறகு, ''சரி, நாளைக்கு வா' என்கிறார்.

''இல்லை மாமா. நாளை வரமாட்டேன். ஊருக்குப் போக வேண்டும். அடுத்த விடுமுறையில் வரும்போது எனக்கு என்ன சொல்லித் தருவீர்கள்?'' என்று கேட்கிறான் சோமு.

''கண்ணன் சொன்ன பகவத்கீதையைக் கூறுகிறேன்'' என்கிறார் பாரதியார்.

பாரதியாருடைய நூற்றாண்டு விழாவிலே இந்தப் புத்தகம் வெளிவந்திருக்கிறது.

'கண்ணன்— என் குழந்தை', 'கண்ணன் என் தோழன்', 'கண்ணன் என் சேவகன்' என்று பாரதியார் பாடிய பாடல்களை அவரே நேரில் பேசுவது போல், பால நடராஜன் அவர்கள் எழுதியிருக்கிறார்.

இந்தப் புத்தகத்தைப் படித்த பிறகு பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' படித்துப் பார்த்தேன். மிக நன்றாகப் புரிந்தது. புரிந்து கொண்டு படித்தேன். நன்றாக ரசித்தேன்.

உள்ளே படங்கள் இல்லாது போனாலும், பெரிய எழுத்தில் மிக நன்றாக அச்சுப் போட்டிருக்கிறார்கள்.

இதை வெளியிட்டவர்: கயல் பதிப்பகம், தேவகோட்டை. கிடைக்கும் இடம்: அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை. விலை ரூ. 3.50.

—ஏ. ஆர். ஆனந்த், விருதுநகர்

இளைஞர்கள் இவர்கள்



■ விநோபாஜி



■ திரு. வி. க



■ கோகலே



■ ராமானுஜம்

## விநோபாவின் கேள்வி

● விநோபாஜிக்கு அவருடைய தாய் தந்தை வைத்த பெயர் 'விநாயக்'. அவர் பள்ளியில் படிக்கும்போது வெறும் பாடப் புத்தகங்களை மட்டும் படிக்க வில்லை. நல்ல நல்ல புத்தகங்களையும் தேடிப் பிடித்துப் படிப்பார்.

ஒரு நாள் விநோபாவின் தாயார் ருக்மிணி தேவியார், ''விநாயக், 'பக்த விஜயம்' புத்தகத்தை நீ படிக்கணும். நான் கேட்கணும். ஆசையா யிருக்கு'' என்றார்.

உடனே விநோபா 'பக்த விஜயம்' புத்தகத்தை எடுத்து வந்து படித்துக் காட்டினார். அப்போது அதில் பெரிய மகான்களைப் பற்றி அடிக்கடி வந்தது.

விநோபா படிப்பதை நிறுத்திவிட்டு, ''ஏனம்மா, இதில் வருகிறார்களே மகான்கள், அவர்களைப் போல் இக் காலத்திலும் இருக்கிறார்களா?'' என்று கேட்டார்.

''நிச்சயம் இருப்பார்கள். அப்படிப் பட்ட மகான்கள் இல்லாது போனால் இந்த உலகம் இயங்காது'' என்றார் அம்மா.

மகாத்மா காந்தியை முதல் முத லாகச் சந்தித்தபோது, அம்மா சொன் னது விநோபாவின் நினைவுக்கு வந்தது. ''ஆ! அன்று அம்மா சொன்னது சரி தான். இதோ ஒரு மகானைக் கண்டு விட்டேன்'' என்று மகிழ்ச்சி யடைந் தார்.

பிறகு அதே விநோபாவும் ஒரு மகா னாகிவிட்டார்!

## பாம்புக்குப் பயப்படாத திரு. வி. க.

● திரு வி. கலியாணசுந்தரனார் சிறி யவராயிருந்தபோது எதற்கும் பயப்பட மாட்டார். பயம் என்றால் 'அது என்ன?' என்று கேட்பார்.

மரத்தில் ஏறிக் கீழே தாவுவார்; மடுவிலே குதித்து விளையாடுவார்;

சிலம்பம் ஆடுவார்; தண்டால், தோப்புக் கரணமெல்லாம் போடுவார். பள்ளிக் கூட விளையாட்டுப் போட்டிகளிலும் நிறையப் பரிசுகள் வாங்குவார்.

ஒரு நாள் அவருடைய ஊருக்கு ஒரு பாம்பாட்டி வந்தான். அவன் தோள் மீது பாம்பைப் போட்டுக் கொண்டுவீடு வீடாகச்சென்றான். பாம்பைக் காட்டிக் காட்டி அரிசியும் காசும் வாங்கினான். அவன் பின்னாலே வேடிக்கை பார்த்துக் கொண்டு திரு வி. க. வும் போனார்.

பாம்பாட்டி ஓரிடத்தில் உட்கார்ந்து மகுடி வாசித்தான். உடனே பாம்பு மகுடிச் சத்தத்துக்கு ஏற்றபடி படம் எடுத்து ஆடிற்று.

சிறுவனாக இருந்த திரு வி. க. அந்தக் காட்சியைச் சிறிது நேரம் கவனமாகப் பார்த்தார். பிறகு 'சட்'டென்று பாம்பின் பின்புறம் ஓடினார். அதன் வாலைத் தன் காலால் மிதித்தார். நல்லவேளை, பாம்பு ஆடிக் கொண்டே இருந்தது. அவரை ஒன்றும் செய்யவில்லை!

—இப்படி இளமையில் சுட்டிப் பையனாக இருந்த திரு வி. க. பிற்காலத்தில் பரம சாதுவாக மாறிவிட்டார். அவருடைய அச்சகத்திற்கு அவர் வைத்த பெயர்: 'சாது அச்சுக் கூடம்!'

## கோகலேயின் சிக்கனம்

● கோபாலகிருஷ்ண கோகலே உயர் நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு வயது 13. அப்பா இல்லை. அண்ணாவும் மிகக் குறைந்த சம்பளத்தில் ஒரு வேலையில் இருந்தார்.

கோகலே பிறந்த கிராமத்திலே உயர்நிலைப் பள்ளி இல்லாததால் சிறிது தூரத்தில் இருந்த நகருக்குச் சென்று அங்கேயே தங்கிப் படித்தார். அவருடைய அண்ணா அவருக்கு மாதா மாதம் ஏழு ரூபாய் அனுப்புவார். அந்த ரூபாயில்தான் பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட வேண்டும். உணவு விடுதிக்கும் கொடுக்க வேண்டும். கோகலே மிகவும் சிக்கனமாகச் செலவு செய்து, அக்கறையோடு படித்து வந்தார்.

ஒரு நாள் மாலை அவருடைய நண்பர் வந்து, "டேய் கோபால், நம் நகரிலே அருமையான ஒரு நாடகம் நடக்கிறது. வா, போய்ப் பார்க்கலாம்" என்றான்.

கோகலே, 'வேண்டாம். நீ போ. நான் வரவில்லை" என்றார். நண்பன் விடவில்லை. கடைசியில் அவனே தனக்கும் சேர்த்து டிக்கட் வாங்குவான் என்று நினைத்து அவனுடன் சென்றார். அவனே பணம் கொடுத்து இரண்டு டிக்கட்டுகள் வாங்கினான்.

ஆனால் மறுநாள் அந்த நண்பன் வந்து, "நேற்று உனக்காக அரை ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கினேன். அந்தப் பணத்தை எடு" என்றான்.

கோகலே இதைச் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. ஆனாலும் எதுவும் பேசாமல் தம் கையில் வைத்திருந்த அரை ரூபாயை அவனிடம் கொடுத்து விட்டார்.

அந்த மாதம் முழுவதும் அவர் வழக்கமாக வாங்கும் மண்ணெண்ணெயை வாங்கவில்லை. தெரு விளக்கிலேயே படித்து அந்த அரை ரூபாயைச் சரிக்கட்டினார்!

## படிக்கும்போதே பாடம் கற்றுக் கொடுத்தவர்!

● உலகப் புகழ் பெற்ற கணித மேதை இராமானுஜம், அப்போது கும்பகோணத்தில் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அவருடைய வீட்டில் வெளியூரைச் சேர்ந்த இரண்டு கல்லூரி மாணவர்கள் தங்கியிருந்தார்கள். அவர்களுக்குத் தங்குவதற்கு இடமும்கொடுத்துச் சாப்பாடும் போட்டார்கள். அதற்காக அந்த மாணவர்கள் மாதம் பத்து ரூபாய் கொடுத்து வந்தார்கள். அந்த ரூபாயில் சிறிது மிச்சம் பிடித்து அதிலே இராமானுஜத்தை அவரது பெற்றோர் படிக்க வைத்தார்கள்.

இராமானுஜத்திற்குச் சிறிய வயதிலே கணிதப் பாடத்தில் அளவில்லாத ஆர்வம் இருந்தது. நூல் நிலையத்துக்குப் போய்க் கணிதப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வருவார். அவற்றிலுள்ள கணக்குகளை யெல்லாம் போட்டுப் போட்டுப் பார்ப்பார். பல கணக்குகளுக்குச் சுலபமாக விடை கண்டு பிடித்து விடுவார்!

அவர் வீட்டில் தங்கியிருந்த இரு மாணவர்களும் பி.ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்த கணிதப் புத்தகத்தை வாங்கி அதிலிருந்த கணக்குகளைப் போட்டுப் பார்ப்பார். அவருடைய ஆர்வத்தைக் கண்டு அந்த மாணவர்களே கல்லூரி நூலகத்திலிருந்து பல கணித நூல்களைக் கொண்டு வந்து கொடுப்பார்கள்.

சில நாட்களில் அவர்களே இராமானுஜத்திடம் வந்து கணிதப் பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலானார்கள். உயர்நிலைப் பள்ளியில் படித்த இராமானுஜத்தின் கணிதத் திறமையைக் கண்டு கல்லூரி மாணவர்களே அசந்து போனார்கள்!

FOR PEOPLE WHO NEED NOTHING

But the Best **READYMADE** Garments

PLEASE VISIT OUR SHOW ROOMS



# BEST SHOP

## STYLE CENTRE

143, RAJA STEET, Phone: 22498 | 183, Oppanakara Street, Phone: 32759

**COIMBATORE-641 001**

VISIT OUR SISTER CONCERN **PRITI AGENCIES**

Stockists: ROMA SAREE PETTI COATS IN 60 COLOURS

## NATIONAL INTEGRATION LANGUAGE SERIES

**Through English**

| | |
|---|---|
| Learn Tamil | 6-50 |
| Learn Telugu | 6-50 |
| Learn Kannada | 6-50 |
| Learn Malayalam | 6-50 |
| Learn Sanskrit | 6-50 |
| Learn Hindi | 7-50 |
| Learn Bengali | 4-50 |
| Learn Marathi | 6-50 |
| Learn Punjabi | 7-50 |
| Learn Gujarathi | 7-00 |
| Learn Urdu | 7-50 |
| Learn Arabic | 9-75 |
| Learn Oriya | 4-50 |

**Through Hindi**

| | |
|---|---|
| Learn Tamil | 6-00 |
| Learn Telugu | 6-50 |
| Learn Kannada | 7-50 |
| Learn Malayalam | 6-50 |
| Learn English | 10-50 |

**Through Malayalam**

| | |
|---|---|
| Learn Tamil | 6-50 |
| Learn Telugu | 5-50 |
| Learn Kannada | 6-50 |
| Learn Hindi | 6-50 |
| Learn Sanskrit | 8-75 |
| Learn English | 10-50 |

**Through Tamil**

| | |
|---|---|
| Learn English | 11-50 |
| Learn Telugu | 6-00 |
| Learn Kannada | 6-50 |
| Learn Malayalam | 7-00 |
| Learn Hindi (Part 1) | 6-00 |
| Learn Hindi (Part 2) | 7-50 |
| Learn Sanskrit | 4-50 |
| Learn Bengali | 4-50 |
| Learn Marathi | 5-25 |
| Learn Punjabi | 4-50 |
| Learn Gujarathi | 6-50 |
| Learn Urdu | 6-50 |
| Learn Arabic | 7-50 |
| Learn Oriya | 4-50 |
| Learn French | 9-25 |
| Easy way to Speak English | 19-75 |
| Easy way to speak Hindi | 16-75 |

**Through Kannada**

| | |
|---|---|
| Learn Tamil | 6-00 |
| Learn Telugu | 5-50 |
| Learn Malayalam | 6-50 |
| Learn Hindi | 5-50 |
| Learn Sanskrit | 8-75 |
| Learn English | 9-50 |

**Through Marathi**


| | |
|---|---|
| Learn Tamil | 5-25 |

**BALAJI PUBLICATIONS**

103, PYCROFTS ROAD, MADRAS-600 014

# கூடைப்பந்து ஆடுவோம்

குன்றுமணி




விளையாட்டென்றால் உங்களுக்குப் படு குஷி! கூடைப் பந்து ஆடுவோமா? எப்படி ஆடணும்னு விழிக்கிறீர்களா?

கூடைப் பந்தாட்டத்திலே இரண்டு குழுக்கள் உண்டு. ஒவ்வொன்றிலும் ஐந்து விளையாட்டுக்காரர்கள். மைதானத்தில் ஐந்து ஆட்டக்காரர்கள் தவிர 'ஸப்ஸ்டிட்யூட்' ஆட்டக்காரர்களும் மைதானத்துக்கு வெளியே அமர்ந்திருப்பார்கள். மைதானத்தில்ஐந்து 'ஃபௌல்' செய்துவிட்டால் அந்த ஆட்டக்காரருக்குப் பிரதியாக அவர்கள் கலந்துகொள்ள வேண்டுமே! மேலும், ஐந்து பிரதி ஆட்டக்காரர்களில் சிலரை 'கோச்' மைதானத்தில் 'அனுமதி' பெற்று ஆட வைக்கவும் முடியும்.

கூடைப் பந்து களம் 25 மீட்டர் நீளமும் 14 மீட்டர் அகலமும் உள்ளதாக இருக்கும். இதன் எதிரெதிர் பக்கங்களில் கம்பங்கள் நட்டு அதில் சுமார் 2 மீட்டர் நீளமும், $1\frac{1}{4}$— மீட்டர் அகலமும் உடைய பலகைகளை இணைத்திருப்பார்கள். அந்தப் பலகைகளின் நடுவில் ஒரு வளையம் பொருத்தப்பட்டிருக்








கும். வளையத்தில் நைலான் இழையினால் வலை பின்னப்பட்டிருக்கும்.

கூடைப் பந்து ஆட்டக்காரர்கள் பந்தைத் தட்டி, எதிரிகள் கையில் கிட்டாமல் 'பாஸ்' செய்து எதிர்க் குழுவின் வளையத்தில் பந்தைப் போட்டுப் 'பாயிண்ட்' எடுப்பார்கள். தங்கள் பக்கம் உள்ள கூடையில் பந்து விழாமலும் தடுப்பார்கள்.

ஆட்டக்காரர்கள் அரை டிராயருடனும் பனியனுடனும் இருப்பார்கள். பனியனில் 'எண்' பெரிதாகப் பொறிக்கப்பட்டிருக்கும்.

கூடைப் பந்தாட்டத்துக்குத் தேவையானவை: ஸ்டாப் வாட்சுகள், முப்பது செகண்ட் கட்டத்தை அமுலாக்கக்கருவி, அதிகார பூர்வமான ஸ்கோர் ஷீட், ஸ்கோர் போர்டு, தப்பாட்டம் குறிக்க 1லிருந்து 5 வரை எண்களைப் பொறித்துள்ள அட்டைகள்!

ஆட்டத்தை நிர்வகிக்க ரெஃபரி, அம்பயர், டைம் கீப்பர், முப்பது செகண்ட் ஆபரேட்டர் இருப்பார்கள். நடுவர்கள் விசில், கை சமிக்ஞை மூலம் தங்கள் 'முடிவு'களைத் தெரிவிப்பார்கள்.

கூடையில் ஒரு தடவை பந்து விழுந்தால் எண்ணிக்கை இரண்டு! ஃப்ரீ த்ரோ செய்பவர்களுக்கு ஒரு 'பாயிண்ட்' கிடைக்கும்.

ஒரு பந்தயத்துக்கு இரு பகுதி நேரங்கள். ஒரு பகுதி நேரம் இருபது நிமிடங்கள் ஆகும்.

ஆட்ட விதிகளுக்குக் கட்டுப்பட்டுப் பந்தை வீசியோ, தட்டியோ, உருட்டியோ அல்லது நகர்த்தியோ ஆடலாம். பந்து காலில் ட்க்கூடாது. அதிகமான பாயிண்ட் எந்தக் குழு எடுக்கிறதோ அதுவே வென்ற குழு.

கூடைப்பந்தாட்டம் அமெரிக்காவிலுள்ள சர்வதேச கிறிஸ்துவக் கழகத்தில் ஜேம்ஸ் நெயிஸ்மித்தினால் உருவாக்கப்பட்டது. நெயிஸ்மித் மதப் பிரசாரகர். ஸ்பிரிங் பீல்டு கல்லூரியில் இவர் உடற்பயிற்சி ஆசிரியராகப் பதிவு செய்து கொண்டு பணியாற்றினார். ஜிம்னேசியத்தில்உள்ள கடுமையைக் குறைக்க ஒரு புது விளையாட்டு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நெயிஸ்மித் கூடைப் பந்தாட்டத்தைத் தோற்றுவித்தார். கால் பந்து, ஹாக்கி, மற்றும் பல விளையாட்டுக்களை அடிப்படையாக வைத்துத் தொடங்கப்பட்ட புது விளையாட்டு கூடைப் பந்து. ஆதிகாலத்தில் இந்தக் கூடைப் பந்தாட்டத்தில் ஐம்பது, நூறு பேர்கள் பங்கேற்றுக் குழப்பத்தை உண்டாக்கினார்கள். 1895ம் ஆண்டு இந்த விளையாட்டுக்கு ஒரு குழுவுக்கு ஐந்து பேர் போதும் என்று முடிவு செய்யப்பட்டது.

முதல் தேசியக் கூடைப் பந்தாட்டப் பந்தயம் 1897ல் நடைபெற்றது. இந்தப் பந்தயத்தை நிர்வகித்தவர்கள் அமெச்சூர் அதலெடிக் யூனியன். நியூ யார்க் நகரத்தின் ஒய். எம். சி. ஏ. குழு இந்தப் பந்தயத்தில் வென்றது.

அமெரிக்கர்களே கூடைப் பந்தாட்டத்தை ஒலிம்பிக் போட்டியில் சேர்ப்பதற்கு வழி வகுத்தவர்கள்.

1924ம் வருஷம் பாரிஸில் நடைபெற்ற எட்டாவது ஒலிம்பிக் போட்டியில் சர்வதேச எக்ஸிபிஷன் கூடைப் பந்தாட்டப் போட்டி நிகழ்ந்தது. இந்தப் போட்டியில், அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் பங்கேற்றன.

1932ம் வருஷம் கூடைப் பந்தாட்டத்துக்கென்று சர்வதேச அமெச்சூர் கூடைப்பந்தாட்டக் கழகம் உருவானது. 1936 பெர்லின் ஒலிம்பிக்கில் கூடைப் பந்தாட்டம் போட்டியாகச் சேர்க்கப்பட்டது. இருபத்திரண்டு நாடுகள் பங்கேற்ற ஒலிம்பிக் கூடைப் பந்தாட்டப் போட்டியில் அமெரிக்கர்கள் முதல் ஒலிம்பிக் சாம்பியனை ஆகும் பெருமை பெற்றார்கள். 1936லிருந்து 1972 வரை தொடர்ந்து ஒலிம்பிக்கில் அமெரிக்கர்களே சாம்பியன் பட்டம் பெற்றார்கள். 1972ல் மூனிக்கில் ரஷ்யர்கள் சாம்பியனை உருவானார்கள். ஆனால் 1976ல் அமெரிக்கா எட்டாவது தடவையாக ஒலிம்பிக் பட்டத்தைப் பெற்றது.

தங்கம் டீச்சரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அந்த டீச்சரின் பெயர் மட்டும் தங்கம் இல்லை. அவர்களே தங்கக் கட்டிதான். அவ்வளவு நல்லவர்கள். திண்டுக்கல்லிலிருந்து மாற்றி வந்து இரண்டு ஆண்டுகள்தான் ஆகின்றன. முதலில் வகுப்பு ஆசிரியையாக இருந்தார்கள். ஐந்தாம் வகுப்பிலிருந்து நான் ஆறாம் வகுப்புக்கு வந்ததும் அவர்களும் ஆறாம் வகுப்பு டீச்சராக வந்துவிட்டார்கள்.

''எல்லா டீச்சர்களும் அதே வகுப்பில் இருப்பார்கள். நான் மட்டும் பாஸ் பண்ணி மேல் வகுப்புக்கு வந்துவிட்டேன்'' என்று பள்ளிக்கூடம் திறந்த அன்று சொன்னார்கள். நிறைய வேடிக்கைக் கதைகள் சொல்லுவார்கள். சிரிக்கச் சிரிக்கப் பேசுவார்கள். வகுப்பு முடிந்த பிறகு நாங்கள் அவர்களைச் சுற்றிக் கொண்டிருப்பது வழக்கம். வகுப்பில் இருக்கும் மிக மக்கான மாணவிக்கும் புரிகிற வரையில் பாடத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். இதனால்

# பெயர் மட்டுமா தங்கம்?

ஜோதிர்லதா கிரிஜா



'டீச்சர்' என்றாலே பிடிக்காத மக்கு மாணவிகள்கூடத் தாங்களே விரும்பித் தங்கம் டீச்சரைத் தேடிப் போவார்கள்.

சில நாட்களில் பள்ளிக்கூடம் விட்டதும், நாங்கள் அவர்கள் வீட்டுக்குப் போய் கணக்கு, ஆங்கிலப் பாடங்களுக்காகத் தொந்தரவு பண்ணுவோம். முகம் சுளிக்காமல் சொல்லிக் கொடுப்பார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில்கூட கூட்டமாகப் போய்த் தொல்லை கொடுப்போம். டீச்சர் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு நில்லாமல் நிறைய நீதி போதனைக் கதைகளையும் சொல்லுவார்கள். கதைகளைச் சொல்லிவிட்டு, அதில் உள்ள நீதி என்ன என்பதை எங்களையே சொல்லச் சொல்லுவார்கள். ''மனிதர்கள் கெட்டிக்காரர்களாக இருப்பதைக் காட்டிலும் நல்லவர்களாக இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம்'' என்று அடிக்கடி சொல்லுவார்கள். சுருக்கமாகச் சொன்னால், தங்கம் டீச்சரிடம் போய் வருவது, கோவிலுக்குப் போய் வருவது போல் இருக்கும்.

டீச்சர் சொல்லும் கதைகளில் பெரும்பாலானவை ஏழைகளுக்கும், இல்லாதவர்களுக்கும் இருப்பவர்கள் கொடுத்து உதவ வேண்டும் என்பதை நீதியாகக் கொண்டிருக்கும். சாப்பாட்டுக்கு இல்லாமல் சின்ன வயதில் தாம் ரொம்பச் சிரமப்பட்டதாகச் சொல்லுவார்கள்.

ஒரு நாள் டீச்சரும் நானும் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தபோது, 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற சினிமாப்பலகை பெரிய அளவில் தியேட்டரின் வாசலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தோம். அது ஏதோ புதுப் படமாம்.

''சினிமாவுக் கெல்லாம் போவதுண்டா?'' என்று டீச்சர் கேட்டார்கள்.

''எப்போதாவது!'' என்றேன்.

''உங்களுக்கென்று எப்போதுதான் திரைப்படங்கள் வருமோ! அதுவரை நல்ல புத்தகங்களைப் படி. சினிமாவெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்....'' என்று சொல்லி விட்டு, ''வாழ்க்கை வாழ்வதற்காம்! என்ன தப்பான தலைப்பு!...'' என்று பெருமூச்சு விட்டார்கள்.

''ஏன் டீச்சர்'' என்று கேட்டேன்.

''வாழ்க்கை வாழ்வதற்கே என்றால் என்ன அர்த்தம் தெரியுமோ? அவரவர் நன்றாக வாழ்ந்து விட்டுப் போவதற்குத்தான் வாழ்க்கை என்றுதான் அர்த்தமாகிறது. இது ஒரு கொள்கையா? இதற்கு ஒரு சினிமாவா?... வாழ்க்கை என்பது வாழ்விப்பதற்கே! அதாவது முடிந்தவரையில் பிறருக்கு உதவிகள் செய்து நாம் அவர்களை வாழ வைக்க வேண்டும் என்று அர்த்தம். அதுவே உயர்ந்த குறிக்கோள்! நாம் மட்டும் வாழ நினைப்பது சுயநலம்... மற்றவர்களை வாழவைப்பதே சிறந்தது. அதற்காக வாழ்வதே வாழ்க்கையாகும்.'' என்றார்கள். மிகவும் அழுத்தம் திருத்தமாக இப்படிச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நல்ல விஷயங்களைச் சொல்லும்போது தங்கம் டீச்சர் எப்போதுமே மண்டையில் ஆணி அடித்து இறக்குவது மாதிரிதான் அழுத்தமாகச் சொல்லுவார்கள். இதனால் அவர்கள் சொல்லும் வார்த்தைகள் அவர்கள் உடன் இல்லாத நேரங்களில் கூட என் காதுகளில் ஒலிக்கும்.

இப்படிச் சொல்லிக் கொண்டிருந்த போது, ஓர் அம்மாள் தன் வீட்டுக்கு எதிரில் இருந்த சாக்கடையில் காய்

கறிக் குப்பைகளை ஒரு முறத்தில் கொண்டு வந்து கொட்டினார்கள். இதைப் பார்த்ததும் தங்கம் டீச்சர், ''வயதில் பெரியவர்களாக இருக்கிறார்கள். இதுகூடத் தெரியவில்லையே! காய்கறிக் குப்பைகளைத் தெரு ஓரத்தில் கொட்டினால் மாடுகள் தின்று பசியாறுமே? சாக்கடையில் கொட்டி இப்படி வீணாக்குவதா?... சீதா! நம் பெரியவர்கள் ஒரு பழமொழி சொல்வார்கள் — உனக்குத் தெரியுமோ?'' என்றார்கள்.

''என்ன டீச்சர்?''

''பாழாக்காமல் பசு வயிற்றில் தள்ளு' என்று சொல்வார்கள். பண்டங்களை வீணாக்காமல் பகிர்ந்து வாழ்ந்தால், பசி, வறுமை இதெல்லாம் இருக்கவே இருக்காது! முக்கியமாக உணவுப் பண்டங்களை வீணாக்கவே கூடாது. நாம் சாப்பிட்டு மிஞ்சியதை இல்லாதவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். அவர்கள் வாழ்த்தா விட்டாலும் அவர்களின் வயிறு நம்மை வாழ்த்தும்...''

''டீச்சர்! ஒரு சந்தேகம்.''

''என்ன?''

''இல்லாதவர்களுக்குக் கொடுத்துப் பழக்கினால், உழைத்துச் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் அவர்களை விட்டுப் போய்விடுமே?''

தங்கம் டீச்சர் புன்சிரிப்பாகச் சிரித்தார்கள். டீச்சர் சிரிக்கும்பொழுது மிக அழகாக இருப்பார்கள். ஒரு தரம், வாயாடி வேங்கடலட்சுமி, 'டீச்சர், நீங்கள் சிரித்தால் ரொம்ப அழகாக இருக்கிறீர்கள்' என்று சொன்னபோது 'சிரிக்கும்போது எல்லோருமே ரொம்ப அழகாக மாறிவிடுவார்கள். அதனால் கூடியவரையில் எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும்!' என்று டீச்சர் பதில் சொன்னது அப்போது எனக்கு ஞாபகம் வந்தது.

''நீ சொல்வது சரிதான். ஆனால் பார்த்துப் பிச்சையிட வேண்டும். ''பாத்திரம் அறிந்து பிச்சை இடு'' என்பது அதற்காகத்தான். உழைக்க முடியாதவர்கள், ஏழைக் குழந்தைகள், வயசானவர்கள் இவர்களுக்கெல்லாம் கொடுத்து உதவ வேண்டும்'' என்றார்கள்.

டீச்சர் அவர்களது வீட்டுக்குள் நுழைந்ததும், நான் என் வீட்டை நோக்கி நடந்தேன்.

...சாமான்கள் அறையில் 'ஞொய்ய்' என்று கொசுக்கள் ரீங்காரமிடும் ஓசை கேட்டது. அத்தனை கொசுக்களும் கும்பலாக அங்கே எப்படி வந்தன என்று பார்ப்பதற்காக நான் விளக்கைப் போட்டேன். நான் கண்ட காட்சி எனக்கு வருத்தம் ஏற்படுத்தியது. பழக் கூடையைச் சுற்றித்தான் கொசுக்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அதற்குள் அழுகத் தொடங்கியிருந்த வாழைப் பழங்கள் நான்கும், வாடி வதங்கி, தோல் கறுத்துப் போன இரண்டு எலுமிச்சம் பழங்களும் இருந்தன. அவற்றைப் பார்த்ததும் எனக்கு வருத்தமாக இருந்தது. இதற்கு முன்னாலும் கூட அது மாதிரி எங்கள் வீட்டில் அழுகிப்போன பழங்களைத் தெருவில் வீசி எறிவதுண்டு. அப்போதெல்லாம் ஏற்படாத வருத்தம் இப்போது வந்தது. இதற்குக் காரணம், சற்று முன்னால் தங்கம் டீச்சர் 'பாழாக்காமல் பசு வயிற்றில் தள்ளு' என்ற பழமொழியைக் கூறி, இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னதுதான்.

எங்கள் அப்பா பணக்காரர் இல்லை என்றாலும் வசதியான வேலையில் இருப்பவர். எங்கள் வீட்டில் காய் கறி, பழங்கள் நிறையவே வாங்குவோம். சில நேரங்களில் இது மாதிரி வீணாகிப் போகும் பழங்களைத் தெருவில் வீசிப் போடுவதுண்டு. இதற்குக் காரணம் அம்மாவோ, அப்பாவோ கூடையில் பழங்கள் இருப்பதையே மறந்து போய் விடுகிறார்கள். வேண்டிய அளவுக்கு மேல்வாங்கிக் கூடையில் வைக்கிறார்கள். தேவைக்கு மேற்பட்டு வாங்கி வைப்பதால் அவற்றைச் செல



வழிக்க மறந்தும் போகிறது. அந்தப் பழத்தை ஓர் ஏழையின் வயிற்றுக்கு அளித்திருந்தால், அந்த வயிறு எங்களை எப்படி வாழ்த்தியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தேன். யார் வயிற்றையும் அடையாமல் இப்படி அழுகிப்போய் விட்ட பழங்களைப் பார்த்து ரொம்பவும் வருத்தப்பட்டேன்.

கூடையை எடுத்துக்கொண்டு வெளியில் வந்த நான், ''என்ன அம்மா இது? பழங்களை யெல்லாம் இப்படி அழுக வைத்திருக்கிறீர்களே? யாருக்காவது கொடுக்கக் கூடாதா?'' என்றேன்.

ஏதோ வேலையாக இருந்த அம்மா, கைவேலையை நிறுத்திவிட்டு ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தாள். ''உங்க அப்பா பண்ணுகிற காரியம் அது. இதையெல்லாம் நிறையச் சாப்பிடுவதற்கு யாருக்கு இங்கே வயிறு இருக்கிறது? நானும் உன் அப்பாவும் சாப்பிடமறந்த பழங்கள்'' என்றாள்.

''... நேற்று கண் தெரியாத ஓர் ஏழைப் பையன் வந்தானே, அவனுக்குக் கொடுத்திருக்கலாமே?'' என்றேன்.

என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அம்மா என்னையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். என் அதிகப் பிரசங்கித்தனமான கேள்வியால் அம்மா கோபப்பட வில்லை என்பது தெரிந்தது.

இரண்டு நாட்கள் கழித்து வீட்டில் பழங்கள் வாங்கியபோது, ''அம்மா, இனிமேல் நான் பள்ளிக்கூடம் போகும் போது இரண்டு பழங்கள் கொண்டு போவேன்'' என்றேன்.

''ஒரு பழம் போதாதா?'' என்று அம்மா கேட்டாள். ''இல்லையம்மா, எனக்கு இரண்டு வேணும்'' என்றேன். என் சிற்றுண்டி டப்பாவுடன் அவற்றை வைத்துக் கொண்டேன். என் வகுப்பில் புவனா என்று ஓர் ஏழைப் பெண் படிக்கிறாள். அவளுக்கு ஒரு பழம் கொடுத்து நானும் சாப்பிடத்தான். ஆனால், அம்மாவிடம் சொன்னால் கோபித்துக் கொள்ளுவாள். அதனால் சொல்லவில்லை.

ஒரு நாள் எனக்கு வயிறு வலித்தது. ஆனால், அன்று பரீட்சையாதலால் பள்ளிக்குப் போகாமல் இருக்க முடியவில்லை. அம்மா வெறும் தயிர்ச் சாதம் மட்டுமே சாப்பிடக் கொடுத்தாள்.

பழம் கேட்டால் கொடுக்க மாட்டாள் என்பதால், நானாகவே சாமான் அறைக்குள் நுழைந்து இரண்டு பழங்களை எடுத்துக் கொண்டிருந்தபோது, அப்பா உள்ளே வந்து விட்டார்.

''என்ன சீதா இது? உனக்குத்தான் உடம்பு சரியில்லையே? பழம் சாப்பிடக் கூடாது என்று இப்போதுதானே உன் அம்மா சொன்னாள்?'' என்று மிரட்டினார். அவற்றைக் கொடுத்துவிடும்படி சொல்லிக் கையை நீட்டினார். ''நீ இப்போதெல்லாம் அளவுக்குமேல் பழம் சாப்பிடுகிறாயாமே? அது உடம்புக்கு நல்லதில்லை'' என்றும் கூறினார்.

அதற்கு மேல் என்னால் பொய் சொல்ல முடியவில்லை. ''அப்பா, என்னோடு புவனா என்ற ஓர் ஏழைப் பெண் படிக்கிறாள். மிகவும் நல்லவள். மிகவும் கெட்டிக்காரி. ஆனால் பரம ஏழை. பகல் வேளையில் அவள் பல நாட்கள் பட்டினி கிடப்பாள். அவளுக்கு நான் தினமும் கொஞ்சம் சாதமும் ஒருபழமும் கொடுப்பேன். இன்று அவள் சாப்பாடு கொண்டு வராமலிருந்தால் பட்டினி கிடப்பாளே!'' என்றேன்.

அன்று அம்மா பார்த்தது போலவே அப்பாவும் ஆச்சரியமாக என்னைப் பார்த்தபடி நின்றார். ஆனால், அப்பாவின் கண்களில் தெரிந்தது வெறும் வியப்பு மட்டுமில்லை; கூடவே ஒரு மகிழ்ச்சியும் தெரிந்தது. அதைக் கவனித்ததும் நான் நம்பிக்கையோடு மேலும் சொன்னேன்:

கோழிப்பண்ணை முதலாளி (புதிதாக வேலைக்கு வந்த பையனிடம்): உனக்கு வேலை போட்டுத் தரேன்.... ஆனால் முட்டை எதுவும் திருட்டுப் போகக் கூடாது!

பையன்: போகாதுங்க. இதுக்கு முன்னாடி ஒரு கப்பல் கம்பெனியிலே வேலை பார்த்தேன். ஒரு கப்பல் கூட திருட்டுப் போனதில்லைங்க. நீங்க வேணும்னா விசாரிக்கப் பாருங்க. —ப்ரபா



''அப்பா! சில வீடுகளில் அடிக்கடி பழங்களையும் காய் கறிகளையும் அழுக வைத்துத் தெருவிலும், சாக்கடையிலும் தூக்கிப் போடுகிறார்கள். இதெல்லாம் ரொம்பத் தப்பு என்று எங்கள் தங்கம் டீச்சர் சொல்லியிருக்கிறார்கள். 'இருப்பது கொடுப்பதற்குத்தான்; பாழாக்குவதற்கு இல்லை' என்று டீச்சர் அடிக்கடி சொல்லுவார்கள்...'' —தங்கம் டீச்சரின் புகழை மேலும் பாட விடாமல் ஒரு சின்னக் குழந்தையைத் தூக்குவது போல் என்னை இடுப்பின் இருபுறங்களிலும் கைகளை வைத்து அலாக்காகத் தூக்கித் தட்டாமாலை சுற்றினார் அப்பா. என் உச்சந்தலையில் முத்தமிட்டுவிட்டு என்னைக் கீழே இறக்கினார்.

மேலே ஒன்றும் சொல்லாமல் என் அப்பா முன் தினம் அவருக்காக வாங்கிய புதுப் பேனாவை எடுத்து என்னிடம் நீட்டினார்.

''உனக்குத்தான்!'' என்றார்.

''எதற்கு, அப்பா?'' என்றேன்.

''சும்மாதான். வைத்துக்கொள்!'' என்றார். அப்பா என்றுமே வாய் விட்டு என்னைப் புகழ மாட்டார். நான் சொன்ன சொற்களுக்காக அப்பா கொடுத்த பரிசு அது என்பது எனக்குப் புரியவே செய்தது.

''...அப்பா! நான் இதைத் தங்கம் டீச்சருக்குப் பரிசாகக் கொடுத்து விடட்டுமா?'' என்றேன். அதன் விலை பத்து ரூபாய். அப்பா ஒரு கணம் தயங்கி விட்டு, ''கொடேன்!'' என்றார். அப்போது அங்கே வந்த அம்மா, ''என்னது?'' என்றாள். அப்பா சுருக்கமாகச் சொன்னார். அம்மா டக்கென்று முக வாயைத் தோளில் இடித்துக் கொண்டு போனாள்.

கொஞ்ச நேரம் கழித்து, ''சீதா தான் கேட்டாள் என்றால் நீங்களும் சரி என்று சொல்லி விட்டீர்களே? பத்து ரூபாய் விலையாச்சே?'' என்று அம்மா அப்பாவிடம் சொன்னது என் காதில் விழுந்தது.

''அடியே, இந்தப் பத்து ரூபாய்ப் பேனா பெரிதில்லை. தங்கம் டீச்சரிடமிருந்து அவள் கற்றுக் கொண்டு வந்திருக்கும் நல்ல குணம், ஆயிரம் ஆயிரமாகக் கொடுத்தாலும் கிடைக்குமா? அதைக் கவனிக்க வேண்டாமா?'' என்று அப்பா சொன்ன பதிலும் கேட்டது.

நான் குதித்துக்கொண்டு கிளம்பினேன். அந்த நல்ல குணத்தை ஏற்படுத்திய தங்கம் டீச்சருக்கே அந்தப் பரிசு உரியது என்று நான் நினைத்தது தப்பா? நீங்களே சொல்லுங்கள்!

---

# பெருமாள் மாடு

'பூம்பூம்' என்றே ஓசைவரும்
பொடியர்க் கெல்லாம் ஆசைவரும்
'ஆமாம்சாமி, போட்டி டவே
அழகாய்ப் பெருமாள் மாடுவரும்.



மெதுவாய்ச் சலங்கை குலுங்கவரும்
மேனியில் போர்வை துலங்க வரும்
முதுகின் திமிலைக் காட்டிவரும்
முழத்துணி சட்டை கேட்டுவரும்.

நெற்றியில் பட்டை நாமமுடன்
நீளத் தொங்கும் ஆடையுடன்
சுற்றிய பாகைத் தலையுடனே
தொடரும் எசமான் கூடவரும்.

''அம்மா சோறு இடுவாரா?
ஐயா காசு தருவாரா?
சும்மா சொல்லு, பெருமாளே!''
துருவிக் கேட்பான் எஜமானன்.


எவற்றை வேண்டிக் கேட்டாலும்
இனிதாய்க் கிடைக்கும் என்பதுபோல்
அவசர மாகத் தலையாட்டும்
அடடா, மிகவும் வியப்பூட்டும்.

விரும்பிய தெல்லாம் கிடைத்தவுடன்
விரைந்தே துள்ளிச் சதிராடும்.
சிறுவர் படைகள் புடைசூழத்
தெருவில் அழகாய் நடமாடும்!

-புவனை கலைச்செழியன்

# வெற்றிவேல் வீரவேல் 1

கதை: சுகி சிவம் | படம்: வினு




மேனே! பலித்தது தவம்! பார்வதி வந்தாள்.
பாலும் சுரந்தது! ஆ! பரிகட்டும் குழந்தை.
பார்வதிக்கு வயது ஐந்து. சிவபெருமானை அடையத் தவம் செய்ய உறுதி கொண்டார். பெற்றோர் பயந்தனர்.
குழந்தாய்! பூவின் மீது வண்டு அமர்ந்தால் பூ தாங்கும்... பறவை அமர்ந்தால்?
பெண்ணே! நீ எளிய பூசைகள் செய். தவம் செய்தால் உடல் தாங்குமா?
என் எண்ணத்தை யாரும் மாற்ற முடியாது.
இமய மலைச்சாரலில் பார்வதி கடுந்தவம் செய்ய கயிலை மலையில் நடந்தது... இன்னொரு அதிசயம்.
திருக்கயிலையில் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் ஆகிய பிரமனுடைய பிள்ளைகள் நால்வர் சிவபெருமானிடம் ஞான உபதேசம் வேண்டினர்.
பெருமானே! சரியை, கிரியை, யோகம் கற்றும் ஞானம் வர வில்லையே!
மௌனம் என்பதே ஞான வரம்பு.
சொல்லில் அடங்காத ஞான அனுபவத்தைச் சைகையில் விளக்கி மௌனத்தில் ஆழ்ந்தார் சிவபெருமான்.
ஒவ்வொரு உயிருக்கும் ஆணவம், கன்மவினை, மாயை என்னும் மூன்று குறைகள் உண்டு. உயிர் மூன்றையும் விட்டு விலகி இறைவன் திருவடியில் சேர்வது ஞானம். கட்டை விரல் கடவுள். ஆள் காட்டி விரல் ஆன்மா. நிமிர்ந்து நிற்கும் மூன்று விரல்கள் மூன்று குற்றங்கள்.



சூரபன்மன் என்ற அசுரன் தேவர்களைக் கொடுமைப் படுத்த, அவர்கள் நாராயணனிடம் முறையிட்டார்கள்.
பாற்கடலில் படுத்த கருணைக் கடவுளே! சூரபன்மன் கொடுமை தீர வழியில்லையா?
ம். பார்வதி, பரமசிவன் இருவரும் தவம் செய்கிறார்கள். தவம் கலைந்தால், இருவரும் மணந்தால், முருகன் பிறந்தால் உங்கள் குறை தீரும். தவத்தைக் கலைக்க முயற்சி செய்யுங்கள்.
மன்மதா! வருக!
இந்த வயதில் இவருக்கு ஆசையா? இவர் ஏன் நம்மை நினைக்கிறார்?
மன்மதா! சிவபெருமான் தவம் கலைய வேண்டும். அவருக்கு ஆசை வர வேண்டும்! ம்.. கயிலைக் கடவுளுக்குக் காமம் வரும்படி உன் கைவரிசையைக் காட்டு...
சிவ! சிவ! கையில் நெருப்பு. மெய்யும் நெருப்பு. தேவதேவனை நெருங்குவதா... என்னால் முடியாது.
சபித்து விடுவேன். ஜாக்கிரதை..
சீச்சீ! எலியால் அழிவதைவிட புலியால் மடிவது மேல். சிவபெருமானிடமே செல்கிறேன்!
இவருக்குக் காமம் தோன்றுமா? தவ நெருப்பு என்னை ஏதோ செய்கிறதே! ஐயோ! ரதி! என் பிரிய மனைவி.. ...!
நாதா! திரும்புவோம்.
ம்... அழியப்போகிறவனுக்கு கடலின் ஆழத்தைப்பற்றி என்ன கவலை.. நினைத்ததை முடிப்பேன்.


மலர் அம்புகளை ஏவினான்.
கடைக் கண்ணால்
உலகையே காப்பாற்றும்
கருணைக் கடல்
நெற்றிக் கண்ணைத் திறந்தார்.
மன்மதன் எரிந்தான்.
சிவ பெருமான் மீண்டும்
தவத்தில் ஆழ்ந்தார்.
தேவர்கள் சூழ்ச்சிக்கு
இவர்தான் பலியா?
மன்மதன் எரிந்தான்...
வாசனை வீசுகிறது!
ஆ! ஐயகோ!
காலனை உதைத்தவர்
காமனை எரித்தார்.
அக்கினித் தவத்தால்
ஆசை எரிந்தது!
ஐயகோ!
அப்படியானால்
நம் திட்டம்...?
தொடரும்

# யானையும் பானையும்



ஆனையண்ணன் பானைஒன்றை
விழுங்கி விட்டாராம்
அடிவயிற்றைப் பிடித்தபடி
அழுது நொந்தாராம்
பூனையண்ணன் புலியாரைக்
கூட்டி வந்தாராம்
புலிடாக்டர் வயிற்றைஅறுக்க
வேண்டு மென்றாராம்.

அலறியடித்தே யானையாரும்
ஓடிவிட் டாராம்'
அவர்,வழியில் பாறையிலே
மோதி விட்டாராம்.
விலகியதாம் வயிற்றுவலி.
விந்தை இல்லையே!
விழுங்கிவைத்த பானையுமே
நொறுங்கி விட்டதே!

— அழகி

---

# அப்புறம் என்ன?



அப்பா சைக்கிளை
ஓட்டிப் பார்க்க
ஆசைப் பட்டேன்
அன்றொரு நாள்.
தப்போ சரியோ
சைக்கிள் மேலே
தாவிக் குதித்து
ஓட்டினேன் நான்.

அப்போ வீதியில்
வந்தாள் பாட்டி
அவள்மேல் சைக்கிள்
மோதியதால்,
குப்புற விழுந்தேன்!
அப்புறம் என்ன?
கையில் காலில்
பெருங் கட்டு!

— மா. கண்ணப்பன்

# கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

**இச்சங்கத்தில் யார் சேரலாம்?**

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

**உறுப்பினர் ஆனதும்.....**

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப் பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

**பயன் என்ன?**

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனு நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

**உறுப்பினராகக் கட்டணம் உண்டா?**

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

**கோகுலம் சிறுவர் சங்கம்**

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே
- மகாகவி பாரதியார்

கோகுலத்துக்கு எங்கள் இதயங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்

T. V. Sundaram Iyengar
& Sons Limited

Madurai & Branches

With best compliments :

From :

Rainbow Ink & Vsh. Mfg. Co. Pvt. Ltd.

99, Mount Poonamallee Road,
Porur,
MADRAS-602104
Phone : 432410, 432761
Grams : VIBGYORINK

Head Office :

Rainbow Ink & Vsh. Mfg. Co. Pvt. Ltd.

133-C, Vakola, Santacruz, (East)
BOMBAY-400055
Phone : 6124362, 6121352-53, 6121324
Grams : RAINBOINK



**வங்காள எழுத்தும் மாதமும்**

ஏ - தமிழ். இதையே தலைகீழாக எழுதினால் அது வங்காளி எழுத்து.

வங்காளிகளின் முதல் மாதம் வைகாசி. அதை அவர்கள் வைசாக்' என்பார்கள். வைசாக் மாதம் முதல் தேதி அவர்களுடைய புத்தாண்டு நாள். தமிழ் வருஷப் பிறப்பும், வங்காளி வருஷப் பிறப்பும் ஒரே நாளில் வருகின்றன: மாதத்தின் பெயர்தான் வேறு.

**ஒரிசாவில் 'ராஜா'த் திருவிழா**

மழைக்காலத்தை வரவேற்க 'ராஜா' என்று ஒரு திருவிழா ஒரிசாவில் நடக்கிறது. கன்னிப் பெண்கள் புத்தாடை உடுத்தி, மரங்களில் ஊஞ்சலைத் தொங்க விட்டு அதில் ஆடியும் பாடியும் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொருவர் வீட்டிலுமாக மாறி மாறி, புதிய சிற்றுண்டிகளைச் சுவைத்து மகிழ்கிறார்கள்.

**பீகாரில் பெரிய சந்தை!**

பீஹாரில் சோனிப்பூர் என்னுமிடத்தில் கூடும் சந்தை ஆசியாவிலேயே பெரிய சந்தை என்று புகழ் பெற்றிருக்கிறது. சந்தை என்றதும் பொள்ளாச்சி சந்தைபோல வாரம் ஒரு முறை கூடும் என்று நினைத்துவிடாதீர்கள். இது திருக்கார்த்திகை விழாவை யொட்டி ஒரு மாதத்திற்குச் சேர்ந்தாற்போல் கூடும் சந்தை. ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே கூடும். ஐந்து லட்சம் பேர் வருவார்கள்!

**குஜராத்தில் பட்டம் விடுதல்**

தமிழ்நாட்டில் தீபாவளிக்குப் பட்டாஸ் கடைகள் புற்றீசல் போலத் தோன்றுகின்றன அல்லவா? இதே போல் குஜராத்தில் சங்கராந்திக்கு இருபது நாட்கள் முன்னமேயே தெருவெல்லாம் பட்டம் வியாபாரம் நடக்கும்.

பட்டத்தைப் பறக்க விட்டுப் பிடித்துக்கொள்வதற்கென்று மென்மையான கயிறுகளை ஆமதாபாத் ஆலைகள் உற்பத்தி செய்கின்றன. பட்டம் விடும் போட்டியை ஆமதாபாத் கார்ப்பரேஷன் நடத்திப் பரிசுகள் வழங்குகிறது.


**ராஜஸ்தான் எலிக்கோயில்!**

இந்தியாவிலேயே ஏராளமான எலிகள் —உருவத்தில் பெரிய எலிகள் இருப்பது ராஜஸ்தானில்தான். பிக்கானீர் அருகே எலிகளுக்காக ஒரு கோயில் கட்டியிருக்கின்றார்கள்!

**மராட்டியத்தில் கணேஷ்**

மராட்டியர் பிள்ளையாரைக் கணபதி என்றும், கணேஷ் என்றும் சொல்லுவார்கள். விநாயக சதுர்த்தி, பிள்ளையார் சதுர்த்தி என்று நாம் கொண்டாடுவதை அவர்கள் கணேஷ் சதுர்த்தி என்ற பெயரில் கொண்டாடுவார்கள். நாம் கடைப்பிடிக்கும் பிள்ளையார் நோன்புக்கு அங்கு கணேஷ் பூஜா





என்றும், கண்பத் ஹோமம் என்றும் பெயர். தமிழ் நாட்டில் விநாயகர் உருவத்தால் புகழ்பெற்ற ஒரு தலம் பிள்ளையார்பட்டி. மராட்டியத்தில் இது போல ஓர் ஊர் உள்ளது. அதன் பெயர் கணேஷ்கிண்ட்.

**உத்தரப் பிரதேசத்தில் ஆமைக்கு லட்டு!**

உத்தரப் பிரதேசத்தில் உள்ள சரயு நதியில் வாழும் ஆமைகளுக்கு 'லட்டு' போட்டுப் பக்தர்கள் பழக்கியிருக்கிறார்கள்.

அயோத்தி நகரில் கேட்கும் ஒலி: 'ஜெய் சீத்தாராம்!' 'ஜெய ஜெய ராம்' ராமன் பிறந்த இந்நகரில் ஒவ்வொரு நாளும் ராம நவமியாகக் கொண்டாடப்படுகிறது என்று சொன்னாலும் பொருந்தும்.




**பஞ்சாபில் பசியில்லை**

அமிர்தசரஸ் பொற் கோயிலில் 24 மணி நேரமும் சமையல் நடைபெறுகிறது. சாப்பாடும் நடந்த வண்ணமாகவே இருக்கிறது.

அரை மணிக்கு ஒரு பந்தி. பந்திக்கு 3000 பேர்! எந்த மதத்தினரும் சாப்பிடலாம். எங்கிருந்து வந்தாலும் சாப்பிடலாம். கோதுமை ரொட்டியும், அதற்குத் துணையாகக் காய்கறிகளும் வயிறு நிறையப் பரிமாறுகிறார்கள்.

**மத்தியப் பிரதேசத்தில் காளிதாசர் விழா**



உஜ்ஜயினி காளிதாசர் வாழ்ந்த நகர். தமிழ் நாட்டில் கம்பரைப் போல் ம. பி.யில் காளிதாசர் மதிக்கப்படுகிறார். தமிழ் நாட்டில் கம்பன் திருநாள் போல் ஆண்டுதோறும் காளிதாசர் திருவிழா அங்கு நடைபெறுகிறது. அரசினரே நடத்துகிறார்கள்!

**ஹிமாசலப் பிரதேசத்தில் ஆப்பிள் இலவசம்!**

வெளியூர்க்காரர்கள் ஹிமாசலப் பிரதேசத்தில் ஆப்பிள் வாங்கக் காசு இல்லையே என்று கவலைப்பட வேண்டாம். எந்தத் தோட்டத்துக்குள்ளும் புகுந்து வயிறு நிறையச் சாப்பிடலாம். பணம் கேட்க மாட்டார்கள். வெளியே கொண்டுபோனால் பழத்திற்கு விலை கொடுத்துவிட வேண்டும்.

**ஹரியாணாவில் ஒரு புதிய சாதி!**

பஞ்சாபைப் போலவே ஹரியாணாவிலும் ஒரு புதிய சாதி உருவாகியிருக்



றது. போர்ப்படை என்பதே இந்தச் சாதி.

போர்ப் படைக்கு, குடும்பத்திற்கு ஒருவரை அனுப்புவதை அங்கேஅவர்கள் தங்கள் கடமையாகக் கருதுகிறார்கள்.

**கோவாவல் இளநீரில் நீராட்டு!**

கோவாவில் திருமணத்துக்கு முதல் நாள் திட்டுக் கழிப்பார்கள். சீவிய இளநீரைப் பொத்து அண்டா நிறை ஊற்றி மணப் பெண்ணைக் குளி பாட்டுவார்கள்!

**புதுச்சேரியில் தூ-தூ-தூ-தூ**

''விலங்கிலிருந்து மனிதன் தோன்றி னான், மனிதனிலிருந்து உயர் மனிதன் தோன்றுவான்'' என்பது அரவிந்தரின் தத்துவம்.



உயர்ந்த மனிதன் உருவாகத் தூய உடை, தூய உணவு, தூய காற்று, தூய வாழ்வு வேண்டும். இவற்றைத் தருவது புதுச்சேரியில் உள்ள அர விந்தரின் ஆசிரமம்.

**நாகாலந்தில் குழந்தைக்குக் கொதிநீர்!**

நாகாலாந்தில் ஆண் குழந்தை பிறந் ததும் ரொம்பச் சூடான நீரில் குளிப் பாட்டுவார்கள். அந்தச் சூட்டைத் தாங்குவதால், அவன் எதிர்ப்பை முறி யடிக்கும் வீரக் குடிமகனாகி விடுவானாம்!

**அருணாசலப் பிரதேசத்தில் மரக்கட்டையில் மூக்குத்தி!**

அருணாசலப் பிரதேசத்தில் பெண் களுக்கு எவ்வளவு பெரிதாகக் குத்த முடியுமோ அவ்வளவு பெரிதாக மூக் கைக் குத்தி விடுவார்கள். அத்தகைய துவாரத்துக்கு வைரத்தில் மூக்குத்தி போட முடியுமா? மரக்கட்டையைத் தான் மூக்குத்தியாகப் பயன்படுத்து வார்கள்!



**காஷ்மீரில் சங்கராசாரியார் மலை!**

காஷ்மீரில் ஒரு மலையின் பெயர் சங் கராச்சாரியார் மலை. அசோகன் காஷ் மீரில் இரு சிவன்கோயில்களை அமைத்த தற்குச் சான்று இருக்கிறது.

- உலகம் சுற்றும் தமிழர் 'சோமலெ' அவர்களின் 'இமய முதல் குமரி வரை' என்ற நூலிலிருந்து

# காவலில்லை!

வெ.நல்லதம்பி



குடிசைக்கு வெளியே நின்ற வேலப்பன், ''செங்கமலம், எங்கே ரமேஷ்?'' என்று கத்தினார்.

குடிசைக்குள் இருந்த செங்கமலம், ''அங்கேதான் இருந்தான்'' என்று பதிலுக்குக் குரல் கொடுத்தாள்.

''ரமேஷைக் கெடுப்பது நீதான். எங்கேயாவது அவனை அனுப்பி யிருக்கிறாயா?'' என்றார் வேலப்பன்.

''நான் எங்கும் அனுப்பவில்லை. பக்கத்தில் விளையாடப் போயிருப்பான்.''

''படிப்பைவிட விளையாட்டு அவனுக்குப் பெரிதாகப் போய் விட்டதோ? குட்டிச்சுவராகத்தான் அவன் போகப் போகிறான்'' என்று வேலப்பன் கோபித்துக்கொண்டார்.

அன்று ஒருநாள் அவன் பக்கத்து வீட்டுக்குப் போய்த் தொலைக் காட்சி பார்த்து வந்தான். அது தெரிந்த வேலப்பன், அவனை 'அடிஅடி'யென்று அடித்துவிட்டார். சினிமாவைப்போல் தொலைக் காட்சியும் குழந்தைகளைக் கெடுத்துவிடும் என்று யாரோ சொன்னதை வைத்து அப்படிச் செய்துவிட்டார்.

வேலப்பன் கட்டை வண்டி இழுக்கும் தொழிலாளி. தாம் இழுத்துவந்த கட்டை வண்டியைத் தம் குடிசையின் முன்னால் நிறுத்தினார். குடிசைக்குள் நுழைந்தார். சாப்பிடுவதற்கு ஏதேனும் இருந்தால் சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று பார்த்தார். குடிசை முன்னால் நின்ற வண்டியில் சில சரக்கு மூட்டைகள் இருந்தன. அவற்றைப் பக்கத்துத் தெருவிலுள்ள மண்டிக் கடையில் சேர்க்க வேண்டும். அதற்குள் பசி வந்து விட்டது.

வீட்டுக்குள் அவர் மனைவி செங்கமலம் சமைத்துக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் வேலப்பன் ரமேஷைத் தேடினார். ''நான் சாப்பிட்டு முடிக்கும்வரை அவனை வண்டியின் பக்கத்தில் காவலுக்கு நிற்கச் சொல்லலாம் என்று பார்த்தேன். எங்கோ போய் விட்டானே!'' என்று கத்தினார் வேலப்பன்.

செங்கமலம், ''உங்கள் வண்டியில் என்ன சரக்கு இருக்கிறது? மிகவும் விலை உயர்ந்த சரக்கா?'' என்று கேட்டாள்.

''எல்லாம் வெல்லக்கட்டி மூட்டைகள். கொஞ்சம் வெங்காய மூட்டைகளும் உள்ளன. மூட்டைகள் பத்திரமாகப் போய்ச் சேர வேண்டும். மூட்டையிலிருந்து ஒரு தூசி கீழே விழுந்து விடக்கூடாது. வழியில் ஏதேனும் நடந்ததாகக் கடை முதலாளிக்குச் சந்தேகம் வந்தால் கூலி கொடுக்க மாட்டார். அவ்வளவு கண்டிப்புப் பேர் வழி'' என்று வேலப்பன் சொன்னார்.

செங்கமலம், ''சரி, சரி, அப்படியானால் நீங்கள் வெளியே போய் நில்லுங்கள். இதோ நொடியில் சமையல் முடிந்து விடும். சாப்பாட்டைத் தட்டில் வைத்துக் கொண்டு கூப்பிடுகிறேன்'' என்றாள்.

வேலப்பனுக்குப் பசி அதிகமாயிற்று. காலையில் சாப்பிட்ட பழைய சோறுதான். மதியம் கூட ஒரு ரொட்டியும் டீயும்தான் சாப்பிட்டார். இப்போது விளக்கு வைக்கும் நேரம். ஏழு மணி ஆகப் போகிறது. இப்போது சாப்பிட்டுப் புறப்பட்டால், இன்னும் மூன்று மணி நேரம் வண்டி இழுக்கலாம். இரவு பத்து மணிக்குத்தான் வேலப்பன் வீடு திரும்புவது வழக்கம்.

அப்படிக் கஷ்டப்பட்டு உழைத்தும் அவரால் நிம்மதியாகச் சாப்பிட முடியவில்லை. இரண்டு மூன்று பேரிடம் கடன் வாங்கி யிருந்தார். குடிசைக்கு மூன்று மாதங்களாக வாடகையும் கொடுக்க முடியவில்லை.

செங்கமலத்தின் குரலை எதிர்பார்த்துக்கொண்டு வேலப்பன் குடிசையின் வெளியே வண்டி அருகில் வந்து நின்றார்.

வஞ்சகம் இல்லாமல் நாள் முழுக்க உழைத்தும் அவரால் வசதியாக வாழ முடியவில்லை. தம் குடும்பம் கஷ்டப்படுவதை நினைத்து அவர் மனம் உருகினார். அவருக்கு மூன்று குழந்தைகள். ரமேஷுக்குப்பின் இரண்டு குழந்தைகள். அவற்றுக்கு உடம்புக்கு முடியாமல் போனதால் மருந்து வாங்கிக் கொடுத்ததில்தான் நிறையச்செலவாகிவிட்டது.

வருங்காலத்தில் குழந்தைகளாவது நன்றாக வாழ வேண்டும் என்று வேலப்பன் ஆசைப்பட்டார். தன்னைப் போல், தன் குழந்தைகள் படிப்பறிவு இல்லாமல் துன்பப்படக் கூடாது என்று அவர் நினைத்தார். அதனால்தான் இவ்வளவு தொல்லைகளுக்கு இடையிலும் ரமேஷை ஆறாம் வகுப்பில் படிக்க ஒரு நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்த்திருந்தார். ஆனால் அவன் சரியாகப் படிக்கவில்லை என்று வேலப்பன் நினைத்துக்கொண்டார்.

செங்கமலம் இன்னும் குரல் கொடுக்கவில்லை. அதற்குப்பதில், நோயால் நலிந்த இரண்டு குழந்தைகளின் குரல்தான் கேட்டது. பசியால் அவையும் கத்தின.

வேலப்பன் எழுந்தார். நேரமாகி விட்டது. அடுத்த நடை வரும்போது சாப்பிடலாம் என்று புறப்பட்டார். அப்போது அங்கு ரமேஷ் வந்தான். அவனைக் கண்டதும் அவருக்குக் கோபம் வந்தது. ''டேய், எங்கே போய்விட்டு வருகிறாய்?'' என்று வேலப்பன் கடுமையான குரலில் கேட்டார். அதைக் கண்ட ரமேஷ் [illegible] விட்டான். 'உண்மையைச் சொன்னால் உதை கிடைக்குமோ' என்று பயந்தான்.

''எங்கேடா போய் விட்டு வருகிறாய்? டி.வி. பார்க்கத்தானே?'' என்று சற்று இழுத்த குரலில் வேலப்பன் கேட்டார்.

ரமேஷ் 'ஆமாம்' என்று தலையாட்டினான். அப்பா அடிக்க மாட்டார் என்று நினைத்தான். ஆனால், அடுத்த நொடியே அவன் முதுகில் பலமாக நான்கு ஐந்து அடிகள் விழுந்தன. வேலப்பன் கோபமாக, ''தெரு சுற்றும் நாயே, மரியாதையாக உள்ளே போய்ப் படி! இனி நீ இப்படிச் சுற்றினால் தொலைத்து விடுவேன்'' என்று உறுமிவிட்டுச் சென்று விட்டார்.



செங்கமலம் ரமேஷை வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். ''அப்பாவின் கோபத்துக்கு ஆளாகாதே என்று எத்தனை தடவை சொல்வது? சரி, சரி, அழாதே! இதோ சாப்பிடு'' என்று அவனைச்சாப்பிடத் தயார்ப்படுத்தினாள்.


ரமேஷ் அழுதான்.

''அழாதே ரமேஷ்! அப்பா திரும்பி வருவார். சாப்பிட்டு விட்டுப் புத்தகத்தை எடுத்துப் படி'' என்று செங்கமலம் ஆறுதல் சொன்னாள்.

ரமேஷ் சாப்பிடவில்லை. புத்தகத்தை எடுத்துப் படித்தான்.

மூன்று நாள் கழிந்தது.

ரமேஷுக்குக் காய்ச்சல். பள்ளிக்குச் செல்லவில்லை. நான்காம் நாள் அவன் நண்பன் ரவி அவனைப் பார்க்க வந்தான்.



''நான் கண்ணாடி டம்ளரைக் கை நழுவிக் கீழே போட்டேன். ஒரு சொட்டுத் தண்ணீர் கூடத் தரையிலே விழவில்லை.''
''அடே. அது எப்படி?''
''நான் போட்ட டம்ளரில் இருந்தது பால்தானே!''

''ரமேஷ், உனக்கு ஒரு செய்தி தெரியுமா?'' என்று ரவி கேட்டான்.

''என்ன ரவி?'' என்று கேட்டுக் கொண்டே ரமேஷ் எழுந்து உட்கார்ந்தான்.

''நம் பள்ளியில் தலைமையாசிரியர் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்'' என்றான் அவன்.

''ஏன் ரவி, என்ன விஷயம்?'' என்று பயந்து கொண்டே கேட்டான் ரமேஷ்.

இவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ரமேஷ் அம்மா ''பள்ளிக்குப் போகவில்லை. உதைக்கத்தான் தலைமை ஆசிரியர் உன்னை எதிர்பார்க்கிறார்'' என்று சொன்னாள்.

ரவியைப் பார்த்து அந்த அம்மாள் மேலும் சொன்னாள்: ''ரவி, உங்கள் வீட்டுக்கு வந்துதான் ரமேஷ் டீ.வி. பார்க்கிறான். ரமேஷ் அப்பாவுக்கு அது பிடிக்கவில்லை. அன்று அவன் வீடு திரும்பும்போது அதற்காக நன்றாக அடித்து விட்டார். இனிமேல் அவனை உங்கள் வீட்டுக்குள் சேர்க்காதே, அப்பா.''

அதைக் கேட்டதும் ரவிக்கு என்னவோ போல் ஆகி விட்டது. ஆகவே, அவன் பேச்சைத் தொடர விரும்பவில்லை. ஆனால், ஏதோ ஒன்றைத் தன் நண்பனின் காதோரத்தில் ரகசியமாகச் சொன்னான்.

அதைக் கேட்டதும் ரமேஷின் முகம் மலர்ந்தது. ''அப்படியா, நான் காட்டிய ஆள் உண்மையில் காணாமல் போன அதே ஆள்தானா?'' என்று மகிழ்ச்சியில் வாய் விட்டுச் சொன்னான்.

''ஆமாம் ரமேஷ்! நீ எங்கள் வீட்டுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த அந்த ஆளை உடனே அடையாளம் கண்டுகொண்டாய். அத்துடன் அந்த ஆளைப் பற்றிக் காவல் நிலையத்துக்கு அப்போதே போய்த் தகவலையும் சொல்லி விட்டாய். ஆகவே, அவர்கள் அந்த ஆளைப் பிடித்து ஒப்படைக்க வேண்டிய இடத்தில் ஒப்படைத்து விட்டார்கள். அதைப் போலீஸ் அதிகாரி நம் தலைமை ஆசிரியரிடம் இன்று சொல்லிக் கொண்டிருந்தார்'' என்று சொன்னான் ரவி.

'காணாமல் போன ஆள்' 'போலீஸ் அதிகாரி' என்ற சொற்களைக் கேட்ட செங்கமலம் பயந்து போய், ''என்னப்பா ரவி, மீண்டும் ரமேஷ் ஏதேனும் தொல்லையில் மாட்டிக் கொள்ளப் போகிறானா?'' என்று கேட்டாள்.

அதற்கு ரவி, ''இல்லை அம்மா, அன்று ரமேஷ் எங்கள் வீட்டுக்கு வந்து டீ.வி.யில் கார்ட்டூன் படம் பார்த்தான். கார்ட்டூன் படம் சிரிப்பாக இருந்தது. அந்தப் படத்தை அடுத்து ''காணவில்லை'' என்று ஒரு அறிவிப்பு வந்தது. அதில் ஒரு முதியவர் படம் ஒன்றைக் காட்டினார்கள். மனநிலை அவருக்குச் சரியில்லை என்றார்கள். அவரைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்குத் தக்க சன்மானம் தரப்படும் என்றும் அறிவித்தார்கள். அதைப் பார்த்துவிட்டு ரமேஷ் வெளியே வந்தான். எங்கள் வீட்டு முன்னால் ஒரு கிழவர் நின்றார். டீ.வி.யில் கண்ட முகமும் அவர் முகமும் ஒன்றாக இருந்ததை ரமேஷ் நொடி நேரத்தில் கண்டுவிட்டான். என்னை அழைத்து என்னிடமும் காட்டினான். சரியாகத்தான் இருக்கிறது என்றேன். உடனே, ரமேஷ் என்னைப் பார்த்து ''துணைக்கு வருகிறாயா?'' என்று கேட்




ஜாவர் பிளாசா
1A, நுங்கம்பாக்கம் ஹைரோடு
சென்னை 600 034
போன்: 812250
தந்தி: நந்தா டிரஸ்ட்

அரசு அங்கீகாரம் பெற்ற மதிப்பீட்டாளர்கள்

Sobhagya

டான். "எதற்கு?" என்றேன் "நான் இப்போதே அருகில் உள்ள காவல் நிலையத்துக்குப் போய் இதைச் சொல்லப் போகிறேன்" என்றான். எனக்குப் பயமாக இருந்தது. நான் போகவில்லை. ஆனால் ரமேஷ் மட்டும் போய்த் தகவலைக் கொடுத்து விட்டான். காவல் அதிகாரிகள் உடனே வந்து எங்கள் வீட்டுக்கு முன் நின்று கொண்டிருந்த அவரை அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள்" என்று மூச்சு விடாமல் சொன்னான்.

செங்கமலத்துக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய் விட்டது. பெருமூச்சு விட்டாள். பிறகு பேசினாள்: "ரமேஷ் ஒரு நல்ல காரியம்தான் செய்திருக்கிறான். ஆனால், என்னப்பா பிரயோசனம் இப்போ! ரமேஷ் காய்ச்சலாக இருக்கிறான். நாளை பள்ளிக்குப் போகவில்லை என்றால் இவனை உதைப்பேன் என்று அவன் அப்பா பயமுறுத்துகிறார்" என்று சொன்னாள்.

அப்போது வேலப்பன் அங்கே வந்தார். "ஆமாம். அவனுக்கு உதைதான் மருந்து. அவன் நாளை பள்ளிக்குப் போகாவிட்டால் அந்த உதை மருந்தைக் கொடுக்கத்தான் போகிறேன்" என்றார்.

அப்போது அங்கே சிலர் வந்தார்கள். "ரமேஷ் வீடு இதுதானா?" என்று ஒருவர் கேட்டார். அவர் கோட்டுப் போட்டிருந்தார். அவருடன் போலீஸ் அதிகாரி ஒருவரும் வந்திருந்தார். சற்றுத் தொலைவில் தலைமை ஆசிரியர் வந்து கொண்டிருந்தார்.

ரமேஷின் நண்பன் ரவி மிடுக்காக எழுந்து, "ஆமா சார், இதுதான் ரமேஷ் வீடு" என்றான்.

வேலப்பன் என்னவோ ஏதோ என்று விழித்தார். கலவரப்பட்டார்.

தலைமை ஆசிரியரைக் கண்டதும் கையெடுத்துக் கும்பிட்டார்.

"பையன் தப்புத் தண்டா செய்திருந்தால் மன்னிக்க வேண்டும்"என்று எல்லோரையும் பார்த்துக் கெஞ்சினார்.

தலைமை ஆசிரியர் கூட்டத்தின் முன் வந்து நின்றுகொண்டு, "வேலப்பா! இப்படி முன்னே வா! உன் பிள்ளை ரமேஷ் ஒரு தப்புத் தண்டாவும் செய்யவில்லை. ஒரு நல்ல காரியம்தான் செய்திருக்கிறான். மில் அதிபர் சுந்தரத்தின் அப்பாவை அவன் கண்டுபிடித்துக் கொடுத்ததற்காக, இதோ அவர் ஆயிரம் ரூபாயை உன் மகனுக்குப் பரிசாகத் தர வந்துள்ளார். நீயும் உன் மகன் ரமேஷும் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்.



மாமா: டேய் ராமு, இதோ பார், இந்தக் கூண்டிலே இருக்குதே சிங்கம், இது வெளியே வந்தால், ஒரே அடியிலே மனிதரைக் கொன்னு தின்னுடும்.

ராமு: ஐயோ! அப்படின்னா நான் எத்தனாம் நம்பர் பஸ்ஸிலே வீட்டுக்குத் திரும்பணும்? சொல்லிடுங்க மாமா சீக்கிரம்!"

பேண்ட் உடை தரித்த சுந்தரம், "ஆமாம் ஐயா. என் அப்பாவைக் கண்டுபிடித்துத் தந்த உங்கள் மகனுக்கு நான் தரும் இந்தப் பரிசு மிகச் சிறியது என்று கை கூப்பினார். பணத்தை வேலப்பன் கையில் கொடுத்தார்.

போலீஸ் அதிகாரி "ரமேஷ், இப்படி வா தம்பி" என்று அழைத்து அவனுடன் கை குலுக்கினார்.

செங்கமலத்துக்குக்கையும்ஓடவில்லை; காலும் ஓடவில்லை. "ஐயா, என் குடிசையில் என்ன இருக்கிறது! கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள், சோடா வாங்கி வரச் சொல்கிறேன். எல்லோரும் சாப்பிட வேண்டும்" என்றாள்.


தலைமைஆசிரியர், "முதலில்ரமேஷை அழைத்துப் போய் டாக்டரிடம் காட்டு. நாங்களும் வருகிறோம்" என்று சொன்னார்.

தலைமை ஆசிரியரைத் தொடர்ந்து சுந்தரம்,.போலீஸ் அதிகாரி ஆகியோர் வணக்கம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள்.

தன் நண்பன் ரமேஷிடம் சொல்லிக் கொண்டு ரவி துள்ளி ஓடினான்.

ரமேஷ் செய்த செயலைச் செங்கமலம் வேலப்பனுக்கு விரிவாகக் கூறினாள். வேலப்பன் மனம் உருகிவிட்டது. தான் அன்று ரமேஷை அடித்ததை எண்ணி வருத்தப்பட்டார்.

"ரமேஷ், புறப்படு கண்ணே! டாக்டரிடம் போகலாம்" என்று அணைத்தவாறு மகனை டாக்டரிடம் வேலப்பன் அழைத்துச் சென்றார்.



# அமிர்தாஞ்சன் அறியும் தலைவலியின் கடுமையை

தலைவலி என்றாலே தாங்க முடியாத வேதனைதான். அதைப்போக்க சுலபமானவழி, அமிர்தாஞ்சன். சிறிதளவு அமிர்தாஞ்சன் எடுத்து நன்றாக அழுத்தித் தேயுங்கள். தலைவலியிலிருந்து இதமான உடனடி நிவாரணம் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் மற்ற மருந்துகளைப் போலல்ல, அமிர்தாஞ்சனில் உள்ள சக்திமிக்க 10 மருந்துப் பொருட்கள் உடனடியாக செயல்புரிந்து வலியிலிருந்து உங்களுக்கு துரிதமாக நிவாரணம் அளிக்கின்றன. தீங்கு செய்யும் பின் விளைவுகள் எதுவுமில்லை.

85 ஆண்டுகளுக்கும் மேலாக புகழ்வாய்ந்த அமிர்தாஞ்சன் உடல்வலி, சுளுக்கு, ஜலதோஷம் மற்றும் தொண்டைப்புண் இவற்றிலிருந்தும் சிறந்த நிவாரணம் அளிக்கிறது.

எப்பொழுதும் அமிர்தாஞ்சன் உங்கள் கைவசம் இருக்கட்டும். ஏனெனில், அது எப்போது தேவைப்படுமென்று சொல்ல முடியாது.




## அமிர்தாஞ்சன்


துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது. தீய பின்விளைவுகள் இல்லாதது.

OBM 7652 TM



# சேகரின் பொழுது போக்கு






**சே**கர் வீட்டு முன்புறத்திலே ஒரு பெரிய மாமரம் இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சேகர் அந்த மரத்தடியிலே ஓர் அகலமான, ஆனால் ஆழமில்லாத பாத்திரத்தை வைத்தான். தினமும் காலையிலே அந்தப் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி நிரப்பினான்.

பாத்திரத்திலிருந்த தண்ணீரைக் குடிக்கத் தினமும் அங்கே சில பறவைகள் வந்தன. சில நாட்கள் சென்றதும், அந்தப் பாத்திரத்தைச் சுற்றி, சிலவகை தானியங்களைத் தூவினான். தண்ணீரைக் குடிக்க வந்த பறவைகள் தானியங்களையும் தின்றன.

சேகர் தினமும் சிறிது நேரம் அவற்றைப் பார்த்தான். ஒவ்வொரு பறவையையும் உற்றுப் பார்த்தான். அதன் நிறம் என்ன, தலை, அலகு, கால் விரல்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன, எப்படி அது சத்தம் போடுகிறது, எவ்வாறு பறக்கிறது, எப்படித் தண்ணீர் குடிக்கிறது, எந்த எந்தத் தானியங்களைத் தின்கிறது என்பதையெல்லாம் நன்கு கவனித்தான்.



ஒரு நாள் சேகர் ஒரு நோட்டுப் புத்தகத்தை வாங்கி வந்தான். அதில் அவனுக்குத் தெரிந்த பறவைகளின் படங்களைச் சில பத்திரிகைகளிலிருந்து வெட்டி ஒட்டினுன். ஒவ்வொரு பறவைக்கும் நாலு பக்கங்களை ஒதுக்கினுன். அந்த அந்தப் பக்கங்களில் அவன் பார்த்ததை உடனுக்குடன் குறித்துக் கொண்டான்.

பறவைகளைப் பார்க்கும் ஆர்வம் சேகருக்கு நாளுக்கு நாள் வளர்ந்தது. பிறகு அவை எங்கெங்கே செல்லுகின்றன, எங்கே கூடு கட்டுகின்றன, எந்தக் காலத்தில் முட்டை இடுகின்றன என்பதை யெல்லாம் பக்கத்தில் உள்ள தோட்டங்கள், தோப்புக்கள், பூங்காக்கள் முதலிய இடங்களுக்கு விடுமுறை நாட்களில் சென்று கண்டு கொண்டான். அவற்றையும் நோட்டுப் புத்தகத்திலே குறித்துக் கொண்டான்.



ஒரு நாள் அவனும் நண்பன் ராஜாவும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது, அவன் பறவைகளைப் பற்றிச் சொன்ன விவரங்களைக் கேட்டு ராஜா அசந்து போனுன்.

''ராஜா, சில பறவைகளில் ஆண் ஒரு நிறமாயிருக்கும்; பெண் ஒரு நிறமாயிருக்கும்.''

''உண்மையாகவா?''

''ஆமாம் ராஜா. குயில்களில் கருங்குயில், புள்ளிக் குயில் என்று இரண்டு வகை இருப்பதாகச் சொல்கிருர்கள். ஆனல் இரண்டும், வேறு வேறு அல்ல.









ஒரே வகைதான்! கறுப்பா யிருப்பது ஆண்; புள்ளியுடன் இருப்பது பெண்.''

''அடே, அப்படியா?''

''அவை கத்துவதில் கூட வித்தியாசம் தெரியும். நான் வீட்டுக்குள் இருந்துகொண்டே கண்டுபிடித்து விடுவேன்.''

''எப்படிக் கண்டுபிடிப்பாய்?''

''கியூ கியூ என்று பாடும் ஆண் குயில். குவிக், குவிக் என்று பாடும் பெண் குயில்.''

''சேகர், இந்தக் குயிலைப் போலப் பாடக் கூடிய பறவை ஏதேனும் இருக்கிறதா?''

''ஓ! வானம்பாடி, கரிச்சான், வண்ணாத்திக் குருவி, தையற்சிட்டு – இப்படிச் சில பறவைகளும் பாடும். ஆனாலும், குயிலைப் போல இனிமையாக இருக்காது. இன்னொரு விஷயம் உனக்குத் தெரியுமா? பறவைகளில் ஆண் பறவைகள்தான் அழகாக இருக்கும். பெண் பறவைகள்...''



''சுமாராகத்தான் இருக்கும். ஆண் மயிலுக்கு எவ்வளவு அழகான தோகை! பெண் மயில் வான்கோழி மாதிரி இருக்கிறது.''



''அதே போலத்தான் சேவலுக்குச் சிவப்பு நிறக் கொண்டையும், பலநிற முள்ள இறகுகளும் இருக்கும். பெட்டைக் கோழியின் நிறம் மங்கலாக இருக்கும். அடைக்கலாங் குருவியில் கூட ஆண் குருவிக்குத் தொண்டையில் கறுப்பாயிருக்கும். பெண் குருவிக்கு இருக்காது.''

''அது சரி, புறாக்களில் கூடப் பல வகை உண்டு என்கிறார்களே, சேகர், நீ பார்த்ததுண்டா?''



''இதோ என் நோட்டிலே எழுதி வைத்திருக்கிறேனே!... மாடப் புறா, மணிப் புறா, தவிட்டுப் புறா, பெரும் புறா, கள்ளிப் புறா என்று பல வகை உண்டு. நான் புறாவை நேரிலே பார்க்காமல் அது போடும் சத்தத்தி

விருந்தே அது எந்தப் புரு என்று கண்டு பிடித்து விடுவேன்.''

''ஏன் சேகர், பறவைகள் மரக் கிளைகளிலும் மரப் பொந்துகளிலும் தான் கூடு கட்டுமா?''

''நம் வீடுகளிலே பெரிய படங் களுக்குப் பின்னுலே அல்லது உத்தரத் துக்கும் கூரைக்கும் நடுவிலே குருவிகள் கூடு கட்டுவதை நீ பார்த்ததில்லையா? சில பறவைகள் கிணற்றுக்குள் இருக் கிற மாடங்களிலே கூடக் கூடு கட்டி விடுகின்றன.''

''சேகர், நமது மாரியம்மன் கோயில் பக்கத்திலே இருக்கிற நெட்டைத் தென்னை மரத்திலே பார்த்திருப்பாயே! பத்துப் பதினைந்து கூடுகள் சுரைக் காய் போலத் தொங்கிக் கொண் டிருக்கின்றன.''

''எல்லாம் தூக்கணங் குருவிக் கூடுகள்!''

''சரி சேகர், பறவைகளைப் பற்றி இவ்வளவு தூரம் தெரிந்து வைத் திருக்கிருயே, மரங்களில் ஏறிப் பறவை முட்டைகளைப் பார்த்திருக்கிருயா?''

''ஓ! நாலைந்து தடவைகள் பார்த் திருக்கிறேன். பறவைகள் இல்லாத போது, மரத்திலே ஏறிப் பக்கத்துக் கிளையிலே நின்று கொண்டு எட்டி எட்டிப் பார்ப்பேன். ஆனல் தாய்ப் பறவை இருந்தால் அது பார்க்கவிடாது. இறகைப் படபடவென்று அடித்துக் கொண்டு கூச்சல் போடும். உடனே இறங்கி விடுவேன்.''

''ஏன் பறவை கொத்திவிடும் என்ற பயமா?''

''ராஜா, பயத்தினல் அல்ல. நாம் ஏதோ பொழுது போக்கிற்காகவும், பொது அறிவு வளர்வதற்காகவும் இப் படிச் செய்கிறோம். அதே சமயம், பற வைகளுக்கு நாம் தொந்தரவு கொடுக்க லாமா? அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து மகிழ்ச்சியாக வாழ வேண்டாமா?

''சேகர், இனி நானும் உன்னைப் போல் ஒரு நோட் புத்தகம் போட்டு..''

''என்போல் பறவைகளைப் பற்றித் தெரிந்து கொண்டு குறித்து வைக்கப் போகிருய். அப்படித்தானே?''

''இல்லை, இல்லை. நான் மிருகங்களைக் கவனித்துக் குறிப்பெழுதப் போகி றேன்.''

''சரி,முதலில் சிங்கத்தைப் பற்றியா? புலியைப் பற்றியா?''

''ஐயையோ! அதெல்லாம் என்னுலே முடியுமா? முதலில் வீட்டு மிருகங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போகி றேன். தெரிந்து கொண்டதைக் குறித்து வைக்கப் போகிறேன்.''



**உங்கள் பொழுதுபோக்கு...?**

தபால்தலை சேகரிப்பது, தீப் பெட்டிப் படம் திரட்டுவது, நாணயங்கள் சேர்ப்பது, கை யெழுத்து வாங்குவது போன்ற பல வகையான பொழுதுபோக்குகளில் பலர் ஈடுபட்டிருப்பீர்கள்.



பறவைகளைப் பார்ப்பதும் ஒரு நல்ல பொழுது போக்குத்தான்! Bird watching என்று ஆங்கிலத் தில் இதைச் சொல்லுவார்கள்.

நீங்கள் இப்படி ஏதேனும் புது விதமான ஒரு பொழுது போக் கிலே ஈடுபட்டிருந்தால் கோகுலத் திற்கு எழுதி அனுப்புங்கள். தகுதி யானதை வெளியிடுவோம்.

—ஆசிரியர்—

# நாடோடிப்



யார் பாடியது?
எப்போது பாடியது?
தெரியாது.
தாத்தா பாடினார்; தாத்தாவுக்குத் தாத்தாவும் பாடியிருக்கலாம்.
பாட்டி பாடினாள்; பாட்டிக்குப் பாட்டியும் பாடியிருக்கலாம்.
அப்பா பாடினார்; அம்மாவும் பாடினாள்.
நாமும் இப்போது பாடுகிறோம்.
இதுதான் நாடோடிப் பாட்டு!

**காலை எழுந்தவுடன்:**

பொழுதெப்போ விடியும்?
பூ எப்போ மலரும்?
சிவன் எப்போ வருவார்?
வரம் எப்போ தருவார்?

**இரவு படுக்கப் போகும்போது:**

அரின்னு பேர் சொல்லி
அச்சுதான்னு பாய் விரிச்சு
கிருஷ்ணான்னு படுத்தவர்க்குக்
கேடில்லை ஒரு நாளும்.
கோவிந்தான்னு படுத்தவர்க்குக்
கேடில்லை ஒரு நாளும்.

**மூன்று காய்கள்:**

ஊர் என்ன?
ஊறுகாய்.
பேர் என்ன?
பேரிக்காய்.
சாதி என்ன?
சாதிக்காய்.

**நிலாப் பாட்டு:**

எட்டி எட்டிப் பார்க்கும்
வட்ட வட்ட நிலாவே!
துள்ளித் துள்ளிச் சிரிக்கும்
தும்பைப் பூவு நிலாவே

**மாமா கடை லட்டு:**

மாமா கடை லட்டு
மடியில் வாங்கிக் கட்டு
எடுத்துக் கொஞ்சம் பிட்டு
எனக்கு முன்னே இட்டு
உண்டுவிட்டு ஏப்பம்
ஒடு கொஞ்சம் பார்ப்போம்!

**அய்யாசாமி கல்யாணம்:**

அய்யாசாமிக்குக் கல்யாணம்
அவரவர் வீட்டிலே சாப்பாடு

# பாடல்கள்



கொட்டு மேளம் கோயிலிலே
வெற்றிலை பாக்குக் கடையிலே
சுண்ணாம்பு சூளையிலே!


**சமையல் விளையாட்டு:**

அரிசியைக் குத்து முன்னே
அரித்துக் கழுவு பின்னே
உலையில் அரிசி போடு
உடனே மேலே மூடு
கொதித்து வந்தபின் வடித்து
கொட்டி ஆற்றி எடுத்து
கத்தரிக்காயை அரிந்து
காரம் புளிப்புத் தெரிந்து
உப்பு மசாலும் போட்டு
ஒத்திருக்கக் கூட்டு
வெந்த பின்னே தாளித்து
விரித்து இலையைப் போட்டு
எல்லாரும் கூடிப் புசிப்போம்
இன்ப மாகக் களிப்போம்.



**ளொள், சில், கல்**

அத்தை வீட்டு வாசலிலே
உட்காரப் போனேன்.
அடுத்த வீட்டு நாய்வந்து
'ளொள்'ளுன்னுச்சாம்.
கையும் காலும்
'சில்'லுன்னுச்சாம்.
கண்ணாடி வளையல்
'கல்'லுன்னுச்சாம்.



**சடுகுடு விளையாட்டு**

நான்தான் வீரன்
நல்லமுத்து பேரன்
வெள்ளிப் பிரம்பெடுத்து
விளையாட வாரேண்டா
தங்கப் பிரம்பெடுத்து
தாலிகட்ட வாரேண்டா
வாரேண்டா
வாரேண்டா
கருணைக் கிழங்கடா
வாழைப் பழமடா
தோலை உரியடா
தொண்டைக்குள் அடையடா
அடையடா
அடையடா
பலிஞ் சடுகுடு அடிப்பானேன்?
பல்லு ரெண்டும் போவானேன்?
உங்க அப்பனுக்கும் அம்மாயிக்கும்
ரெண்டு பணம் தண்டம்
தண்டம்
தண்டம்





மாஸ்டர் குமார்

# கைக் குழந்தையிலேயே நடித்தேன்!

அவர் என்னை 'வாடி குமாரி' என்று கிண்டலாகக் கூப்பிடுவார். ஏனென்றால் நான் பல தெலுங்குப் படங்களில் பெண் வேடமும் போட்டதுண்டு. அப்போது எனது வயது நான்குதான்.

அன்று மெரினா கடற்கரையில் எனக்கும் சிவாஜி சாருக்கும் ஷூட்டிங். காட்சிப்படி நான் விளையாட்டாகக் கடலில் இறங்கி விடுகிறேன். அப்பா (சிவாஜி சார்) பதறிப்போய் என்னைப் பொங்கி வரும் அலைகளிலிருந்து காப்பாற்றுவார்.

''குமாரி, அதோ பார் அங்கே போய் விளையாடு'' என்று கடலைக் காட்டினார்கள்.

விவரம் தெரியாமல் கடகடவென்று கடலில் இறங்கி விட்டேன். ஒரு ராட்சத அலை. உடலெல்லாம் நனைந்து ஒரே மண். பயத்தில் ''ஓ''வென்று அழுதேன்.

சிவாஜி சார் எப்படியோ எனக்கு 'ஃபாண்டா' என்றால் பிடிக்கும் என்று தெரிந்து வைத்திருந்தார்!

அவர் உடனே எனக்கு இரண்டு ஃபாண்டா கொடுத்தார். அழுகையை நிறுத்திவிட்டேன். 'மயங்குகிறாள் ஒரு மாது' படத்தில் முத்துராமன் சார் மகனாக நடித்தேன்.

''எங்கள் வீட்டில் ஏற்கனவே இரண்டு நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். அண்ணன் பிரபாகர், அக்கா சுமதி. அவர்கள் இருவருமே குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர்கள்தான். நான் கைக்குழந்தையாக இருக்கும்போது அக்கா நடிக்கும் படப்பிடிப்புக்கு அம்மாவுடன் போவேன். 'சிநிந்திரி சிட்டி பாபு' படத்தில் சாரதா அம்மாவின் கைக்குழந்தையாக நடித்தேன். அப்போது எனக்கு வயது மூணு மாசம் தானாம்! 'திக்குத் தெரியாத காட்டில்' படத்தில் நடித்தபோது எனது வயது ஒன்று!

நினைவு தெரிந்து நான் நடித்த முதல் படம்: 'வைகுண்ட பாலி' (தெலுங்கு) அதில் அஞ்சலி தேவி அம்மாவின் மகனாக நடித்தேன். சிறு வயதிலிருந்தே அண்ணனும் அக்காவும் நடிப்பதை நான் நேரில் பார்த்திருந்ததால் படப்பிடிப்பில் எனக்குக் கூச்சமோ கஷ்டமோ எதுவும் இல்லை. விளையாட்டாகவே நடித்துவிட்டேன்!

**கடலில் உருண்டேன்!**

'அவன்தான் மனிதன்' படத்தில் சிவாஜி சாரின் மகனாக நடித்தேன்.

**தீயின் நடுவில்**

'அன்னக்கிளி' படப்பிடிப்பு தெங்குமராட்டாவில் நடந்தது. அங்கு இருபது நாட்கள் தங்கியிருந்தேன். சிவகுமார், சுஜாதா, ஃபடாபட் எல்லோரும் என்னுடன் தமாஷாக விளையாடுவார்கள். பொழுது போவதே தெரியாது.

சேலத்தில் ஒரு டெண்ட் கொட்டகை போட்டுப் படத்துக்காக அதைக் கொளுத்தி விட்டார்கள். காட்சிப்படி சுஜாதா அக்கா என்னைத் தீயிலிருந்து காப்பாற்ற வேண்டும். நான் தைரியமாக நெருப்பில் நுழைந்து ஓடிவந்தேன். டைரக்டர்கள் தேவராஜ்-மோகன் இருவரும் ''பலே குமார் பையா! இன்னிக்கு உனக்கு பிரியாணி விருந்துதான்'' என்றார்கள்.

'முத்திரை மோதிரம்' என்ற மலையாளப் படத்தில் பணக்காரப் பிள்ளையாக நடித்தேன். அதில் 'ஜூலி' என்ற முரட்டு அல்சேஷன் நாய் நடித்தது. கதைப்படி அது நான் வளர்க்கும் நாய்,

முதல் நாள் அந்த நாயைப் பார்த்ததுமே பயமாக இருந்தது. பிஸ்கட், பன் கொடுத்துச் சிநேகம் பிடித்துவிட்டேன். இரண்டு நாள் கழித்து அந்த நாய் என்னுடன் பழகி விட்டது. படப்பிடிப்பு முடிந்து வீட்டுக்குக் கிளம்பினால்கூட என்னுடன் காரில் ஏறிக் கொள்ளும். அந்த அளவுக்குப் பிரியம்!

**குரங்குக்கு குஷி**

'அனுபவங்களே நன்றி' என்ற மலையாளப் படத்தில் 'மல்லு' என்ற குரங்குடன் நடிக்க வேண்டும். படப்பிடிப்பு திருச்சூரில். அதனால் ஒரு வாரம் முன்பே ஒரு குரங்காட்டி தனது குரங்குடன் என்னைப் பழக வைத்தான். ஆரம்பத்தில் என்னைப் பயமுறுத்தியது. 'மல்லு' வுக்குத் தக்காளிப் பழம் என்றால் உயிர். நான் மார்க்கெட்டில் நல்ல ஊட்டித் தக்காளியாக வாங்கி வந்து அதற்குக் கொடுக்க ஆரம்பித்தேன். சந்துணவு கிடைத்ததும், 'மல்லு' குரங்காட்டியிடம் போக மறுத்து விட்டது. சதா என்னிடம் பாசத்துடன் ஒட்டிக்கொண்டது. அப்புறம் திருச்சூரில் படப்பிடிப்பு ஜாம் ஜாம் என்று நடந்தது.

'அன்பே சங்கீதா' படத்தில் சுமித்ராவின் முரட்டுப் பையனாக நடித்தேன். மழலைப் பட்டாளத்தில் கவுன் போட்டுக்கொண்டு பெண்ணாக நடித்தேன்.

**கிணற்றிலிருந்து தப்பினேன்!**

'ராமன் பரசுராமன்' தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் நடித்தேன். ஒரு காட்சியில் வில்லன் ஏ.ஆர்.எஸ். என்னைக் கிணற்றில் தூக்கிப் போடுவார். நான் தப்பி வரவேண்டும். விஜயா கார்டனில் ஒரு கிணற்றில் போட்டார். குழாயைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறிவர ஸ்டண்ட் மாஸ்டர் பயிற்சி யளித்தார். மூச்சு முட்ட நடித்தேன்.

படங்களில் நடிப்பதற்காகவே சவேரா ஓட்டலில் நீச்சல் கற்றேன். இப்போது மாஸ்டர் கராத்தே மணியின் தம்பி கூஜோ கானிடம் கராத்தே கற்று வருகிறேன்.

'சங்கிலி' படத்தில் சிவாஜி சார் மகனாகவும், 'காற்றுக்கென்ன வேலி' படத்தில் எம். எல். ஏ. யின் (தேங்காய்) பி.ஏ. ஆகவும் நடித்தேன். 'பௌர்ணமி நிலவில்' இந்திப் படத்தில் யானையுடன் நடித்தது தமாஷாக இருந்தது.

**சின்ன ராஜா**

போன மாதம் மாடர்ன்தியேட்டர்ஸ் எடுத்த 'வெற்றி நமதே' படத்தில் சின்ன ராஜேஷாக நடித்தேன். வில்லன் வீரப்பா சார் என்னை ஒரு காட்சியில் தூக்கி வீசுவார். ஒத்திகை முடிந்தது. ஷாட்டில் அவர் என்னை வீசியதும் எனது பின் முதுகில் நல்ல அடி பட்டுவிட்டது. அனைவரும் பதற்றப்பட்டனர். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றேன். நல்ல வேளை; எக்ஸ்ரே எடுத்ததில் எலும்பு முறிவு ஏதுமில்லை! தப்பினேன்.

**தாலி கட்டினேன்!**

'மூடுமுள்ள பந்தம்' என்ற தெலுங்குப் படத்தில் எனது அண்ணனுக்கும் (கிருஷ்ணராஜு) மாதவிக்கும் கல்யாணம். அருகிலிருக்கும் நான் அண்ணனிடம் 'கல்யாணம் என்றால் என்ன?' என்று கேட்பேன். 'பொம்மைக் கல்யாணம் பார்த்ததில்லையா? அதுமாதிரி தான். பொம்பளைக்குத் தாலி கட்டுவதுதான் கல்யாணம்'' என்பார் அண்ணன். அவர் மாப்பிள்ளை டிரஸ் மாற்றி வர ரூமுக்குப் போவார். அங்கே எலக்ட்ரிக் ஷாக் அடித்துத் திடீரென்று இறப்பார். ஒரே பரபரப்பு. மணமேடையில் காத்திருக்கும் நான், அண்ணன் சொன்னதை நினைத்து அண்ணியாகவிருக்கும் மாதவி அக்காவுக்குத் தாலி கட்டி விடுகிறேன்! அவரது (மாதவி) கண்களுக்கு நான் கிருஷ்ணராகத் தெரிவேன். அதனால் அவர் என்னைக் கணவராக நினைத்து வளர்ப்பார்.

■ அக்கா சுமதியுடன் குமார்





நானே அண்ணியாகப் பழகுவேன். நல்ல திருப்பங்கள் நிறைந்த கதை. அன்று ஷூட்டிங் முடிந்ததும் ''டேய் குமார், பெரிய ஆளாயிட்டேடா, ஹீரோயினுக்குத் தாலிகூடக் கட்டிட்டியே?'' என்று கேலி செய்தார்கள். சிரித்துக் கொண்டே நழுவி விட்டேன்.

### கிள்ளுக்கு ரேட் பத்து ரூபாய்!

நான் சதா சிரித்துக் கொண்டேயிருப்பேன். அழத் தெரியாது! அதனால் ஒரு மலையாளப் படத்தில் அழுது நடிக்க டைரக்டர் சசிகுமார் ஒவ்வொரு காட்சியிலும் தொடையில் கிள்ளுவார். பயங்கரமாக வலியெடுக்கும். அழுவேன். சீன் முடிந்ததும் கிள்ளியதற்காகப் பத்து ரூபாய் கொடுப்பார். இப்படி நிறையக் கிள்ளு வாங்கியே இருநூறு ரூபாய் எக்ஸ்ட்ராவாகச் சேர்த்தேன்.

'அன்னக்கிளி' டப்பிங்கின்போதும் நான் அழ வேண்டியிருந்தது. ஆனால் நானே சிரித்தேன். அம்மா டைரக்டர்கள் தேவராஜ் மோகனிடம் டைரக்டர் சசிகுமார் என்னை அழவைத்த ரகசியத்தைக் கூறினர். ''அப்படியா? அழக்கூட ரேட் வைச்சுட்டானு பயல்? சரி கொடுத்துடுவோம்'' என்று சொல்லிக் கொண்டே டைரக்டர்கள் (தேவராஜ், மோகன்) இருவரும் நன்றாக வலி எடுக்கிற அளவுக்குக் கிள்ளி விட்டார்கள்.

புரொடியூசர் விக்கிரம் சீனிவாசன் சார் பெங்களூரில் (ஜனபலவோ-அனபலவோ) என்ற கன்னடப்படத்தில் என்னை நடிக்க வைத்தார். ''சங்கர் நாக்'' குடன் ஒரு நாள் இரவு முழுவதும் கண் விழித்து நடித்தேன். அதைப் பாராட்டி விக்ரம் சார் எனக்குப் பரிசாக மோதிரம் வாங்கிக் கொடுத்தார்.

### நடித்த படங்கள் 93

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி போன்ற ஐந்து மொழிகளில் நடித்திருக்கிறேன். கைவசம் ஒரு டஜன் படங்கள் உள்ளன. எனக்கும் வயது பன்னிரண்டாகிவிட்டது. நிறையப் படங்களில் நடித்தாலும் படிப்பு அவசியம். நன்றாகப் படித்தால்தான் ஒளி மயமான எதிர்காலத்தை எட்ட முடியும். அதனால் மாம்பலம் தி. நகர் ஹைஸ்கூலில் ஆறாம் வகுப்பு படிக்கிறேன். அடிக்கடி நடிக்கப் போவதால் படிப்பு பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்கிறேன். கால் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் அறுபது சதவீதத்துக்கு மேல் வாங்கியிருக்கிறேன். அரைப் பரீட்சையில் எண்பது பர்ஸண்ட் வாங்க முயலுவேன்.

ஓய்வு நேரங்களில் நிறைய இங்கிலீஷ் படம் பார்ப்பேன்.

படிப்பிலும் வெற்றி கண்டு, எதிர்காலத்தில் நடிப்பிலும் சுடர் விடவேண்டும் என்பது எனது ஒரே ஆசை!

பேட்டி: **மன்னை செளரிராஜன்**

---

### ஆங்கிலத்தில் தமிழ் சொற்கள்

கறி — Curry
மாங்காய் — Mango
காசு — Cash
கயிறு — Coir
சந்தனம் — Sandal
கட்டுமரம் — Catamaran
தேக்கு — Teak

ஆங்கிலேயர்கள் முதல் முதலாக நம் நாட்டுக்கு வந்தது வியாபாரம் செய்யத்தான் என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது, நம் தமிழ் நாட்டில் சில பொருள்களை அவர்கள் கண்டார்கள். அவற்றை ஆங்கிலத்தில் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. காரணம், அவர்கள் நாட்டில் அந்தப் பொருட்கள் இல்லை.

நாம் தமிழில் எப்படி அழைக்கிறோம் என்பதைக் கேட்டுக் கேட்டு அதே போல்கிட்டத்தட்ட அவர்களும் அழைக்கத் தொடங்கினார்கள். அப்புறம் அதே போல் ஆங்கிலத்தில் எழுதினார்கள். ஆங்கில அகராதியிலும் அந்தச் சொற்களைச் சேர்த்துக் கொண்டு விட்டார்கள்!






# WINNER OF 24 AWARDS INCLUDING 4 NATIONAL AWARDS AND 1 INTERNATIONAL AWARD FOR QUALITY

## 'SUGANDHA SHRINGAR' is made for your prayer and pleasure.




ARAVINDA PARIMALA WORKS.
MYSORE-570 004.

VIKAS/APW/182

# கைக்குடையும் கால்செருப்பும்

—நாகரத்தினம்—

கையில் குடையும், காலில் செருப்புகளும் போட்டவாறு அவன் வேகமாக வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான்.

செருப்பு 'சரக், சரக்' என்று முனகி மெல்லப் பேசத் தொடங்கியது. ''என்ன குடையாரே, நலம்தானே? ஏதோ நீ தலைக்கு மேலே இருப்பதால் அந்த மமதை உனக்கு. அதனால்தான் என்னுடன் பேசாமல் இருக்கிறாய்.''

''ஐயய்யோ! அப்படி ஒன்றுமில்லை'' என்றது குடை.

செருப்பு விடவில்லை. வீணாக வம்புக்கிழுத்தது. ''கறுப்பாக இருக்கும்போதே உனக்கு இப்படி என்றால்... என்னைப் போல் அழகாக இருந்துவிட்டால் உன்னை ப்பார்க்கவே முடியாது.''

முகம் இன்னும் கறுத்தது குடைக்கு.

''குடையாரே? நீ மனிதனின் தலைக்கு மேல் இருந்தாலும் நான்தான் இவனுக்கு அவசியமானவன். உன்னைக் கோடை வெய்யிலிலும் குளிர் மழையிலும்தான் மனிதன் நினைப்பான். நான் அப்படி இல்லை. பகலோ, இரவோ, காடோ, மேடோ, கல்லோ முள்ளோ நான்தான் இந்த மனிதர்களைக் காக்கிறேன்.'' ஆணவத்துடன் சொன்னது செருப்பு.

''உண்மைதான். நீ பெருமை வாய்ந்தவன்தான்.'' என்று அடக்கத்துடன் சொன்னது குடை.

''இந்தப் பெருமை மட்டுமல்ல. இராமர் காலத்தில் 14 ஆண்டு காலம் அயோத்தியில் அரியாசனத்தில்அமர்ந்து அரசு செலுத்தியிருக்கின்றேன். இந்தப் பெருமை யாருக்கு வாய்க்கும்?'' செருப்பு கர்வத்துடன் சொன்னபோது,

குடை தானும் தன் பெருமைகளை—வெண் கொற்றக் குடைகளின்பெருமைகளைச் சொல்லலாம் என்று வாயைத் திறக்கும்போது, அந்த மனிதன் தன் வீடு வந்து சேரவே, குடையை மடக்கிக் கையில் வைத்துக் கொண்டான்.

குடை வாயை மூடிக் கொண்டது.

அடக்கம் அதன் வடிவிலும் தெரிந்தது.

அவன் வீட்டு வாயிற்படிக்கு வெளியில் செருப்பைக் கழற்றி வைத்துவிட்டுக் குடையுடன் உள்ளே நுழைந்தான்.


குடை சிரித்துக் கொண்டே செருப்பைப் பார்த்துச் சத்தமாகவேகேட்டது. ''ஏன் அங்கேயே இருந்து விட்டாய்?''

செருப்பின் முகம் தொங்கி விட்டது. ''உள்ளே வரஎனக்கு அருகதை இல்லை''

இதுவரை பெருமையாக, ஆணவமாகப் பேசிய செருப்பு இருந்த இடம் தெரியாமல் ஓரமாய்க் கிடந்தது.

குடை எண்ணிப் பார்த்தது.

'அடக்கம் அமரருள் உய்க்கும்—
அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்'





# கேள்வி நேரம்

உமா: வாசு, வீணா, சிவகுமார், இப்போ உங்களை நான் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். எங்கே சரியான பதில் சொல்லுங்க, பார்க்கலாம். கப் அண்ட் சாசரிலே கப் இருக்குதே—அதுதான் கோப்பை—அதன் கைப் பிடி எந்தப் பக்கம் இருக்கும்?

வீணா: வலது பக்கம்.

சிவகுமார்: இல்லே, இடது பக்கம்.

வாசு: இரண்டும் தப்பு. வெளிப் பக்கம் தான் இருக்கும்.

உமா: வாசு, வெளிப் பக்கம்னு நீ சொன்னதுதான் சரி. கோப்பையை வலது பக்கமாய்ப் பிடித்தால், கைப் பிடி வலப் பக்கம் இருக்கும். இடது பக்கமாகப் பிடித்தால் இடப் பக்கம் இருக்கும். அதனாலே, வாசு வெளிப் பக்கம்னு சொன்னதுதான் சரி. வீணா, நீ கிளி பார்த்திருக்கிறாயா?

வீணா: ஓ! பார்த்திருக்கிறேனே!

உமா: எங்கே பார்த்திருக்கிறாய்?

வீணா: மரத்தடியிலே கிளி ஜோஸ்யர் சொல்றாரே, அவருக்கிட்டே பார்த்திருக்கிறேன்.

உமா: சரி, கிளிக்கு எத்தனை கால்கள்?

வீணா: ப்பூ... இதுகூடத் தெரியாதா? இரண்டு.

உமா: சரி, கிளியினுடைய ஒரு காலில் எத்தனை விரல்கள் இருக்கும்?

வீணா: அஞ்சு.

உமா: தப்பு.

வாசு: நாலு.

உமா: அதுவும் இல்லேன்னா மூணுன்னு சொல்லுவீங்க. ஆனால், நாலுங்கிறதுதான் சரி... போகட்டும். அந்த நாலு விரல்களிலே முன்னாலே எத்தனை விரல்கள் இருக்கும்? பின்னாலே எத்தனை விரல்கள் இருக்கும்?

வீணா: முன்னாலே ஒண்ணு, பின்னாலே மூணு.

உமா: தப்பு, தப்பு.

வாசு: நான் சொல்லட்டுமா? முன்னாலே மூணு; பின்னாலே ஒண்ணு.

உமா: வாசு, நீ சொன்னதும் தப்பு. நானே சொல்லிவிடுறேன். முன்னாலே இரண்டு; பின்னாலே இரண்டு விரல்களிருக்கும்.... வீணா, இன்னொரு தடவை கிளி ஜோஸ்யர்கிட்டே போய் நல்லாப் பார்த்துட்டு வா.

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

உமா: இன்னொரு கேள்வி. மேஜை நடுவே என்ன இருக்கும்?

வீணா: புத்தகம்.

உமா: இல்லே.

வாசு: தட்டு.

உமா: இல்லே.

சிவகுமார்: பேனா.

உமா: இல்லே.

வீணா: நான் சொல்றேன்.

உமா: வீணா, நீ இந்தக் கேள்விக்கு இரண்டாம் தடவையாய்ப் பதில் சொல்கிறாய். இப்பவாவது சரியாச் சொல்லு.

வீணு: இதோ சரியான பதில். டேபிள் நடுவே 'B' தான் இருக்கும். TABLE என்ற ஐந்தெழுத்துக்கு நடுவிலே இருப்பது 'பி' தானே!

உமா: கரெக்ட். வீணு சரியாச் சொல்லிட்டாள். அடுத்ததாக ஒரு கேள்வி. ஆகாயத்திலே பிறைச் சந்திரன் தெரியுது. பார்த்தவுடனே அது வளர்பிறையா, தேய்பிறையா என்று எப்படிக் கண்டுபிடிப்பீங்க?

சிவகுமார்: வளர்பிறையாயிருந்தால், கீழே இருந்து மேல் பக்கமா படகு போல் வளைஞ்சிருக்கும். தேய்பிறையாக இருந்தால் மேல் பக்கத்திலேயிருந்து கீழ்ப் பக்கமா குடைபோல் வளைஞ்சி இருக்கும்.

உமா: அடே, சிவகுமார் உடனே சொல்லிட்டானே! கெட்டிக்காரன்! இப்போது ஒரு கணக்கு. 6 மணி அடிக்க 30 விநாடிகள் ஆகுது. 12 மணி அடிக்க எத்தனை விநாடிகள் ஆகும்?

வாசு: 60 விநாடிகள்.

உமா: இல்லே.

வீணு: 63 விநாடிகள்.

உமா: சிவகுமார், உனக்குத் தெரியுமா?

சிவகுமார்: நீங்களே சொல்லிடுங்க அக்கா.

உமா: ஒன்றுக்கும் ஆறுக்கும் உள்ள இடைவெளிகள் ஐந்து. ஐந்து இடைவெளிகளுக்கு 30 விநாடிகள் என்றால் ஒரு இடைவெளிக்கு எத்தனை விநாடிகள்?

வீணு: ஆறு விநாடிகள்.

உமா: அதே போலத்தானே ஒன்றுக்கும் 12க்கும் உள்ள இடைவெளிகளைத் தெரிந்து கொண்டு...

வாசு: தெரியும்; தெரியும். பதினொரு இடைவெளிகளு. ஒரு இடைவெளிக்கு 6விநாடின்னு 11 இடைவெளிகளுக்கு 11 × 6 = 66 விநாடிகள்.

உமா: ஆம், சரியான விடை 66 விநாடிகள்தான்! இப்போது வேறொரு விதமான கேள்வி. ஒரு மேஜை மேல் ஒரு தட்டு இருந்தது. அந்தத் தட்டிலே 10 ஆரஞ்சுப் பழங்கள் இருந்தன. மேஜையைச் சுற்றி 10 குழந்தைகள் நின்றார்கள். அவர்கள் ஆளுக்கு ஒரு பழமாக எடுத்துக் கொண்டார்கள். அப்படியும் தட்டிலே ஒரு பழம் இருந்தது.

வாசு: அது எப்படி இருக்க முடியும்?

உமா: இருந்தது.

சிவகுமார்: நான் சொல்கிறேன். கடைசிக் குழந்தை, தனக்குச் சேரவேண்டிய பழத்தைத் தட்டோடு எடுத்துக் கொண்டது.

உமா: ரொம்ப சரி. இன்னொரு சுலபமான கணக்கு. 4 மீட்டர் அகலம், 4 மீட்டர் நீளம், 4 மீட்டர் ஆழம் உள்ள குழியிலே எவ்வளவு மண் இருக்கும்?

வீணு: இதோ சொல்றேன். 4 × 4 × 4...

வாசு: ஏனக்கா, அந்தக் குழியிலே எவ்வளவு மண் இருக்கும்னுதானே கேட்டீங்க; மண் இருந்தால் அதை எப்படிக் குழின்னு கூற முடியும்?

உமா: வாசு, உண்மையிலேயே நீ கெட்டிக்காரன்தான். இன்னொரு கேள்வி. நல்ல கோடைக் காலம். இரவு நேரம். மழை இல்லே. அந்த நேரத்தில் தூரத்திலே ஒரு ரயில் போகுது. அது பாசஞ்சர் ரயிலா, கூட்ஸ் ரயிலான்னு எப்படிக் கண்டு பிடிப்பீங்க?

வாசு: மூசு மூசுன்னு திணறினால் அது கூட்ஸ் ரயில். சத்தம் குறைச்சலாயிருந்தால் பாசஞ்சர் ரயில்.

உமா: இதைவிடச் சுலபமா ஒரு வழி இருக்கு.

வீணு: எனக்குத் தெரியும்; எனக்குத் தெரியும்.

உமா: வீணு, தெரிஞ்சால் சொல்லேன்.

வீணு: கோடைக் காலம் மழையும் இல்லே; இரவு நேரம். அதனாலே ஜனங்கள் போகிற வண்டியாயிருந்தால் ஒவ்வொரு பெட்டியிலும் ஜன்னல் திறந்திருக்கும், வரிசையாக வெளிச்சம் தெரியும். கூட்ஸ் ரயிலாயிருந்தால் அதிக வெளிச்சம் தெரியாது.

உமா: வீணு, நீ உண்மையிலே புத்திசாலிதான்.

## யாருக்கு அதிக மார்க்?

சரியான விடைக்கு +1 மார்க். தவறான விடைக்கு −½ மார்க். முதலில் தவறான விடைசொல்லி, பிறகு சரியான விடை சொன்னால் முதலில் சொன்ன தவறான விடைக்கு −½ மார்க். பிறகு சொன்ன சரியான விடைக்கு +1 மார்க். இப்பொழுது வாசு, வீணு, சிவகுமார் ஒவ்வொருவருக்கும் எத்தனைமார்க் போடுவீர்கள்? நீங்களே போட்டுப் பார்த்து யார் அதிக மார்க் வாங்குகிறார்களோ, அவர்களை இருந்த இடத்தில் இருந்தே பாராட்டுங்கள்.

புகைப்படம்: எம். வி. ரமணி

# கலிவரின் பயணங்கள்

தமிழ்ச் சுருக்கம் : **எச். கிருஷ்ணமூர்த்தி**

என் பெயர் லாமுவல் கலிவர். நான் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு கப்பல் மருத்துவர். கிழக்கு இந்தியத் தீவுகளுக்கும் மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் அநேக முறை கடல் பயணம் செய்திருக்கிறேன். தென் கடலுக்குச் செல்லும் 'ஆண்டி லோப்' என்ற கப்பலின் தலைவர் எனக்கு அழைப்பு விடுத்தார். நல்ல சம்பளம். ஒப்புக்கொண்டேன். 1699- ஆம் ஆண்டு மே மாதம் நான்காம் தேதி எங்கள் பாய்மரக் கப்பல் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டது. மனைவி, மக்களிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டேன். விநோதமான பல அனுபவங்கள் இந்தப் பயணத்தில் எனக்கு ஏற்பட்டன.

வழியில் பயங்கரப் புயல். ஒரு பாறையில் மோதி எங்கள் கப்பல் இரண்டாக உடைந்தது. நண்பர்கள் கடலில் மூழ்கிப் போயினர். மிகுந்த கஷ்டப்பட்டு, நீந்தி நீந்தி நான் மட்டும் கரையை அடைந்தேன். களைத்துப் போய் விட்டேன். வீடுகளோ மனிதர்களோ கண்ணில் படவில்லை. கடற்கரையிலேயே படுத்து நெடு நேரம் தூங்கினேன்.

அடுத்த நாள் எழுந்திருக்க முயன்றேன். முடியவில்லை. என் கைகளையும் கால்களையும் யாரோ கயிற்றால் கட்டியிருந்தனர். உடல் முழுதும் கட்டுகள். தரையில் ஆணிகளை அடித்து இழுத்துக் கட்டியிருந்தனர். என் நீண்ட தலை முடியையும் அவ்வாறே செய்திருந்தனர். என்னைச் சுற்றி ஒரே இரைச்சல். தலையைக் கூடத் திருப்ப முடியவில்லை. ஆகாயத்தைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை. என் காலிலிருந்து தலையை நோக்கி ஏதோ சில நகர்வதைப் போன்ற உணர்வு. கீழ் நோக்கிப் பார்த்தேன். ஒரு சின்னஞ் சிறு மனிதன் கையில் அம்பு வில்லுடன் நிற்பதைக்கண்டேன். அவன் உயரம் ஆறே அங்குலம்தான்! அவனைப் போல் பலர் என் மீது ஓடிக் கொண்டிருந்தனர். நான் உரக்கக் கூவினேன். அவர்கள் பயத்தால் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர்.

உடனே திரும்பி வந்தனர். புரியாத வார்த்தைகளைச் சொல்லிக் கூச்சலிட்டனர். கட்டுக்களிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள முயன்றேன். அதைப் பார்த்து அந்தச் சின்னஞ்சிறு மனிதர்கள் ஆரவாரம் செய்தனர். ஆயிரக் கணக்கான அம்புகளை எய்தனர். அவை என் மீது ஊசிகளைப் போல் பாய்ந்தன. ஆகவே, இருட்டும் வரை அசையாமல் இருப்பது, பிறகு விடுவித்துக்கொள்வது எனத் தீர்மானித்தேன்.

என்னை வேடிக்கை பார்க்கும் கூட்டம் அதிகரித்தது. கூச்சலும் கூடியது. எனக்கு எதிரில் ஒரு மேடை அமைத்தனர். ஒரு தலைவர் அதில் ஏறிச் சில கட்டளைகளை இட்டார். சிறு வீரர்கள் ஐம்பது பேர் ஓடிவந்து என் தலைக் கட்டுக்களை அறுத்தனர். பிறகு, தலைவர் உரையாற்றினார். அவரது மொழி எனக்குப் புரியவில்லை. நான் சொன்னது அவருக்குப் புரியவில்லை.

நான் சாப்பிட்டுச் சில நாட்கள் ஆகியிருந்தன. பசியின் அடையாளமாக என் விரல்களைக் குவித்து அடிக்கடி வாயில் வைத்துக் கொண்டேன். உடனே பல ஏணிகள் என் மீது சாத்தப்பட்டன. நூற்றுக் கணக்கான மனிதர்கள் அவற்றில் ஏறிக் கூடை கூடையாக ரொட்டியும் மாமிசமும் சுமந்து என் வாயில் கொட்டினர். விழுங்கினேன். என்னுடைய பெருத்த பசியைக் கண்டு அவர்கள் அதிசயப்பட்டனர். 'தாகம்' என்று சைகை செய்தேன். இரண்டு பெரிய பீப்பாய்களை உருட்டி என் கைமீது வைத்தனர். குடித்தேன். ஒயினைப் போலச் சுவையாக இருந்தது.

தலைவர் தொடர்ந்து பேசினார். அவர்கள் என்னை ஒரு கைதியாக அழைத்துப் போவார்கள் என்றும், உணவு அளித்து என்னை நன்றாக நடத்து

வார்கள் என்றும் புரிந்து கொண்டேன். நூற்றுக் கணக்கான மனிதர்கள் வந்தனர். கட்டுக்களைத் தளர்த்தினர். காயங்களுக்கு மருந்து பூசினர். நான் குடித்ததில் தூக்க மருந்து கலந்திருக்க வேண்டும். உறக்கம் என்னை ஆக்கிரமித்துக் கொண்டது. நன்றாகத் தூங்கினேன்.

நான் தூங்கும்போது என்னைத் தலைநகருக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக நடந்தன. ஐந்நூறு தச்சர்கள் கூடி ஒரு மர வண்டி செய்தனர். வண்டியின் உயரம் சுமார் மூன்று அங்குலம். சக்கரங்கள் இருபத்திரண்டு. என்னைச் சுற்றிக் கம்புகள் நட்டனர். கம்புகளின் உச்சியில் ஒரு கப்பியைப் பொருத்தினர். என் மேல் இருந்த கட்டுக்களோடு புதிய கயிறுகளை இணைத்தனர். கப்பிகளின் வழியாகக் கயிறுகள் இழுக்கப்பட்டன. என்னைச் சற்று மேலே தூக்கி, வண்டியைக் கீழே தள்ளினர். பிறகு, என்னை வண்டியில் பிணைத்தனர். ஒன்றரை அங்குல உயரமுள்ள ஆயிரக் கணக்கான குதிரைகளை வண்டியில் பூட்டினர். வண்டி தலைநகர் நோக்கிப் புறப்பட்டது. ஈட்டியும் வில்லும் ஏந்திய நூற்றுக் கணக்கான வீரர்கள் வண்டியைச் சுற்றி அணிவகுத்து வந்தனர். இவ்வளவு கலாட்டாவிலும் நான் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தேன்.



மறுநாள் தலைநகரை அணுகினோம். வழியில் ஒரு கோயில். பெரிய கட்டடம். நான் தங்குவதற்கு ஏற்ற இடம் அதுவே எனத் தீர்மானிக்கப்பட்டது. என்னைக் காண்பதற்காக மக்கள் அங்கு திருவிழா போலக் கூடியிருந்தனர். இரும்புச் சங்கிலிகளால் என்னை மண்டபத்தில் கட்டிப் போட்டனர். பிறகு என் கயிறுகளை அறுத்து எறிந்தனர்.

நான் மெதுவாக எழுந்து நின்றேன். சங்கிலியின் நீளத்துக்கு உலாவினேன். நான் மலை போல் உயர்ந்து நிற்பதைக்கண்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அரசரும், மெய்க் காப்பாளர்களும் என்னைச் சுற்றி வந்து ஆச்சரியத்தோடு பார்த்தனர். அரசர் தங்க மகுடமும், ஆபரணங்களும் அணிந்து கையில் மூன்று அங்குல நீளமுள்ள கூரிய வாளைப் பிடித்திருந்தார். அரசர் ஆணைப்படி எனக்கு ஆகாரம் வந்தது. வண்டி வண்டியாக உணவும் நீரும் வந்தன. ஒரே மூச்சில் அவற்றைக் காலி செய்தேன். குழந்தைகளும், பெரியவர்களும் அதிசயத்தோடு என்னை நோக்கினர்.

நான் சங்கிலியை அறுத்துக் கொள்வேனோ என்

றும், என்னுடைய பசியால் அந்த நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படுமோ என்றும் தலைவர்கள் பயந்தனர். நான் அவர்களுக்கு ஒரு பிரச்னையாகத் தோன்றினேன். இருந்தாலும் அரசரின் உத்தரவுப்படி என்னை அன்போடு நடத்தினர். முந்நூறு தையற்காரர்கள் சேர்ந்து எனக்குச் சட்டைகள் தைத்தனர். ஆறு ஆசிரியர்கள் கூடி எனக்கு அவர்களது மொழியைக் கற்பித்தனர்.

நான் நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். அந்த நாட்டின் பெயர் 'லில்லிப்புட்' என்பதையும், லில்லிப்புட்டின் அரசர் ஒரு பெரிய சக்கரவர்த்தி என்பதையும் அறிந்தேன். லில்லிப்புட் மக்களுக்கு என்னிடம் இருந்த பயம் கொஞ்சம் கொஞ்சமாக விலகியது. கலகலப்பாகப் பழக ஆரம்பித்தனர். நான் படுத்திருக்கும்போது குழந்தைகள் என் தலை முடியில் ஒளிந்து கொண்டு கண்ணாமூச்சி ஆடுவார்கள்.


அரசர் என்னைப் பார்க்க அடிக்கடி வருவார். பேசிக் கொண்டிருப்பார். என்னை விடுதலை செய்யும்படி அவரிடம் கேட்டேன். முதலில் மறுத்தார். சில நிபந்தனைகளில் என் கையெழுத்து வாங்கிக் கொண்டு, பிறகு என்னை விடுவித்தார். லில்லிப்புட்டில் சுதந்திரமாக உலாவிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் அரண்மனை அதிகாரி ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். அவரைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டேன். இருவரும் பேசினோம். லில்லிப்புட் மக்களிடையே நட்புணர்வு குறைவு என்றும், சிறு விஷயங்களில் கூட அடிக்கடி அங்கு சண்டை மூளும் என்றும் சொன்னார். உதாரணமாக, செருப்புக்களின் குதிகால் உயரம் அதிகமாக இருக்கலாமா, கூடாதா என்று ஒரு வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. மேலும் முட்டை சாப்பிடும்போது பெரிய பக்கத்தில் உடைப்பதா, சிறிய பக்கத்தில் உடைப்பதா என்பது மற்றொரு பிரச்னை. இரண்டாவது பிரச்னை முற்றி லில்லிப்புட் மக்கள் அண்டையிலிருந்த பிளஃபூசு (Blefuscu) என்ற நாட்டுடன் போர் தொடுத்தனர். அந்தப் போர் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. எதிரியின் கப்பல் படை லில்லிப்புட்டைத் தாக்குவதற்குத் தயாராக இருந்தது. ஆகவே லில்லிப்புட் அரசர் என்னுடைய உதவியைக் கேட்டு அதிகாரியை அனுப்பியிருந்தார். அற்ப விஷயத்திற்காக அவர்கள் போடும் சண்டை எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் அரசரின் விருப்பப்படி எதிரியின் கப்பல் படையைக் கைப்பற்றிவருவதாக அந்த அதிகாரியிடம் சொன்னேன்.

பிளஃபூசு ஒரு சிறிய தீவு. லில்லிப்புட்டுக்கு வடகிழக்கில் இருந்தது. இடையில் குறுகிய கடல். அத்தீவின் துறைமுகத்தில் ஐம்பது போர்க் கப்பல்களும் பல சாதாரணக் கப்பல்களும் ஆயத்தமாக இருப்பதைக் கண்டேன். நிறையக் கயிறுகளைச் சேகரித்தேன். கடலில் இறங்கினேன். நடந்தேன். நீந்தினேன். பகைவரின் கப்பல்களை நெருங்கினேன்.

என்னைக் கண்டதும் அங்கிருந்த மாலுமிகள் பயந்து போயினர். கப்பல்களிலிருந்து 'தொப்பு, தொப்பு' என்று குதித்துத் தப்பித்துக் கொண்டனர். கப்பல்களை இணைத்துக் கயிறுகளால் கட்டினேன். எதிரிகள் என்மீது அம்புகளைப் பொழிந்த வண்ணம் இருந்தனர். பெருத்த கூச்சல் போட்டனர். அவர்களை லட்சியம் செய்யாமல் கப்பல்களை இழுத்துக் கொண்டு லில்லிப்புட்டை நோக்கி விரைந்தேன்.







**தலையும் மூளையும்**

யானையின் தலை மிகவும் பெரிதாயிருக்கிறது. மனிதனின் தலை யானையை விட எவ்வளவோ சிறியது. இதனால், யானையின் தலையிலே ஏராளமான மூளை இருக்கும்; மனிதனின் தலையில் குறைவாக இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள்!

ஒருமனிதன் 120பவுண்டு எடையிருந்தால் அவனுடைய மூளை மட்டும் 3 பவுண்டு எடை இருக்கும். அதாவது அவனுடைய எடையில் 40ல் ஒரு பங்கு.

யானையின் மொத்த எடையில் 500ல் ஒரு பங்குதான் மூளை எடை இருக்கும்.

திமிங்கிலத்துக்கு 12,000ல் ஒருபங்கு தான்!

மொத்த எடையுடன் மூளையின் எடையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மனிதனுக்கு அடுத்தபடியாக இருப்பது எது தெரியுமா? மனிதனைப் போலவே கிட்டத்தட்ட இருக்கிறதே, அந்தக் குரங்குதான்!

லில்லிப்புட் கடற்கரையில் அரசரும் பிரபுக்களும் என்னை எதிர்கொண்டு அழைத்தனர். லில்லிப்புட்டின் மிக உயர்ந்த கௌரவப் பட்டம் எனக்கு அளிக்கப்பட்டது.

சில நாட்களுக்குப் பிறகு பிளஃபூசுவிலிருந்து சில அதிகாரிகள் லில்லிப்புட் வந்தனர். இரு நாடுகளும் சமாதானம் செய்து கொண்டன. அவர்கள் என்னையும் பிளஃபூசு தீவுக்கு வருமாறு அழைத்தனர். ஒப்புக் கொண்டேன்.

பிளஃபூசு பிரபுக்களிடம் நான் காட்டிய அன்பு லில்லிப்புட்டில் சில தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் என் மீது கொண்ட அன்பு குறைந்தது; வெறுப்பு வளர்ந்தது. எனக்கும் ஒரு மாறுதல் தேவைப்பட்டது. எனவே லில்லிப்புட் அரசரைப் பார்த்தேன். பிளஃபூசு செல்ல அனுமதி கோரினேன். அவருக்கும் என் மீது பூரண நம்பிக்கை இல்லை. இருந்தாலும், அவர் எனக்கு அனுமதி அளித்தார்.

ஒரு நாள் லில்லிப்புட்டின் அதிகாரி ஒருவர் என்னிடம் வந்து சில ரகசியங்களைச் சொன்னார். நான் திடுக்கிட்டுப் போனேன். அரச சபையில் எனக்கு ஆதரவாகவும் எதிராகவும் இரண்டு கட்சிகள் இருப்பதாகச் சொன்னார். எதிர்ப்பவர்கள்என்னைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டியிருந்தனர். ஆதரவாளர்கள் எனக்காக அரசரிடம் வாதாடினர். முடிவில், என் கண்களைக் குருடாக்கி என்னை உயிரோடு விட்டு விடும்படி அரசர் தீர்ப்புச் சொன்னார். இன்னும் மூன்று நாட்களில் அந்தத் தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

லில்லிப்புட்டுக்கு வந்த பின் முதன் முதலாக என் மனத்தில் வருத்தம் குடி கொண்டது. அந்த விநோதமான நாட்டில் கண்களை இழக்கவோ உயிரை விடவோ நான் விரும்பவில்லை. உடனே அங்கிருந்து புறப்படுவது எனத் தீர்மானித்தேன். என் உடைமைகளை எடுத்துக் கொண்டு துறைமுகம் சென்றேன். அங்கிருந்த ஒரு போர்க் கப்பலில் என் மூட்டை முடிச்சுக்களை ஏற்றிக் கொண்டு பிளஃபூசு தீவுக்கு விரைந்தேன். அந்தீவின் அரசரும், மக்களும் என்னை அன்போடு வரவேற்றனர்.

அங்கே என் வாழ்க்கை அமைதியாக இருந்தது. ஒரு நாள் கடற் கரையில் உலாவிக் கொண்டிருந்தேன். கடலில் ஒரு காலிப் படகு மிதந்து வந்துகொண்டிருந்தது. சில வீரர்களின் உதவியுடன் கடலில் இறங்கி அந்தப் படகைப் பிடித்து இழுத்து வந்தேன். அந்தப் படகின் துணை கொண்டு இங்கிலாந்து திரும்ப எண்ணினேன். அதற்கு பிளஃபூசு அரசரின் உதவியைக் கோரினேன். இசைந்தார். ஆனால், என் சந்தோஷம் நீடிக்கவில்லை. என்னைக் கைது செய்ய லில்லிப்புட் அரசனின் ஆணையோடு வீரர்கள் வந்தனர். அங்கு எனக்குத் தண்டனை காத்திருந்தது. பிளஃபூசு அரசர் எனக்கு அபயம் அளித்துக் காப்பாற்றினார். லில்லிப்புட் வீரர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

என் இங்கிலாந்துப் பயணத்துக்கான வேலைகள் தொடங்கின. நூற்றுக்கணக்கான ஆட்கள் படகைத் தயார் செய்தனர். படகில் எனக்கு உணவு குவிக்கப்பட்டது. எனக்குச் சில பரிசுப் பொருள்கள் அளித்தனர். 1701-ஆம் ஆண்டு செப்டம்பர்மாதம் 24-ஆம்தேதி என் படகு பிளஃபூசுவை விட்டுப்

புறப்பட்டது. வழியில் ஒரு தீவில் இளைப்பாறினேன். தொலைவில் ஒரு கப்பல் போவதைக் கண்டேன். படகை அங்கு செலுத்தினேன். என் அதிர்ஷ்டம் அது இங்கிலாந்து செல்லும் கப்பலாக இருந்தது. கப்பல் தலைவர் என்னை உற்சாகமாக வரவேற்றார். நலமாக வீடு திரும்பினேன். நான் எடுத்துப் போன சின்னஞ் சிறிய ஆடு மாடுகளையும் நூதனமான பொருள்களையும் மனைவி மக்களுக்கும், நண்பர்களுக்கும் காண்பித்தேன். அவர்கள் அதிசயித்துப் போனார்கள்.

## பூத நாடு

அமைதியான வீட்டு வாழ்க்கை எனக்கு விரைவில் அலுத்து விட்டது. கடல் பயணமும், சாகசச் செயல்களும் என்னைக் கைநீட்டி அழைத்தன. சூரத் செல்லும் ஒரு வர்த்தகக் கப்பலில் பயணத்துக்கு ஏற்பாடு செய்தேன். 1702-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20-ஆம் நாள் எங்கள் கப்பல் புறப்பட்டது. சுமார் பன்னிரண்டு மாதங்கள் சுகமான கடல் பயணம்.

ஒரு நாள் எங்கள் எதிரே ஒரு பெரிய தீவு தென்பட்டது. தலைவர் கப்பலை நிறுத்தினார். நல்ல நீர் கொண்டு வருவதற்காகப் பன்னிரண்டு பேரை ஒரு படகில் ஏற்றித் தீவுக்கு அனுப்பினார். நானும் அதில் இருந்தேன். தீவில் காலாற நடந்துவிட்டுத் திரும்பினேன்.

அதற்குள் பயணிகள் எல்லோருடனும் படகு மிக வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. பூதாகாரமான பிராணி ஒன்று அவர்களைத் துரத்திப் பிடிக்க வந்தது. வழியில் கூரான பாறைகள் மிகுந்திருந்ததாலும், படகு வெகு தூரம் முன்னேறியிருந்ததாலும் பூதத்தால் அவர்களைப் பிடிக்க முடியவில்லை.

அருகிலேயே ஓர் உயர்ந்த பாறை. அதன் மேல் ஏறி நாற்புறமும் நோக்கினேன். பயிர்கள் செழிப்பாக வளர்ந்திருந்தன. புற்கள் கூட இருபதடி உயரம் இருப்பதைக் கண்டு அதிசயித்தேன். கீழே இறங்கி ஒரு வயல் ஓரமாக நடந்தேன். வயலைச் சுற்றிப் புதர் வளர்த்திருந்தனர். புதரின் இடையில் அடுத்த வயலுக்குச் செல்லச் சில படிக்கட்டுகள் இருந்தன. படிகள் ஆறடிக்கு மேலும் உயரமாக இருந்ததால் என்னால் ஏற முடியவில்லை. இன்னொரு பூதம் போன்ற உருவம் என் பக்கமாக வந்து கொண்டிருந்தது. என் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. ஓங்கி வளர்ந்திருந்த பயிர்களுக்கிடையே ஒளிந்து கொண்டேன்.

பூதம் போல இருந்த அந்த உருவம் கோபுரத்தைப் போல உயரமாக இருந்தது. ஒரே எட்டில் சுமார் பத்து கஜ தூரம் கடந்தது. அதன் பின்னால் ஏழு பூதங்கள் வந்தன. ஒவ்வொரு பூதத்தின் கையிலும் ஒரு கத்தி இருந்தது. கத்தியின் நீளம் சுமார் ஆறு கஜம். முதல் பூதம் ஏதோ சொல்லியது. மற்ற பூதங்கள் நான் ஒளிந்திருந்த வயலை அறுவடை செய்யத்தொடங்கின. ஒரு பூதம் கத்தியை நீட்டிக்கொண்டு எனக்கு மிக அருகில் வந்து விட்டது. நான் பயத்தால் ஓவென்று அலறிக் கீழே விழுந்தேன்.

பூதம் குனிந்து இரண்டு விரல்களால் என்னைப் பொறுக்கி எடுத்தது. கண்ணுக்கு நேரே கொண்டு போய் உற்றுப் பார்த்தது. நான் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு இரு கரங்களாலும் கும்பிட்டேன். இனிமையாகப் பேசினேன். பூதத்திற்கு ஒரே ஆச்சரியம். என்னைப் பையில்போட்டுக்கொண்டு தன் எஜமானரிடம் கொடுத்தது. அவர் ஒரு கைக்குட்டையால் என்னைச் சுற்றினார். வீட்டுக்குச் சென்று தம் மனைவியிடம் அளித்தார்.

**ஆறடி அம்மாவுக்கு அங்குலக் குழந்தை!**

கங்காரு 6 அடி உயரம் கூட வளர்கிறது! ஆனால், அது பிறக்கும்போது ஓர் அங்குலம் கூட இருப்பதில்லை! தாயின் வயிற்றில் ஒரு பை இருக்கும். பிறந்தவுடனே குட்டிக் கங்காரு மெல்ல ஊர்ந்து சென்று அந்தப் பைக்குள் தங்கிவிடும். கொஞ்சம் கொஞ்சமாக வளரும். அடிக்கடி தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்க்கும். தாய் மேயும்போது, அதுவும் புல்லைக் கடித்துத் தின்னும். ஆறு மாதங்களில் அது நன்றாக வளர்ந்து விடும். அப்புறமும் தாயின் மடியிலே இருக்குமா? கீழே இறங்கித் தானாகவே புல் மேயத் தொடங்கும்!





என்னை ஒரு பூச்சி என்று நினைத்து முதலில் அவள் பயந்து போனாள். பிறகு அவளுக்கு என்னைப் பிடித்து விட்டது.

என் எஜமானனுக்கு ஒன்பது வயதில் ஒரு பெண் இருந்தாள். தையல் கலையிலும் கெட்டிக்காரி. பொம்மைகளுக்கு விதவிதமான ஆடைகள் தைத்துப்போடுவாள். ஒரு பொம்மையின் தொட்டிலை எனக்குப் படுக்கையாக மாற்றினாள். எனக்குப் புதுச் சட்டைகள் தைத்துப் போட்டாள். வேளைக்கு உணவு கொடுத்தாள். அன்பாக இருந்தாள். மேலும் அவளுடைய தாய் மொழியைக் கற்றுத் தந்தாள். 'கிரில்டிரிக்' (Grildrig) என்று செல்லமாக எனக்குப் பெயர் வைத்தாள். 'சின்ன மனிதன்' என்று அதற்கு அர்த்தமாம்! நான் அவளை 'க்ளம்டால் கிளிச்' (Glumdal Clitch) என்று கூப்பிட்டேன். அதற்குச் 'சின்ன நர்ஸ்' என்று பொருள்.

என்னுடைய புகழ் 'பிராப்டிங் நாக்' (Brobding Nag) முழுதும் பரவியது. (அந்த நாட்டின் பெயர் அதுதான்.) நான் ஒரு காட்சிப் பொருளாக மாற்றப்பட்டேன். என்னைப் பார்க்கப் பூதாகாரமான ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். ஊர் ஊராக என்னை எடுத்துச் சென்றனர். என்னை வேடிக்கை காட்டி என் எஜமானர் நிறையப் பணம் சம்பாதித்தார்.

ஒரு நாள் என்னை அரண்மனைக்கு எடுத்துப் போனார். அரசி என்னிடம் பல கேள்விகள் கேட்டாள். பதில் சொன்னேன். அரசிக்குப் பிடித்துவிட்டது. ஆயிரம் பவுன் கொடுத்து என்னை விலைக்கு வாங்கினாள். க்ளம்டால் கிளிச்சையும் எனக்கு உதவியாக வேலைக்கு அமர்த்தினாள். என்னுடைய அரண்மனை வாசம் தொடங்கியது.

ஒரு பெரிய பெட்டியை என் படுக்கை அறையாக மாற்றினர். அதில் மேசை, நாற்காலி, கட்டில், துணி மணிகள் இன்னும் எனக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் வைத்தனர். பெட்டிக்குக் கதவு, ஜன்னல் பொருத்தினர். உள் பக்கம் மெத்தென்று பஞ்சு வைத்துத் தைத்தனர்.

சாப்பாட்டு வேளையில் என்னை அரசியிடம் அழைத்துப் போவார்கள். அரசியின் மேசைக்கு மேலேயே என்னுடைய சிறிய மேசையும் நாற்காலியும் இருக்கும். அரசி ஒரு மாமிசத் துண்டை எடுத்து என் தட்டில் வைப்பாள். நான் அதைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிச் சாப்பிடுவேன். நம் ஊரில் சுமார் 12 ஆட்களுடைய முழுச் சாப்பாட்டின் அளவு அரசிக்கு ஒரு கவளம்! சாப்பாட்டிற்குப் பிறகு அவள் ஒரு ஜாடி ஒயினைத் தங்கக் கிண்ணத்தில் ஊற்றிக் குடிப்பாள்!

ப்ராப்டிங் நாக்கில் எல்லாமே பெரிய அளவில் பூதாகாரமாக இருந்தன. பூனை புலியைப் போலவும், எலி நாயைப் போலவும் பெரிதாக இருந்தன. அரண்மனைத் தோட்டத்தில் ஒரு வெள்ளை நாய்க்குட்டி இருந்தது. அடிக்கடி என்னைக் கவ்வி எடுத்துக் கொண்டு போய்த் தோட்டக்காரன் முன்னால் வைத்து வாலை ஆட்டும். பற்களால் கடிக்காமல் எடுத்துக் கொண்டு போகப் பயிற்சி அளித்திருந்ததால் அது என்னை ஒன்றும் செய்யவில்லை.

ஒரு நாள் அரண்மனை ஜன்னல் கதவுகள் திறந்திருந்தன. யாரோ வரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு பெரிய குரங்கு பெட்டிக்குள் எட்டிப் பார்த்து இளித்தது.

# படிப்பு

பள்ளியில் இருக்கும் பொழுது சேமிக்க வேண்டுமா?

## அல்லது

கல்லூரிக்கு தயாராகும்போது கடன் வாங்க வேண்டுமா?

சுபிட்சத்திற்கும் மகிழ்ச்சிக்கும் **வித்யா நிதி டிபாசிட்** திட்டத்தில் சேமியுங்கள்

நீங்கள் நிச்சயம் உங்கள் பையனுக்கு தரமான கல்வியை பெற விரும்புவீர்கள் அல்லவா?

ஆனால் உங்களது வருவாய் அதற்கு அனுமதி அளிக்குமா என்பது உங்களுக்குச் சந்தேகம். கவலையை விடுங்கள்

இப்பொழுது அதற்கு எளிதான ஒரு வழி முறை உண்டு. உங்கள் குழந்தையின் கல்வி ஒரு நிதிச் சுமை அல்ல.

உங்கள் பையனின் கல்விக்கு கனரா வங்கியின் **வித்யா நிதி** டெபாசித் திட்டம் எளிதாக வழங்கித் தருகிறது.

ஒரு குறிப்பிட்ட துகையை இந்த திட்டத்தில் ஒவ்வொரு மாதமும் செலுத்தினால் அல்லது முழுத்துகை செலுத்தினால் உங்கள் பணம் கூட்டு வட்டியுடன் விருத்தியாகும்.

உங்களுக்கு மாதாந்திர பட்டுவாடாவாகவோ அல்லது முழுத்துகையாகவோ வந்து உங்கள் பையனின் கல்லூரிக் கல்வியை ஈடு செய்யும்.

கனரா வங்கியின் **வித்யா நிதி** சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து உங்கள் பையனின் எதிர்காலத்திற்கு வழி வகுங்குகள்.

# கனரா வங்கி

( ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கி )

தலைமை அலுவலகம்: பெங்களூர்-560 002

இந்தியா முழுவதிலும் 1375 கிளைகளுக்கு மேல்

ஒரு பொம்மையை எடுப்பது போல் என்னை லாகவமாகக் கையில் எடுத்துத் தடவிக் கொடுத்தது. அறைக்குள் யாரோ நுழைந்தனர். என்னை எடுத்துக்கொண்டே குரங்கு வெளியே தாவியது. கூரையின் மேல் உட்கார்ந்து கொண்டு என்னைக் கொஞ்ச ஆரம்பித்தது. க்ளம்டால் கிளிச் போட்ட கூச்சலில் காவல்காரர்கள் ஓடிவந்தனர். ஏணி வைத்துக் கூரை மீது ஏறினர். என்னைக் கூரை மீது போட்டுவிட்டுக் குரங்கு ஓடிப்போய் விட்டது. சிறு காயங்களுடன் நான் தப்பித்தேன்.

அரசரும் அரசியும் ஒரு கடற்கரை ஊருக்குப் புறப்பட்டனர். எனக்காக ஒரு விசேஷப் பயணப் பெட்டி தயாரானது. அதில் என்னையும் எனக்கு வேண்டிய பொருள்களையும் வைத்தனர். க்ளம்டால் கிளிச்சுக்கு உடல்நிலை சரியில்லாததால் வர முடியவில்லை. பதிலுக்கு வேறு ஒரு புதிய பையனை ஏற்பாடு செய்தனர்.

பெட்டியைத் தூக்கியபடியே அந்தப் பையன் கடல் ஓரமாக நடந்துகொண்டிருந்தான். அலைகளைக் காணவும் கடல் காற்றை நுகரவும் நான் ஆசைப்பட்டேன். பெட்டியைக் கீழே வைத்துவிட்டு அவனை ஓய்வு எடுத்துக் கொள்ளச் செய்தேன். அவன் அருகில் இருந்த பாறைகளின் மீது ஏறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். கடல் காற்று தாலாட்ட நான் கண்ணுறங்கினேன்.

திடீரென்று பெட்டி அசைந்தது. மேலே எழுந்தது. கண் விழித்து ஜன்னல் வழியாகப் பார்த்தேன். ஆகாயமும் கடலும் தெரிந்தன. பெரிய இறக்கைகள் அடித்துக் கொள்ளும் சத்தம் கேட்டது. ஒரு பெரிய பறவை பெட்டியோடு என்னைக் கொத்திக் கொண்டு பறந்து சென்றது. கரையிலிருந்தவர்கள் அதைத் துரத்தினர். அது ஒரு கழுகு என்றும், என்னைத் தின்பதற்காக எடுத்துப் போகிறது என்றும் புரிந்து கொண்டேன். கழுகு பெட்டியின் கயிற்றைக் கொத்திக் கொண்டிருந்தது. கழுகின் வேகம் அதிகரிக்க அதிகரிக்கப் பெட்டியும் வேகமாக ஆடிக் கொண்டிருந்தது. திடீரென்று கழுகு பெட்டியை விட்டு விட்டது. பெட்டி கீழ் நோக்கிப் பாய்ந்து பெரிய இரைச்சலுடன் கடலில் விழுந்தது. எனக்குத் தண்ணீரிலேயே மரணம் என்று எண்ணிக்கொண்டேன். ஆனால், ஜன்னல்களும் கதவுகளும் இறுக மூடப்பட்டிருந்ததால் கடல் நீர் உள்ளே வரவில்லை. என் பெட்டி கடலில் மிதந்துபோயிற்று.


பெட்டி ஏதோ ஒன்றின்மீது மோதிக் கொண்டது. மனிதக் குரல்கள் காதில் விழுந்தன. ''என்னைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!'' என்று பலமாகக் கத்தினேன். நான் மோதிக் கொண்டது அதிர்ஷ்ட வசமாக இங்கிலாந்து செல்லும் கப்பலாக இருந்தது. மாலுமிகள் என்னை விடுவித்துக் கப்பல் தலைவரிடம் அழைத்துப் போயினர். தலைவர் என்னைப் பரிவோடு உபசரித்தார். 'பிராப்டிங் நாக்' நகரத்தைப் பற்றி ஆயிரம் கேள்விகள் கேட்டு மாலுமிகள் என்னைத் துளைத்து விட்டனர். வழியில் இடையூறுகள் ஒன்றும் இன்றி 1706-ஆம் ஆண்டு ஜூன் மாதம் மூன்றாம் நாள் இங்கிலாந்தை அடைந்தேன்.

பூதாகாரமாக எல்லாவற்றையும் பார்த்துப்பார்த்து எனக்குப் பழகியிருந்தது. அந்தப் பிரமை இன்னும் நீங்கி விடவில்லை. இங்கிலாந்தில் சாதாரண உருவங்கள் கூட எனக்குச் சுண்டைக் காய் போலத் தோன்றின. லில்லிப் புட்டுக்கே திரும்பவும் வந்து விட்டேனோ என்ற சந்தேகம் வந்தது.

பூதங்களின் தீவில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை என் உறவினர்களும் நண்பர்களும் கேட்டு வியந்தனர்.



'Jonathan Swift' என்பவர் எழுதிய 'Gulliver's Travels' என்ற ஆங்கிலக் கதையே மேலே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.




# விடுமுறை நாள்





விடுமுறை நாள் வந்து விட்டால்
வேலை நிறையக் குவியுதே!
சின்னச் சைக்கிள் ஏறி எங்கள்
தெருவைச் சுற்றி ஓட்டணும்!
தொலைந்து போன பந்தைத் தேட
தோட்ட மூலை கிளறணும்.
தோட்டக் குழாய் நீரில் ஆடித்
தொப்பமாக நனைய 'ணும்.
ஓர மாகப் பள்ளம் வெட்டி
உடைந்த பல்லைப் புதைக்க 'ணும்.
மாடிப் பூனைக் குட்டி யாவும்
மறைந்திருந்து பார்க்க 'ணும்!
பம்ப ரத்தைத் தந்து மோகன்
பட்டம் மாற்றாய் வாங்க 'ணும்.
கடலின் ஓரம் எடுத்த சோழி
கவன மாகப் பிரிக்க ணும்!
கத்த ரித்த படங்கள் தேடி
கண்ணனுக்குக் காட்ட 'ணும்!
காலை நேரம் மாலை நேரம்
காத்தி ருக்கு. வேலையே!
விடுமுறை நாள் வந்து விட்டால்
வேலை நிறையக் குவியுதே!



தம்பி சீனிவாசன்




# பூக்கூடை

## தேசியக் கொடியில் பிறைச் சந்திரன்


ஐந்து தேசங்களின் கொடிகள் இங்கே உள்ளன. ஐந்திலும் பிறைச் சந்திரனைப் பார்க்கிறோம். இந்தக் கொடிகள் எந்த எந்த தேசத்துக் கொடிகள் என்று சொல்லுங்களேன் பார்க்கலாம்.

**விடை:**

1. பாகிஸ்தான்
2. மலேசியா
3. துருக்கி
4. எகிப்து
5. லிபியா



1 2 3



4 5

## ஒரு உயிரின் ஓடுதான் சங்கு!





சின்னச் சங்கினால் குழந்தைகளுக்குப் பால் புகட்டலாம். பெரிய சங்கினால் ஊதலாம்.

கடலிலிருந்து சங்கு கிடைக்கிறது. இறந்துபோன ஓர் உயிரின் ஓடுதான் சங்கு. ஆம், நத்தையின் உடலைப்போல சங்கின் உடலும் மெல்லியதாக இருக்கும். இதற்குக் கால்கள் வெளியே இருக்காது. வயிற்றுக்குள்ளே இருக்கும்! திருகலான ஓட்டுக்குள்ளேதான் இது வசிக்கிறது. இந்த ஓட்டைத்தான் நாம் சங்கு என்று சொல்கிறோம்.

கடலிலே மூழ்கிச் சங்கெடுக்கிறார்கள். வளையல், மோதிரம், பதக்கம் என்று பல பொருள்களைச் சங்கினால் செய்கிறார்கள்.

சங்கிலே வலம்புரிச் சங்கு, இடம்புரிச் சங்கு என்று இரு வகை உண்டு. வலம்புரிச் சங்கு அபூர்வமாகவே கிடைக்கும். ஆகையால் அதன் விலையும் அதிகம்.





## கழுதைக்கும் குதிரைக்கும் பிறந்தது கோவேறு கழுதை!

ஆண் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறந்த குட்டிதான் கோவேறு கழுதை!

இது கழுதையைப் போல் நிறையப் பொதி சுமக்கும். மிகப் பொறுமையாக இருக்கும். கால் சறுக்காமல் ஊன்றி நடக்கும்.

குதிரையைப் போல் பலம் உள்ளது; துணிச்சலும் அதிகம்.

கழுதையைப் போல் 'காள் காள்' என்று கத்தாது. குதிரையைப் போல 'ஈ....ஈ....ஈ...' என்றும் கனைக்காது. தொண்டை கட்டியது போல் கம்மலான குரலில் கத்தும்.

## ஒரே மிருகம்; பல பெயர்கள்!

கரி
கஜம்
களிறு
குஞ்சரம்
தந்தி
அத்தி
சிந்துரம்
வேழம்
வாரணம்
புழைக்கை

இத்தனையும் ஒரே மிருகத்தின் பெயர்! 'இத்தனை பெயர்களா!' என்று ஆச்சரியப்படாதீர்கள். இன்னும் கூட 27 பெயர்கள் இந்த மிருகத்திற்கு இருக்கின்றன! ஆம், ஆக மொத்தம் 37 பெயர்கள் உண்டு.

அந்த மிருகம் எது?
யானை!

ஆதாரம்: சூடாமணி நிகண்டு

## மூட நம்பிக்கைகள்

நம் நாட்டில் பூனை குறுக்கே போனால் அபசகுனம் என்பார்கள்; ஏதேனும் ஒரு நல்ல காரியத்தை நினைக்கும்போது யாராவது தும்மினால் அந்தக் காரியம் நிறைவேறாது என்பார்கள். நாலு பேர் பாராட்டிவிட்டால் 'கண்பட்டுவிட்டது; திருஷ்டி சுற்ற வேண்டும்' என்பார்கள்.


இத்தகைய மூடப் பழக்க வழக்கங்கள் மேல் நாடுகளிலும் இருக்கின்றன!

13 என்ற எண் அவர்களில் பலருக்குப் பிடிக்காது. 13-ஆம் எண்ணுள்ள வீட்டில் வசித்தால் கெடுதல் வருமாம்! அதற்காக என்ன செய்கிறார்கள்? 12-ஆம் எண்ணுள்ள வீட்டுக்கு அடுத்த வீட்டுக்கு 12-A என்று எண் கொடுக்கிறார்கள். அதற்கு அடுத்த வீட்டு எண் 14.

அங்கே ஓட்டல்களிலும் சரி, கப்பல்களிலும் சரி, 13 என்ற எண்ணுள்ள அறையே இருக்காது!

இதைப் போல் கிழமைகளில் வெள்ளிக் கிழமை, மாதங்களில் மே மாதம் இரண்டும் வெள்ளைக்காரர்களுக்குப் பிடிக்காதவை.

வீட்டுக்கு வீடு வாசற்படிதான்!



## இரு விதத்தில் படிக்கலாம்

மூன்று சொற்கள். அவற்றை இடமிருந்து வலமாகப் படித்தாலும் மேலிருந்து கீழாகப் படித்தாலும் அதே மூன்று சொற்கள் வரும்.

இங்குள்ள குறிப்புக்களை வைத்து இக்கட்டத்தைப் பூர்த்தி செய்யுங்கள்:

ஓலையால் ஆனது
நெற்பயிர் விளைவது
நம்தேசத் தலைநகர்

விடை:

| | | |
|---|---|---|
| சு | வ | டி |
| வ | ய | ல் |
| டி | ல் | லி |

இதைப்போல் இடமிருந்து வலமாகப் படித்தாலும் மேலிருந்து கீழாகப் படித்தாலும் வரக்கூடிய 3 சொற்களை இதே மாதிரித் தனித் தனிக் கட்டத்திற்குள் எழுதி அனுப்புங்கள். அதிகமான கட்டங்களை யார் அனுப்புகிறார்கள் என்று பார்ப்போம்.



# ஒரு ரூபாய் நோட்டு

"தம்பி, மூர்த்தி! நீ மாரியம்மன் கோவில் திருவிழாவுக்குப் போறதாகக் கேள்விப்பட்டேன். எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?'' என்றார் அந்த முதியவர்.

''என்ன உதவி செய்யணும்?'' என்றான் மூர்த்தி.

''எனக்குக் காலில் தெம்பு இருந்தா நடந்தே வந்திடுவேன். பஸ்ஸிலே போகிற அளவு வசதியில்லே. என் பேரப்பிள்ளை உடம்பு குணமாயிட்டா ஒரு ரூபாய் காணிக்கை போடறதா அம்மன் கிட்டே வேண்டிக்கிட்டேன். அந்த ஒரு ரூபாயைத் தர்றேன். நீ மறந்திடாமக் கோவில் உண்டியல்லே போட்டுடணும்'' என்றார் அவர்.

''சரி, கொடுங்க போடறேன்'' என்று பதில் அளித்தான் அவன். உள்ளத்தில் அந்த முதியவர் மீது காரணமில்லாமல் அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

'ஒரு ரூபாயை மெனக்கெட்டுக் கொடுக்க வந்துட்டது இந்தக் கிழம்!' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டான்.

'ஆண்டவனுக்கு அன்போடு காணிக்கையாக அளிக்கும் பத்துக் காசு கூட பத்தாயிரம் ரூபாயைப் போல மதிப்பு வாய்ந்தது, உயர்ந்தது' என்று உணரக் கூடிய மனப் பக்குவம் அவனுக்கு இல்லை.

அவன் திருவிழாவுக்குப் போவதே கூட்டத்தைப் பார்க்கவும், குடை ராட்டினம் சுற்றவும், கடைகளைக் காணவும், வாண வேடிக்கை பார்க்கவும் தான். அவனுக்குக் கோயில், கடவுள் எல்லாம் அவற்றுக்கு அப்புறம்தான். ஏனோ தெரியவில்லை அப்படி ஓர் அலட்சியம் அவனிடம் வளர்ந்திருந்தது.

முதியவர் கொடுத்த மடிக்கப்பட்ட ஒரு ரூபாய் நோட்டை அலட்சியமாக வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

''மறந்திடாமல் போட்டுடப்பா'' என்றார் முதியவர்.

அவனிடம் ஒரு ரூபாய் நோட்டுக்கள் ஐந்து இருந்தன. அவனுடைய அம்மா ஓர் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்தாள். ஆக, பத்து ரூபாய் அவனுக்குச் சேர்ந்து விட்டது. அந்தப் பணத்தைக் கால் சட்டைப் பையில் பத்திரப்படுத்திக்கொண்டான். அதற்கு மேல் வேட்டி கட்டியிருந்தான்.

பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தவுடனேயே மூர்த்தியின் மூளை வேகமாக வேலை செய்தது.

'உண்டியலில் போட வேண்டுமாம்... பெரிய காணிக்கை. நான் போடுகிறேனா இல்லையா என்று கிழவனுக்குத் தெரியாது. இந்த அம்மனுக்கும் தெரியாது. இந்த ஒரு ரூபாயை நாமே செலவு செய்து கொள்வோம்' என்று எண்ணினான் அவன்.

முதியவர் கொடுத்த பணத்தை எடுத்து பஸ் டிக்கட்டுக்காக நீட்டினான்.

அவனுடைய செலவுக்கென்று வைத்திருந்த பணத்தில் டிக்கட் எடுக்க அவனுக்கு மனமில்லை. பஸ்ஸை விட்டு இறங்கியதும் அந்தப் பணத்தை எடுத்துச் செலவுசெய்து கொள்ளலாம் என்று முடிவு செய்தான் அவன்.

பஸ் நின்றது. அவன் எதிர்பார்த்ததைவிடத் திருவிழாவுக்கு மிகப் பெரிய கூட்டம் கூடியிருந்தது.

அவனுடைய நடத்தையைப் பார்த்து அவனுடைய அம்மா பணம் கொடுக்கும்போது கூட ''டேய் மூர்த்தி! 'எனக்கு நல்ல புத்தி வரணும்னு' அந்த அம்மன் கிட்ட வேண்டிக்கடா'' என்றாள்.

''உனக்குத்தானே நல்ல புத்தி வரணும்... தாராளமா வேண்டிக்கிறேன்'' என்று கேலியாகப் பதில் சொன்னான்.

''மாரியம்மா! இவனுக்கு நல்ல புத்தியைக் கொடு'' என்று அவளே வேண்டிக்கொண்டு, எப்படியாவது கோவில் இருக்கிற இடத்து மண்ணையாவது அவன் மிதித்து விட்டு வரட்டும் என்று பணம் கொடுத்து அனுப்பினாள்.

மூர்த்தி ஒவ்வொரு கடையாக வேடிக்கை பார்த்துக்கொண்டுவந்தான்.

சாவிகளைக் கோத்து வைத்துக்கொள்வதற்கு ஓர் அலங்காரமான சங்கிலியோடு கூடிய வளையம் ஒரு கடையில் இருந்தது. அதை வாங்க முடிவு செய்தான் அவன்.

கடைக்காரரிடம் மூன்று ரூபாய்க்குப் பேரம் பேசி முடித்தான்.

பணத்தை எடுத்துக் கொடுக்கக் கால் சட்டைப் பையில் கையை விட்டான். அவனுடைய இதயம் அதிர்ச்சியால் வேகமாகத் துடித்தது; பணத்தைக் காணவில்லை. பையின் கீழ்ப் பகுதியில் ஓர் ஓட்டை இருப்பதைக் கைவிரல் கண்டுபிடித்தது.

பையை நன்றாகத் துழாவிப் பார்த்தான். ஒரே ஒரு ரூபாய் நோட்டு மட்டும் எப்படியோ பையில் ஒட்டிக் கொண்டிருந்தது. மீதிப் பணம் ஓட்டை வழியே விழுந்திருக்க வேண்டும்.

முதியவரிடம் காணிக்கையை அலட்சியமாக வாங்கியதற்கும், அதை உண்டியலில் போடும் மனம் இல்லாமல் செலவு செய்ததற்கும் கடவுள் சரியான பாடத்தை அவனுக்குக் கற்பித்துவிட்டார்!

மூர்த்தியின் உள்ளத்தில் இருந்த ஆணவம் அந்த நிமிடத்திலேயே அகன்று விட்டது.

கடைக்காரரிடம் வாங்கிய சங்கிலியைத் திருப்பிக் கொடுத்து விட்டு, அங்கிருந்து விரைந்தான். கடைக்காரர் அவனைத் திட்டுகின்ற ஒலி அவனுடைய காதில் விழுந்தது. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

பையில் மீதியிருந்த ஒரு ரூபாய் அவனை மிகவும் சிந்திக்க வைத்துவிட்டது. உண்டியலில் பெரியவரின் காணிக்கையைப் போடத்தான் அந்த ரூபாய் அங்கு தங்கியிருக்க வேண்டும்.

அந்தப் பணத்தை எடுத்துச் சென்று கோவில் உண்டியலில் பய பக்தியோடு செலுத்திவிட்டு,

''அம்மா, என்னை மன்னித்து விடு. எனக்கு நல்ல புத்தியைக் கொடு'' என்று வேண்டிக்கொண்டான் அவன்.

பஸ்ஸில் ஊருக்குத் திரும்பிப் போக அவனிடம் காசு எதுவும் இல்லை. அதற்காகக் கவலைப்படவில்லை. காணிக்கையைச் செலுத்திவிட்ட நிறைவோடு பத்து மைல் தூரத்தில் இருந்த ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினான் அவன்!

**பூதலூர் முத்து**



# வெளிநாட்டு



உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. ஒவ்வொரு மொழியிலும் ஏராளமான விடுகதைகள் இருக்கின்றன. ஒரே விடைக்குப் பல நாடுகளிலும் பலவிதமாக விடுகதை போடுகிறார்கள்.

அடே புடே என்பான் வீட்டை விட்டு வெளியேறமாட்டான்
—அவன் யார்?

இது நம் நாட்டில் வழங்கும் விடுகதை. விடை 'நாக்கு' என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். வெளிநாடுகளில் நாக்கைப் பற்றி வழங்கும் விடுகதைகள் சிலவற்றைப் பாருங்கள்:

**இத்தாலி:**
வெள்ளை வெள்ளை நாற்காலி; மேலும் கீழும் நாற்காலி.
மெதுவாய் ஆடுவாள் சிங்காரி.

**கிரேக்கம்:**
பாடும் குயிலுக்குப் பளிங்கியிலே வேலி

**நார்வே:**
வேலைக்காரிகள் வெள்ளை நிறம்; வீட்டு வாசல் காக்கிறார்கள்
வீட்டுக்காரியோ சிவப்பு நிறம்; மேலும் கீழும் ஆடுகிறாள்

**பெரு** (தென் அமெரிக்கா):
சின்னக் குகைக்குள்ளே சிகப்புக் கொடி அசையுது

**ஹெய்தி** (வட அமெரிக்கா):
ஒரே குளத்தில் ஒரே மீன். வெளியே எட்டிப் பார்த்தாலும் வேறு குளம் போகாது.

**முட்டை**

**தமிழ்நாடு:**
ஒரு சீசாவில் இரண்டு தைலம்

**அயர்லாந்து:**
வெள்ளை வீட்டுக்குக் கூரை இரண்டு! வெளியே கதவில்லை.

**ஜாவா:**
வெள்ளைப் பெட்டியில் வெள்ளியும் தங்கமும்

**லித்துவேனியா:**
பளிங்கியை உடைத்தால் வெள்ளி; வெள்ளியை உடைத்தால் தங்கம்

**ஹெய்தி:**
இடிந்த கோட்டையை எடுத்துக்கட்ட ஆளில்லை.



# விடுகதைகள்

### தேங்காய்

**தமிழ்நாடு:**
வண்ணான் வெளுக்காத வெள்ளை; மழை பெய்யாத தண்ணீர்;
குயவன் பண்ணாத பாண்டம்

**போர்ச்சுகல்:**
கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு; ஓட்டு வீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை; வெள்ளை மாளிகை உள்ளே குளம்

**மலேசியா**
சின்னக் குளத்திலே தித்திக்கும் நீர்
கண்ணாடி போலக் கலங்காத நீர்

**ஹவாய்:**
சுவர் மூன்று தாண்டினால் சுனை ஒன்று காணலாம்.

### நூல், ஊசி

**தமிழ்நாடு:**
இத்தினியூண்டு சிட்டுக்குருவி இழுத்து இழுத்து
முள்ளடைக்குது

**பஹாமா** (வட அமெரிக்கா):
குதிரை தாவத் தாவக் குறையுது வாலின் நீளம்.

**சைபீரியா:**
அங்குல மாட்டுக்கு அரை மைல் வால்.

### வானம், நட்சத்திரங்கள்

**தமிழ்நாடு:**
எங்கள் அம்மா புடவையை மடிக்க முடியாது
எங்கள் அப்பா பணத்தை எண்ண முடியாது

**கனடா:**
என்னிடம் ஒரு தாள் உண்டு; மடிக்க முடியாது
ஏராளமாய்ப் பணம் உண்டு; எண்ண முடியாது

**போலந்து:**
எல்லையில்லாத வயலிலே எண்ண முடியாத ஆடுகள்

**மங்கோலியா:**
பட்டுத் துணியைச் சுருட்டமுடியாது; பத்தாயிரம் முத்தைக் கோக்கமுடியாது.


### மனிதன்

**தமிழ்நாடு:**
தத்தக பித்தக நாலேகால்; தானே நடக்கும்
இரண்டே கால்; முத்திப் போனால் மூன்றே
கால்; முதுகாடு போவது பத்தே கால்!

**கிரேக்கம்:**
அதற்கோர் பெயருண்டு; முதலிலே நான்கு கால்.
அடுத்தது இரண்டு கால்; அப்புறம் மூன்று கால்.
அது என்ன?








கண்ணன்: ஒன்று முதல் ஐம்பது வரை எண்ணியதற்கு அப்பா என் தம்பியை நன்றாக அடித்து விட்டார்.
முரளி: ஏன்? இதில் என்ன தப்பு?
கண்ணன்: வந்திருந்த விருந்தாளி தின்ற இட்லிகளை அல்லவா எண்ணினான்!



பெரியவர்: பாவம், அனாதை ஏங்கிறியே இந்தா இரண்டு ரூபாய்.
சிறுவன்: ரொம்ப சந்தோஷமுங்க. இதோ போய் என் அப்பா, அம்மா, அண்ணன், தங்கை அத்தனை பேரையும் அனுப்புகிறேன். அவர்களும் அனாதைகள்தான்!

# படித்துச் சிரிப்போம்!

லலிதா செல்லப்பா



நர்ஸ்: ஏன்டா அம்பி, ரத்தப் பரிசோதனைக்குக் கொசு, மூட்டைப்பூச்சியைக் கொண்டு வந்து தர்றே?
முரளி: இவை என் பெட்ரூமில் இருந்த கொசு, மூட்டைப் பூச்சி. இவற்றின் உடம்பிலுள்ளது என் ரத்தம்தானே? டெஸ்ட் பண்ண இதையே எடுத்துக் கோங்க.




கண்ணன்: கட்டிலில் இருந்து தூக்கத்தில் உருண்டு விழுந்ததிலா இவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டது? நம்ப முடியலையே!
முரளி (கை, கால்களில் பலத்த கட்டுடன்): மாடி வராந்தாவில் அல்லவா கட்டில் இருந்தது!

கடைக்காரர்: ஏன்டா அம்பி ஏன் கடையில் தினம் மசால் வடை வாங்கறே. அவ்வளவு ருசியா இருக்கா?
முரளி: இல்லே மாமா. இதை எலி வலை வாயிலில் வச்சா, இதன் வாசனைக்குப் பயந்து எலி வெளியே வரவே மாட்டேங்குது. அதற்காகத்தான் வாங்கறேன்.



கண்ணன்: உன் ஜோக்கைப் படிச்சுட்டு இரண்டாவது தடவையாகச் சிரிச்சேன்.
முரளி: பலே அவ்வளவு நன்றாக இருந்ததா?
கண்ணன்: இல்லே. இல்லே. போன வருஷம் வேறொரு பத்திரிகையில் படிச்சுச் சிரிச்சேன். இப்ப உன் பெயரில் படிச்சுச் சிரிச்சேன்.



நம்பிக்கு எரிச்சலான எரிச்சல்; தாங்க முடியாத எரிச்சல்! ஒவ்வொரு போட்டியிலும் மாதவன் முதல் பரிசு வாங்கியது அவனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது. ஆறுவது வகுப்பு முதல், மாதவனும் அவன் கூடவேதான் வருகிறான். இப்பொழுது எட்டாவது வகுப்பு வரை வந்திருக்கிறான். இதுவரை நம்பிதான் எல்லா வகுப்புக்களிலும் எல்லாப் போட்டிகளிலும் முதல் பரிசு வாங்கி வந்திருக்கிறான். அப்பொழுதெல்லாம் இந்த மாதவன் ஒரு போட்டியிலும் கலந்து கொள்ள மாட்டான். இப்பொழுது மட்டும் அவனுக்கு எப்படி அவ்வளவு துணிச்சல் வந்தது?

எல்லாவற்றுக்கும் காரணம் அவன் வகுப்புக்குப் புதிதாக வந்திருக்கும் நிர்மலா டீச்சர்தான். நிர்மலா டீச்சர் வந்த நாளன்றே மாதவனிடம் அளவுக்கு மீறிப் பிரியம் காட்டினார். அடிக்கடி ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு மாதவனைக் கூப்பிடுவார்.

''மாதவா, இந்தத் தேசப்படத்தில் அர்ஜண்டைனாஎங்கிருக்கிறதுகாண்பி?'' என்பார்.

''இந்தியாவில் கோதுமை அதிகமாக விளையும் பிரதேசம் எது? மாதவா நீ சொல்லு.''

இவ்வாறு எடுத்ததற்கெல்லாம் வாய் ஓயாமல் மாதவனையே கூப்பிட்டுக் கொண்டிருந்தார் நிர்மலா டீச்சர்.

இது நம்பியின் மனத்தில் பொறாமையை விளைவித்தது.

'வகுப்பிலேயே சிறந்த மாணவனாகிய நம்மை விட்டு விட்டு நம் டீச்சர் அடிக்கடி மாதவனையே கூப்பிடுகிறார்களே!' என்று வயிறெரிந்தான்.

மாதவன் கூச்ச சுபாவம் உள்ளவனாதலால் கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்தான்.

''மாதவா, நீ ஏன் மூலையில் உட்கார்ந்திருக்கிறாய்? எழுந்து வந்து முன்னால் உட்கார்'' என்று ஒரு நாள் மாதவனைப் பார்த்துக் கூறினார் நிர்மலா டீச்சர்.

மாதவன் அரை மனத்துடன் முதல் வரிசையில் இருந்த பெஞ்சில், டீச்சருக்கு நேரே அமர்ந்து கொண்டான். அதுமுதல் எடுத்ததற்கெல்லாம் மாதவனையே கூப்பிட்டுக் கொண்டிருந்தார் நிர்மலா டீச்சர். காம்போசிஷன் நோட்டுப் புத்தகங்களை எடுத்து வர வேண்டுமா? அதற்கு மாதவன்தான் செல்ல வேண்டும். ஆபீசிலிருந்து சாக்பீஸ் வாங்கி வர வேண்டுமா அதற்கும் மாதவன்தான் செல்ல வேண்டும். இடைவேளையில் நிர்மலா டீச்சருக்கு அவன்

# புது டீச்சர்



தான் ஓட்டலிலிருந்து டிபன் வாங்கி வந்து தரவேண்டும்.

தனியாகப் பேசும்போது நிர்மலா டீச்சர் அவனிடம் என்ன சொல்லியிருப்பாரோ தெரியாது. அதற்குப் பிறகு மாதவன் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தான். அது மட்டுமா? ஒவ்வொரு தேர்விலும் அதிக மதிப் பெண்கள் வாங்கி வரலானான்.

நம்பிக்கு வயிற்றெரிச்சல்.

**அ**ன்று இரண்டாவது பீரியட் தமிழ். மணி அடித்ததும் நிர்மலா டீச்சர் தன் கைப் பையை எடுத்துக் கொண்டு வகுப்பை விட்டு வெளியே சென்றுவிட்டார். தமிழாசிரியர் இன்னும் வரவில்லை. அப்பொழுது ''உஷ்....ஷ்''



பரிமாறுபவர்: இந்த ஓட்டல் ரொம்ப விசேஷமானது தம்பி. அந்தக் காலத்திலே மகாகவி பாரதியார் இந்த ஓட்டலுக்கு வந்து இதே மேஜையிலேதான் வழக்கமாகச் சாப்பிடுவார்.

பையன்: ஓஹோ! அதனாலேதான் இந்த மேஜை விரிப்பைக் கூடச் சலவைக்கே போடாம அப்படியே அவர் ஞாபகமா வச்சிருக்கீங்களோ!

என்றொரு சப்தம் கேட்டது. மாதவன் திரும்பிப் பார்த்தான். நம்பிதான் திடீரென்று அவ்வாறு ஒலியெழுப்பியவன் என்பதைக் கண்டுகொண்டான். அவன் பக்கத்திலிருந்த, முரளி, ''ஏண்டா திடீரென்று அந்த மாதிரி கத்தினாய்?'' என்று நம்பியைப் பார்த்துக்கேட்டான்.

''ஒன்றுமில்லை. வகுப்புக்குள் ஒரு காக்கா வந்து விட்டது. அதை விரட்டினேன்'' என்றான் நம்பி.

இதில் என்ன அப்படிப்பட்ட நகைச்சுவை இருக்கிறது? இதைக் கேட்டதும் வகுப்பிலிருந்த அத்தனை பேரும் ஏன் சிரித்தார்கள்? மாதவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

**அ**ன்று பள்ளிக்கூடம் விட்டதும் ஆசிரியர் அறையில் வந்து தன்னைப் பார்க்குமாறு கூறியிருந்தார் நிர்மலா டீச்சர்.

மாதவன் ஆசிரியர்கள் தங்கியிருக்கும் அறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

திடீரென்று அவன் பின்னால் ''கே.ஏ கே.ஏ.'' என்ற குரல் கேட்டது.

மாதவன் திரும்பிப் பார்த்தான்.

நம்பி பின்னால் நின்று கொண்டிருந்தான். அவனுடன் மேலும் நான்கைந்து மாணவர்கள் இருந்தனர்.

நம்பிதான் தன்னைக் கிண்டல் செய்கிறான் என்ற எண்ணத்துடன் வேகமாகச் சென்றான் மாதவன். பின்னால், ''காக்கா...காக்கா...''என்ற கிண்டல் ஒலி மாறி மாறிக் கேட்டுக் கொண்டிருந்தது.

மாதவனுக்கு நம்பி பேரில் கோபம் வரவில்லை. தன்னைக் கேலி செய்யும் மற்ற மாணவர்கள் மீதும் கோபம் வரவில்லை. நிர்மலா டீச்சரின் பேரில் தான் அவனுக்குக் கோபம் வந்தது.

'நிர்மலா டீச்சரால்தான் நாம் இப்படி இவர்களிடம்அவமானப்படவேண்டியிருக்கிறது. நம் வகுப்பில் எத்தனையோ மாணவர்கள் இருக்க, ஏன், என்னை மட்டும் அடிக்கடி கூப்பிடுகிறார்கள்?' என்று நினைத்த மாதவன் ஆசிரியர் அறைப் பக்கம் செல்லாமலேயே வீட்டுக்குச் சென்று விட்டான்.

மறுநாள் வகுப்புக்கு வந்ததும் நிர்மலா டீச்சர் மாதவனைப் பார்த்து, 'மாதவா, நேற்றுப் பள்ளிக்கூடம் விட்டதும் டீச்சர்ஸ் அறைக்கு உன்னை வரச் சொல்லி யிருந்தேனே, ஏன் வரவில்லை?'' என்று கேட்டார்.

மாதவனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

''மறந்து விட்டேன் டீச்சர்!'' என்றான்.

''போகட்டும்'' என்று கூறிய நிர்மலா டீச்சர் ''ஆபீஸ் அறைக்குப் போ. உலகப் படம் ஒன்று வாங்கி வா'' என்று மாதவனிடம் கூறினார்.

''வேறு யாரையாவது அனுப்புங்க டீச்சர். என்னால் முடியாது'' என்று கூறினான் மாதவன்.

மாதவனின் பேச்சு டீச்சரைத் திடுக்கிட வைத்தது.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''உங்கள் கண்ணுக்கு நான் ஒருவன் தான் பட்டேனா? என்னையே எதற்காக வேலை வாங்குகிறீர்கள்?''

''தவறுதான் மாதவா! தெரியாமல் சொல்லிவிட்டேன்.'' என்று கூறிய நிர்மலா டீச்சர், நம்பியைப் பார்த்து,

''நம்பி,சீக்கிரம் போய் ஆபீஸ் அறையிலிருந்து உலகப் படத்தை...'' என்று நிர்மலா டீச்சர் முழுவதும் சொல்லி முடிப்பதற்குள் நம்பி அனுமார் மாதிரி ஆபீஸ் அறையை நோக்கிப் பாய்ந்தோடிச் சென்றான்.

மறுநாள் தமிழாசிரியர் மாணவர்களிடமிருந்து வாங்கிய கட்டுரை நோட்டுக்களை எடுத்துச் சென்று ஆசிரியர் அறையினுள் தமது மேஜை மேல் வைக்குமாறு நம்பியிடம் கூறியிருந்தார். நம்பி கட்டுரை நோட்டுக்களை எடுத்துக் கொண்டு ஆசிரியர் அறைக்குள் நுழைய இருந்தான். அப்பொழுது நிர்மலா டீச்சரும் எட்டாவது வகுப்பு சரோஜா டீச்சரும் உள்ளே பேசிக் கொண்டிருந்தது அவன் காதில் விழுந்தது. அவன் வந்தது அவர்களுக்குத்தெரியாது. அவர்கள் பேசிக் கொண்டே யிருந்தனர்.

''இன்றைக்கு ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய் நிர்மலா?'' என்று சரோஜா டீச்சர் நிர்மலாவைக் கேட்டார்.

''ஒன்றுமில்லை சரோஜா. என் வகுப்பிலே மாதவன்னு ஒரு பையன் இருக்கிறான். அசப்பிலே பார்த்தால் அவன் சமீபத்திலே இறந்து போன என் தம்பி மாதிரியே இருக்கிறான். நான் வந்த அன்றைக்கே அவனைப் பார்த்ததும் அசந்து போய் விட்டேன். அவனைப் பார்த்துப்பார்த்து என்தம்பியை இழந்த கவலையை மறந்திருந்தேன். இன்றைக்கு அவன் என்னை எதிர்த்துப் பேசி விட்டான். அதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது'' என்றார் நிர்மலா டீச்சர்.

''நிர்மலா, நான் சொல்கிறேனென்று வருத்தப்படாதே! நமக்கு எல்லாப் பிள்ளைகளும் ஒன்றுதான். எல்லாப் பிள்ளைகளையுமே உன் தம்பி மாதிரியே நினைத்திருக்க வேண்டும். ஒரே ஒரு பையனை மட்டும் நீ தம்பியாக நினைத்ததால்தான் உனக்கு இந்த வருத்தம்'' என்றார் சரோஜா டீச்சர்.

''ஆமாம், சரோஜா! நாளையிலிருந்து வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களையும் என் சொந்தத் தம்பிகளைப் போலவே நினைத்துக் கொள்கிறேன்'' என்றார்.

அவர்கள் பேச்சு முடிந்ததும் நம்பி அப்பொழுதுதான் அறைக்குள் நுழைபவனைப் போல் நுழைந்தான்.

அவனைக் கண்டதும் நிர்மலா டீச்சர் ''தம்பி, அந்தக் கட்டுரை நோட்டுப் புத்தகங்களை யெல்லாம் வைத்துவிட்டு இங்கே வா'' என்றார்.

நம்பி டீச்சர் அருகே வந்து நின்றான்.

''நம்பி, தலையை வலிக்கிறது. வெளியில் பியூன் கோபால் இருந்தால் கூப்பிடு. காப்பி வாங்கி வரச் சொல்ல வேண்டும்'' என்றார் நிர்மலா டீச்சர்.

''இப்பொழுதுதான் டீச்சர்கோபால் வெளியே போனார். இதோ நான் வாங்கி வந்து தருகிறேன்'' என்றான் நம்பி.

''வேண்டாம். நீ போ. கோபால் வந்த பிறகு வாங்கி வரச் சொல்கிறேன்'' என்றார் நிர்மலா டீச்சர்.



வைத்தியர்: தம்பி, இப்போ உடம்பு எப்படி இருக்கு? லேகியம் சாப்பிட்ட பிறகு, பலவீனமெல்லாம் பறந்து போயிருக்குமே!

பையன்: ஆமா ஆமாம். உங்க கிட்டே லேகியம் வாங்கிட்டுப் போறபோது லேகியப் பாட்டிலைத் தூக்கவே முடியல்லே. இப்போ லேகியமெல்லாம் தீர்ந்ததும் அந்தப் பாட்டிலைச் சுலபமாகத் தூக்க முடியுது!

பள்ளிக்கூடம் விட்டுப் பத்து நிமிடங்கள் ஆகியும் மாதவன் வகுப்பிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். முன்னால் போய் விட்டால் பின்னால் வருகிற அவன் வகுப்பு மாணவர்கள் அவனைக் ''காக்கா, காக்கா'' என்று கூப்பிடுவார்களே! அதைத் தவிர்ப்பதற்காகவே மாதவன் எல்லாப் பிள்ளைகளும் வெளியே செல்லும் வரை வகுப்பிலேயே இருந்தான்.

எல்லோரும் போய்விட்டிருப்பார்கள் என்று தெரிந்த பிறகு தனது புத்தகப் பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு கிளம்பத் தயாரானான்.



ஆர். பி. சாரதி

# என்னைக் கவர்ந்த மாணவன்

## வேதகிரி கொண்டு வந்த திருகாணி

அப்போது நான் சோமங்கலம் பள்ளித் தலைமை ஆசிரியர்! பள்ளியின் ஆண்டுவிழா முடிந்து கூட்டம் கலைந்து கொண்டிருந்த நேரம். அனைவருக்கும் மகிழ்ச்சி... மன நிறைவு... ஒரு மாணவி மட்டும் கண்ணைக் கசக்கிக் கொண்டு எதிரே வந்து நின்றாள். ஜெயந்தி என்ற மாணவி... பாவம் ஏழை! வீட்டுக்கு வந்திருந்த உறவினர் ஒருத்தியின் தங்கத் தோட்டைக் கேட்டு வாங்கிப் போட்டுக்கொண்டு வந்து நடனம் ஆடினாளாம். ஒரு தோட்டின் திருகாணி கீழே விழுந்து காணாமல் போயிருக்கிறது! திருகே கால் சவரன் இருக்குமாம். இருந்தவரெல்லாம் தேடினோம். கிடைக்கவில்லை. ஒப்புக்கு ஆறுதல் சொல்லி அனுப்பி விட்டோம். வேறு என்ன செய்ய? அடுத்த இரு நாட்கள் விடுமுறை வேறு. சனி, ஞாயிறு என நினைவு.

ஞாயிறு மாலை என் வீட்டு வாசலில் ஒரு மாணவன்... நடுவீரப்பட்டுக் கிராமத்தைச் சேர்ந்தவன். வேதகிரி என்று பெயர். ஏழை ஆதித்திராவிட மாணவன். வாய்கூடச் சற்றுத் திக்கும். படிப்பிலும் சராசரிதான். ஆனால் நல்லவன். காலில் இருக்க வேண்டிய செருப்பைக் கையில் சுமந்து கொண்டு நின்றான். அது தேய்ந்த ரப்பர் செருப்பு. அதில் ஏதோ பளபளத்தது. அது...ஆம்,, அதுவேதான்! காணாமல் போன திருகாணி! ரப்பர் செருப்பில் குத்திப் பதிந்து இரண்டு நாட்களாகத் தாம்பரமெல்லாம் சுற்றி வந்து நிற்கிறது!

அதே தெருவிலிருந்த மாணவியையும் போய் அழைத்து வருகிறான்!

எங்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. என் மகிழ்ச்சியின் காரணம் பொருள் கிடைத்ததால் மட்டும் ஏற்பட்டதல்ல.

பொன்னின் மதிப்பு அவனை மயக்கவில்லை. தன் வறுமையை விட அந்தப் பெண்ணின் வறுமை அவனைக் கலக்கியிருக்கிறது. கல்வியின் உண்மையான பயன் ஒழுக்கம்... அதை அந்த மாணவன் பெற்றிருப்பதை அறிந்த மகிழ்ச்சி அது!

- **ஆர். பி. சாரதி**
தலைமை ஆசிரியர், அரசுப் பள்ளி
கேளம்பாக்கம்

---

அப்பொழுது வகுப்பிற்குள் நம்பி நுழைந்தான்.

''மாதவா, உனக்காகத்தான் வெளியில் ரொம்ப நேரம் காத்துக்கிட்டு இருந்தேன். உனக்குச் சங்கதி தெரியுமா?'' என்று பரபரப்புடன் கூறினான் நம்பி.

மாதவனுக்கு ஒன்றுமே புரியவில்லை!

''மாதவா! நம்ம நிர்மலா டீச்சர் உன் பேரிலே பிரியமா இருந்ததற்குக் காரணம் தெரியுமா உனக்கு?'' என்றான் நம்பி.

''தெரியாதே!'' என்று உதட்டைப் பிதுக்கினான் மாதவன்.

''உன்னைப் போல ஒரு தம்பி அவங்களுக்கு இருந்தானாம். அவன் திடீரென்று செத்துப் போயிட்டானாம். உன்னைப் பார்த்துப் பார்த்துத் தன் தம்பியைப் பற்றிய கவலையை டீச்சர் மறக்கிறார்களாம்'' என்றான் நம்பி.

''அப்படியா! இது தெரியாமல் இன்றைக்கு அவர்களிடம் முரட்டுத்தனமாகப் பேசி விட்டேனே! இப்பொழுது எங்கிருக்கிறாங்க?'' என்றான் மாதவன்.

''டீச்சர்ஸ் ரூமிலேதான் இருக்கிறாங்க'' என்றான் நம்பி.

மாதவன் ஆசிரியர் அறைக்குள் நுழையும்போது நிர்மலா டீச்சர் மட்டும்தான் அங்கே இருந்தார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. மாதவன் உள்ளே நுழைந்ததும் 'சட்'டென்று கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''என்ன மாதவா! என்ன சமாசாரம்?'' என்று மாவதனைப் பார்த்துக் கேட்டார் நிர்மலா டீச்சர்.

''நீங்க எனக்கு அக்காவாக இருக்கறதுக்கு நான் மிகவும் பெருமைப்படணும். இது தெரியாமல் உங்களிடம் இன்று நான் முரட்டுத்தனமாகப் பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள், அக்கா!'' என்று தழுதழுத்த குரலில் கூறினான் மாதவன்.

# தேரைக் கொடுத்தான் பாரி சிங்காரம் கேட்டான் கேள்வி!

ஒரு பள்ளிக்கூடத்தில் இலக்கிய விழா நடந்து கொண்டிருந்தது. அந்த விழாவில் பேசிய ஒரு பெரியவர் ''பாரியைப் போல் ஒரு சிறந்த வள்ளலைப் பார்க்க முடியாது. அவன் கருணை உள்ளம் கொண்டவன். ஒரு கொடி, பற்றிப் படருவதற்குக் கொழுகொம்பு இல்லாமல் தவித்ததை அவன் கண்டான். உடனே தன் விலையுயர்ந்த தேரை அக்கொடியின் அருகிலேயே நிறுத்தி அந்தக் கொடியைத் தேரின் மீது படரும்படி செய்தான்! ஆஹா! பாரியின் உள்ளம் எத்தகைய கருணை உள்ளம்!'' என்று புகழ்ந்தார்.

அப்போது கூட்டத்திலிருந்த சிங்காரம் என்ற மாணவன் எழுந்தான்.

''சார் ஒரு சந்தேகம். பாரியிடம்தான் உடைவாள் இருந்திருக்குமே, அதனால் பக்கத்திலிருந்த மரத்திலிருந்து ஒரு கொம்பை வெட்டி அதைக் கொடியின் அருகே நட்டு வைத்திருக்கலாமே?'' என்றான்.

''தம்பி, ஒரு சிறு கொடி படருவதற்கு வழியில்லாமல் காற்றிலே ஆடி அலைந்தது. அந்தச் சின்னஞ் சிறு கொடியைப்பார்த்து வருந்தினான் பாரி. அப்படிப்பட்டவனுக்கு வளர்ந்த ஒரு மரத்திலே ஒரு பாகத்தை வெட்ட மனம் வருமா?''

''அப்படியானால் பக்கத்திலே எங்கேயாவது தேடிப் பார்த்திருக்கலாமே! யாராவது வெட்டிப் போட்ட கொம்பு கிடந்திருக்குமே!''

''தம்பி, நீயும் நானுமாக இருந்தால் அப்படித்தான் செய்யத் தோன்றும். ஆனால், பாரி கருணையே வடிவானவன். படருவதற்குக் கொம்பு இல்லாமல் கொடி நடுங்குவதைக் கண்டு அவன் உள்ளம் நடுங்கியது. ஒரு விநாடி கூடத் தாமதிக்காமல் அதற்கு உதவ நினைத்தான். அதனால்தான் தன்னுடைய தேரைக் கொடுத்து விட்டு நடந்தே அரண்மனைக்குச் சென்றான். அதனால்தான் புலவர்கள் அவனைப் பாடினார்கள்; புகழுடம்புடன் இன்றுவரையில் அவன் வாழ்கிறான்.''

அந்த மாணவன் அவரது பேச்சில் சமாதானமடையவில்லை.

''அதற்காக விலை உயர்ந்த தேரைக் கொடுப்பதா?'' என்று முணுமுணுத்தான்.


பெரியவர் அதற்கு மேல் அவனுடன் பேச விரும்பவில்லை. வேறு பல விஷயங்கள் குறித்துப் பேசித் தமது உரையை முடித்தார்.

கூட்டத்துக்குத்தலைமை தாங்கியவர், அந்த மாணவன் திருப்தி யடையவில்லை என்பதைத் தெரிந்து கொண்டார். அவர் தமது முடிவுரையிலே, ''மாணவர்களே, நான் இப்போது சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறப்போகிறேன்'' என்று தொடங்கிப் பேசினார்:

''அரவிந்தன் என்ற ஒரு சிறுவன். அவனுக்கு வயது ஆறு இருக்கும். வழக்கமாக அவன் பள்ளிக்கூடத்திலிருந்து நாலரை மணிக்கு வீட்டுக்கு வந்து விடுவான்.

''அன்று மாலை மணி நாலு இருக்கும். அரவிந்தனின் தாய் நன்றாகச் சீவிச் சிங்காரித்துக் கொண்டிருந்தாள். விலை உயர்ந்த காஞ்சிபுரம் பட்டுச் சேலையை உடுத்தியிருந்தாள். அரவிந்தன் வருகிறானா வருகிறானா என்று அடிக்கடி வாச





''ரமேஷ், புதுப் பள்ளிக்கூடம் எப்படி இருக்கு?''

''அதை ஏன் கேக்கறே. இரவெல்லாம் தூக்கமே இல்லே.''

''ஏன், ஹோம் ஒர்க் நிறையக் கொடுக்கிறாங்களோ?''

''அட நீ ஒண்ணு. பகலெல்லாம் ஸ்கூல்லே கடைசிப் பெஞ்சியிலே தூங்கிட்டா இரவிலே எப்படிடா எனக்குத் தூக்கம் வரும்?''

னுக்கு வந்து, அவன் வரும் வழியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மிகவும் வேண்டிய ஒருவரின் வீட்டுத் திருமணத்துக்கு அன்று மாலே அவர்கள் செல்ல வேண்டும். ''நான் ஆபீஸிலிருந்து நேராக ஐந்து மணிக்குக் கல்யாண வீட்டுக்கு வந்து விடுகிறேன். அரவிந்தன் பள்ளி விட்டு வந்ததும் நீ அவனே அழைத்துக் கொண்டு வந்து விடு'' என்று அரவிந்தனின் அப்பா காலேயிலேயேசொல்லிவிட்டுப் போயிருந்தார்.

நாலரை மணி ஆயிற்று.

'அம்மா!' என்றுகத்திக் கொண்டே ஓடிவந்தான் அரவிந்தன். அம்மா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவன் நெற்றியிலிருந்து இரத்தம் வழிந்தோடியது; கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது.

மகனே அந்த நிலேயில் கண்ட தாய்க்குத் தூக்கி வாரிப் போட்டது. துடிதுடித்துப் போனுள். பள்ளியிலிருந்து வேகமாக ஓடிவரும்போது வழியில் கால் இடறி விழுந்திருக்கிறுன். விழுந்த இடத்தில் கிடந்த கூர்மையான கல் அவன் நெற்றியில் குத்தி விட்டது.

மகனின் நெற்றியில் வழிந்த ரத்தத்தைக் கண்ட அன்னே, உடனே என்ன செய்தாள்? ஒரு விநாடி கூடத் தாமதிக்கவில்லே. தான் கட்டியிருந்த சேலேயால் நெற்றியில் வழிந்த இரத்தத்தைத் துடைத்தாள்.

அந்தத் தாய் கட்டியிருந்த சேலே சாதாரணச் சேலேயா? பட்டுச் சேலே! காஞ்சிபுரம் பட்டுச் சேலே! எண்ணூறு ரூபாய் கொடுத்து வாங்கியது என்பதும் அவனுக்குத் தெரியும். வீட்டிலே நிறையப் பழந்துணிகளும் கந்தல் துணிகளும் இருக்கின்றன என்பதும் அவளுக்குத் தெரியும். ஆனுலும் மகன் நெற்றியில் வழிந்த இரத்தத்தைக் கண்ட அவளுக்கு அவையெல்லாம் நினேவுக்கு வரவில்லே. உடனே மகனின் துயரத்தைத் துடைக்க வேண்டும் என்ற துடிதுடிப்பே ஏற்பட்டது. அதனுல் தான் பட்டுச் சேலே கெட்டுப்போய் விடுமே என்ற நினேப்பே இல்லாமல் அச் சேலேயால் இரத்தத்தைத் துடைத்தாள். தாய்க்குத் தன் பிள்ளேயிடம் எத்தகைய பாசம் இருந்தது என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறதல்லவா?

அந்த அன்னேயைப் போலத்தான், எல்லா உயிர்களேயும் நேசித்த பாரி மன்னனும், பற்றிப் படரக் கொம்பு இல்லாத கொடியைக் கண்டு மனம் துடித்தான். காட்டிலே எங்கேனும் ஒரு கொம்பு கிடைக்குமா எனத் தேடிப் பார்க்கவேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு வரவில்லே. தன் விலேயுயர்ந்த தேரையே கொழுகொம்பாகக் கொடுத்தான்.''

—இப்படித் தலேவர் கூறிவிட்டுக்கேள்வி கேட்ட சிங்காரத்தைப் பார்த்து, ''தம்பி'' என்றுர். அவன் எழுந்து நின்றுன்.

''என்ன தம்பி, பாரி செய்தது சரி தானே? இப்போது உனக்குத் திருப்தி தானே?'' என்று கேட்டார்.

சிங்காரம் சிரித்துக் கொண்டே, ''ஆமாம் சார். திருப்திதான் சார்'' என்றுன்.



# புகைப்பட ஆல்பம்

## நடனங்கள் பலவிதம்


அறுவடை நடனம்



குறவன் - குறத்தி நடனம்



ராஜஸ்தான் நடனம்



**தீயதை** | பார்க்காதே! கேட்காதே! பேசாதே!






மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை
மணப்பெண் யாரோ? தெரியல்லே!



வில்லுப் பாட்டுப் பாடுவதில் வல்லவர்கள் நாங்கள்,
வல்லவர்கள் நாங்கள் - ஆமா, ஆமா... ஆமா, ஆமா!





பயப்படாதீங்க! இவன் ஒரு பலூன் பையன்
என் விளையாட்டுத் தோழன்.

படங்கள் உதவி: உலகம்மை இராமசாமி



# தாத்தா போட்ட நாடகம்

அழகு பழனிச்சாமி

கண்ணம்மன் கோவில் தெருவில் போய்க் கொண்டிருந்தான் விவேக். அப்போது வீதியின் ஓரத்தில், வெய்யில் ஒளியிலே ஏதோ ஒன்று 'பளபள' வென்று மின்னுவதைக் கண்டான். உடனே குனிந்து அதை எடுத்துப் பார்த்தான். அது ஒரு செல்லாத நாணயம். அவனுக்கு ஒரே ஏமாற்றம்.

''ஏ கண்ணம்மா தேவியே! இந்த ஏழைப் பையன் மேல் கொஞ்சமும் இரக்கம் இல்லையே! செல்லாத கால் ரூபாயைக் காட்டி ஏமாற்றுகிறாயே!இது நியாயமா தர்மமா?'' என்று மனத்திற்குள்ளாகக் கேட்டுக் கொண்டான்.

விவேக்கின் மூளை பலமாக வேலை செய்தது. 'இந்தச் செல்லாத காசை என்ன செய்வது?' என்று சிந்தனை செய்தான். உடனே அவனுக்கு மூலைக்கடைச் சொக்கையா ஞாபகத்துக்கு வந்தார்.

சொக்கையா ஓர் அப்பாவி மனிதர். கடையில் கூட்டம் நிரம்பி விட்டால் காசை 'மளமள' வென்று வாங்கிப் போட்டுசுறுசுறுப்பாக வியாபாரம் செய்யக் கூடியவர். கூட்ட நெருக்கடியில் அவரது கடையில் செல்லாத காசைக் கூடச் செல்லவைத்துவிடலாம். இதிலே அவனுக்கு நிறைய அனுபவம் உண்டு. அந்த நினைவு வந்ததும் அவன் முகம் மிகவும் மலர்ந்து விட்டது! துள்ளிக் குதித்துக் கொண்டே சொக்கையாவின் கடையை நோக்கி ஓடினான் விவேக்.

விவேக்கின் எண்ணம் வீண்போகவில்லை. அவனுக்குச் சாதகமாகச் சொக்கையா கடையிலே ஏகப்பட்ட கூட்டமாய் இருந்தது. செல்லாக் காசைக் கொடுத்துத் தின்பண்டங்களை வாங்கித் தின்றுவிட்டு வெற்றிக் களிப்புடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

விவேக் தன் கெட்டிக்காரத்தனத்தை யாரிடமாவது சொல்லிப் பெருமையடித்துக்கொள்ள நினைத்தான்.

விவேக்கின் தாத்தா அப்பொழுது வராந்தாவில் உட்கார்ந்திருந்தார்.

வீட்டின் முகப்பில் நின்று கொண்டிருந்த விவேக், வழியே சென்று கொண்டிருந்த நண்பன் ஆனந்தனை அழைத்து அவனிடம் தன் சாமர்த்தியத்தை அளந்து கொட்டினான். தாத்தா கவனிக்காதது போல் அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் விவேக் வீட்டுக்குள் வந்தான்.

''டேய் விவேக், இப்படியே உட்கார்ந்திரு. கைத்தடி, பொடி டப்பி புத்தகம் எல்லாம் கிடக்கு. பார்த்துக் கொள். நான் வீட்டிற்குள் சென்று விட்டு வந்து உனக்கு ஓர் அருமையான கதை சொல்லுகிறேன்'' என்று கூறிவிட்டு வீட்டுக்குள்ளே சென்றுவிட்டார்;

விவேக் அங்கே சும்மாதான் உட்கார்ந்திருந்தான். என்றாலும் அவன் கழுகுக் கண்களுக்குச் சுவர் ஓரமாகக் கிடந்த ஒரு பொருள் 'பளிச்'சென்று தெரிந்து விட்டது! அது ஒரு செல்லாத கால் ரூபாய்!

விவேக் சிறிது வருத்தம் அடைந்தான். 'காலையிலே ஒரு செல்லாத கால் ரூபாய் கிடைத்தது. இப்போதாவது ஒரு நல்ல கால் ரூபாய் கிடைக்கக் கூடாதா? ஹூம்' என்று தனக்குள்ளே வருத்தப்பட்டுக் கொண்டான். மறுகணமே 'ஹூம், எந்தக் காசாஇருந்தால் நமக்கென்ன! இருக்கவே இருக்கு நம்ம சொக்கையா கடை!' என்று எண்ணித் திருப்தி அடைந்து கொண்டான்.

தாத்தா வருவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. அதுவரையில் அவனால் அங்கு உட்கார்ந்திருக்க முடியவில்லை. அவன் வாயில் எச்சில் ஊறிக் கொண்டே இருந்தது. உமிழ் நீரை விழுங்கிக் கொண்டே 'எவ்வளவு நேரம்தான் இங்கே உட்கார்ந்திருப்பதாம்!' என்று மிகவும் சலித்துக் கொண்டான்.

'தாத்தா மெல்ல வரட்டும்; இந்தப் பழைய புத்தகம், கைத்தடி, பொடி டப்பியை எவன் தூக்கிக்கிட்டுப் போகப் போறான்!' என்று எண்ணிக் கொண்டவனாய் எழுந்தான். உடனே அவன் சொக்கையா கடையை நோக்கி விரைந்தான்.

சொக்கையா கடையிலே அப்போதும் கூட்டமாகத்தான் இருந்தது. இது தான் நல்ல தருணம் என்று எண்ணிய விவேக் அவசர அவசரமாகச் சென்று ''செட்டியாரே, இந்த இருபத்தஞ்சு காசுக்கு ஆரஞ்சு மிட்டாய் கொடுங்க'' என்று கேட்டான்.

சொக்கையா துட்டை வாங்கியதும் 'டபக்'கென்று பெட்டிக்குள்ளேபோட்டு விட்டு மிட்டாயை எடுத்துக் கொடுத்து விடவில்லை! துட்டை அப்படியும் இப் படியுமாகத் திருப்பிப் பார்த்தார். அவ்வளவுதான்! விவேக்கின் இதயம் 'படக் படக்' என்று அடித்துக்கொண் டது. அடுத்த கணம்—?

''அடேய் திருட்டுப் பயலே! என்னை எத்தனை நாளாடா இப்படி ஏமாத்தி வர்றே?'' என்று கர்ஜித்துக் கொண்டே விவேக்கின் கன்னத்தில் அறைவதற்குக் கையை ஓங்கினார்.

உடனே விவேக், ''ஐயோ! தெரியாமல் செய்து விட்டேன்: தெரியாமல், செய்து விட்டேன்! இனி இப்படிச் செய்யவே மாட்டேன்!'' என்று அலறினான்.

''சரி சரி, போ! இன்னொரு தடவை இப்படிச் செய்தால் முதுகுத் தோலை உரித்து விடுவேன். ஜாக்கிரதை!'' என்று கூறி எச்சரித்து அனுப்பினார், கடைக்காரச் சொக்கையா.


தலையைத் தொங்கப் போட்டபடி, கலங்கிய கண்களுடன் வீடு திரும்பினான் விவேக்.

தாத்தா திண்ணையில் உட்கார்ந்திருந்தார். ''டேய் விவேக்! நான் வருவதற்குள்ளே எங்கே போய்விட்டேடா! அடடே! ஏதோ ஒரு மாதிரியா இருக்கியே! என்னடா விஷயம்?'' என்று அக்கறையுடன் விசாரித்தார். விவேக் நடந்ததை ஒருவாறு சொன்னான். அதற்குள் அவன் கண்களில் கண்ணீரே வந்து விட்டது தாத்தா அவனுடைய கண்ணீரை வாஞ்சையுடன் துடைத்து விட்டார்!

ஆனால் ஒரு ரகசியம்—

விவேக் சொக்கையாவிடம் அகப்பட்டுக்கொண்டதற்குக் காரணமே தாத்தாதான்!

கடைக்காரச்சொக்கையாவை விவேக் ஏமாற்றியது தாத்தாவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. தவிர, தன் மோசடி



வேலையைப் பெரிய கெட்டிக்காரத்தனம் என்று எண்ணிக் கொண்டு விவேக் தன் நண்பனிடம் கூசாமல் பறை சாற்றிக்கொண்டிருந்தான். விவேக்கை எப்படியாவது திருத்த வேண்டும் என்று திட்டம் தீட்டினார்.

உடனே கடைக்காரச் சொக்கையாவிடம் சென்றார். விவேக் காலையில் செய்த மோசடியை எடுத்துக் கூறி, செல்லாத கால் ரூபாயை வாங்கிக் கொண்டு அதற்குப் பதில் நல்ல நாணயத்தைக் கொடுத்தார். அத்துடன், அவர் கடைக்காரச் சொக்கையாவைப் பார்த்து, ''சொக்கையா! இதே செல்லாத கால் ரூபாயை மீண்டும் உன்னிடம் கொண்டு வந்து கொடுத்து ஏமாற்றப் பார்ப்பான்! அப்போது ஏமாந்து விடாதே! நன்றாக மிரட்டிப் பயமுறுத்தி அனுப்பி வை!'' என்று சொல்லிவிட்டு வந்தார் தாத்தா! அவர் திட்டப்படியே எல்லாம் நடந்து முடிந்து விட்டது!

'விவேக் திருந்தி விட்டான்' என்பதைத் தாத்தா புரிந்து கொண்டார். அவருக்குப் பரம சந்தோஷம். இருந்தாலும் அதை அவர் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''என்ன! சொக்கையாவுக்கு அவ்வளவு திமிரா? என் பேரனை அடிக்கக் கையை ஓங்கினானா? இதோ அவன் கைகளை முறித்து விட்டு வருகிறேன் பார்!'' என்று கைத்தடியை வீராவேசத்துடன் சுழற்றிக் கொண்டே எழுந்தார்.

உடனே விவேக், ''தாத்தா! தாத்தா! அவர் மேலே தப்பு இல்லே தாத்தா! என் மேலேதான் தப்பு! உங்ககிட்டே செல்லாத ரூபாயைக் கொடுத்து ஏமாற்றினால் நீங்க சும்மா இருப்பீங்களா, தாத்தா?'' என்றான். திருந்திவிட்ட உணர்வு அவன் பேச்சில் கணீர் என்று ஒலித்தது.

தாத்தாவுக்கு ஒரே மகிழ்ச்சி! தம் பேரன் விவேக்கை அன்புடன் கட்டித் தழுவிக் கொண்டார்!

---

## நான் செய்த நல்ல செயல்



கே. பத்மப்ரியா

வழக்கம்போல் தீபாவளிக்காக அப்பா, அம்மா, அண்ணன் நான் எல்லோரும் கடைத் தெருவுக்குப் போய்ப் புதிய ஆடைகளைவாங்கி வந்தோம். அலமாரியில் அவற்றை வைக்க இடம் இருக்கவில்லை. ஆகவே தேவையற்ற பழைய துணிகளை அப்புறப்படுத்திவிட்டுப் புதிய ஆடைகளை அழகாக அடுக்கிவைத்தாள் அம்மா. பழைய துணிகளை ஒரு மூட்டையாகக் கட்டி அறையின் ஒரு மூலையில் வைத்தாள்.

''பழைய துணிகளை என்ன செய்யப்போகிறாய்?'' — அம்மாவிடம் கேட்டேன்.

''அவற்றைப் போட்டுவிட்டுப் பதிலுக்கு எவர்சில்வர் பாத்திரம் வாங்கப் போகிறேன்.''

''என்ன பாத்திரம் அம்மா?''

''உனக்குப் பிறந்த நாள் பரிசாக ஒரு புது 'லஞ்ச் பாக்ஸ்' வாங்கப் போகிறேன்.''

பிறந்த நாள் அன்று புதிய சட்டை போட்டுக்கொண்டு புதிய லஞ்ச் பாக்ஸில் நிறைய இனிப்புக்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடம் போனால் எப்படி இருக்கும் என்று ஒரு நிமிஷம் யோசித்துப் பார்த்தேன். இடரென்று பாடப் புத்தகத்திலிருந்த காந்திக் கதை ஞாபகம் வந்தது.

''பாபுஜி, நீங்கள் சட்டை அணிய மாட்டீர்களா? என் அம்மாவிடம் கேட்டு ஒரு நல்ல சட்டை வாங்கி வரட்டுமா?'' என்று ஒரு மாணவன் கேட்டான். அதற்கு காந்தி சிரித்துக் கொண்டே, ''எனக்குக் கோடிக் கணக்கான சகோதரர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் உன் அம்மா ஒவ்வொரு சட்டைதைத்துக்கொடுத்தால் நானும் போட்டுக்கொள்வேன்'' என்றாராம்.

''என்ன யோசிக்கிறாய் பத்மா?'' என்று அம்மா கேட்டாள்.

''அம்மா, அப்பா இரண்டு பேரும் இங்கே வாருங்கள்'' என்று அழைத்துக் காந்திக் கதையை அவர்களுக்குச் சொன்னேன்.

''கதை நன்றாக இருக்கிறது. இப்போது என்ன அதற்கு?'' என்று அப்பா கேட்டார்.

''அப்பா எனக்குப் புது லஞ்ச்பாக்ஸ் வேண்டாம். இந்தத்துணிகளை ஏழைகளுக்குக் கொடுத்து விடலாம்'' என்றேன்.

''யாருக்குக் கொடுக்கலாம் பத்மா?''

''என் பள்ளிக்கு அருகில் ஒரு அனாதை விடுதி இருக்கிறது. அவர்களைத் தினமும் பார்க்கிறேன். ஒரு நல்ல சட்டை கூடஅவர்களிடம் இல்லை. அவர்களுக்குக் கொடுக்கலாமே?''

அப்பா ஒப்புக்கொண்டார்.

பிறந்த நாள் அன்று எனக்குப் புதிய லஞ்ச் பாக்ஸ் கிடைக்கவில்லை. என்றாலும், ஒரு நல்ல காரியம் செய்ய முடிந்ததே என்ற சந்தோஷம் கிடைத்தது.

- கே. பத்மப்ரியா



முழு நாவல்

# இன்று புதிதாய்ப் பிறந்தோம்!

இனியவன்

அரசு, கற்பனை உலகில் மிதந்து கொண்டிருந்தான்...

இவன் வயது, இப்போது பதினைந்து. வளர்ந்து, வனப்பாக இருக்கிறான்.

டைரக்டர் வந்து, 'செட்'டில் காத்திருக்கிறாராம்; ஸ்டூடியோவில் இருந்து, மூன்றும் முறையாக ஃபோன் வருகிறது.

''இதோ கிளம்பிட்டாருங்க..'' என்கிறான் வேலைக்காரன்.

ஆனால், அரசு தாமதமாகவே புறப்படுகிறான்...

சென்னை நகரச் சுவரில் எல்லாம் கலர் கலராய்ப் போஸ்டர்கள். வெவ்வேறுவிதமான காட்சிகளில் அரசு! விதம் விதமான உடைகளில் அரசு!—பார்க்கப் பார்க்க, இவனுக்குப் பெருமையாக இருக்கிறது.

'சிக்ன'லுக்காக வண்டிகள் காத்திருக்கின்றன: நடைபாதை மக்கள், இவனை இனம் கண்டு கொள்கிறார்கள். ''டாப் ஸ்டார் அரசு டோய்!'' என்று உற்சாகமாகக் கைவீசுகிறார்கள்.

—இப்படிக் கற்பனைக் கோட்டையில் மிதந்து கொண்டிருந்த அவனை, ''டேய், அரசு! என்ன இது, எந்த நேரமும் தூக்கமா? பசுவுக்கு வைக்கோல் இல்லை, பார்! அப்படியே, கன்றுக்குட்டிக்கும் கொஞ்சம் போட்டு விட்டு வா!'' என்று அம்மா எழுப்பினாள்.

மனக்கோட்டை இடிந்ததும், எரிச்சலுடன் எழுந்தான் அரசு: அரசு பணக்காரக் குடும்பத்தில் பிறக்கவில்லை: ஏழைக் குடும்பத்திலும் பிறக்கவில்லை. நடுத்தரமான ஒரு குடும்பத்தில் பிறந்திருந்தான். ''சே, என்ன வாழ்க்கை இது?''

அலுப்போடு வைக்கோல் போரை நோக்கி நடந்தான். பசு, இவனைப் பார்த்து, 'ம்மா..' என்றது; கன்றுக் குட்டி, கயிற்றை அறுத்துக் கொள்கிற மாதிரி துள்ளிக் குதித்தது.

இதை யெல்லாம் சில மாதங்களுக்கு முன்பு வரை ரசித்தான். ஆனால் இப்போது ஆத்திரம்தான் வருகிறது.

இது என்ன வாழ்க்கை? காலையில் எழுந்து, மாடு—கன்றைப் பார்த்து, வயலைச் சுற்றி, பழையது சாப்பிட்டு, பள்ளிக்கு ஓடி..

இந்தச் செக்கு மாட்டுப் பிழைப்பு, இனியும் தொடரக் கூடாது. இவற்றை எல்லாம் உதற வேண்டும்: இந்த இடத்தைவிட்டு, ரொம்ப தூரம் ஓட வேண்டும்.

வைக்கோலின் கூளை, கைகளை உறுத்தியது. வேண்டாவெறுப்பாய்ப் பசுவின் முன் உதறினான்: கொஞ்சத்தைக் கன்றின் முகத்தில் விட்டெறிந்தான்.

இரண்டும் சந்தோஷத்தில் செருமின. 'கொக்.. கொக்' என்று கோழிகள் சத்தமிட்டன. 'தீனி இருக்கிறதா?' என எட்டிப் பார்த்தன. இல்லை என்றால், அம்மா, அதற்கு ஒரு தரம் ஏவுவார்களே !

பெருமூச்சுடன் தம்பி வலையை நெருங்கினான். அழகான கோழிகள் பளிச்சிடும் வெண்மையில், தானியத்தைக் கொத்திக் கொண்டு இருந்தன. மொத்தம் ஐம்பது இருக்கும். காட்டாங்குளத்தூர்ப் பண்ணையில் இருந்து, சென்ற மாதம்தான் அப்பா வாங்கி வந்திருந்தார்.

அங்கே, ஆடுகளும் விற்பனைக்குக் கிடைக்குமாம். 'சீக்கிரம் ஆட்டுப் பண்ணைகூட வைக்க வேண்டும்' என்று அப்பா ஓயாமல் சொல்லியபடி இருந்தார்.

அரசு, ஒரு நாள் அம்மாவிடம் கிண்டலாகக் கேட்டான் : ''ஏம்மா, அப்பாவை ஒரு டஜன் பன்றி வாங்கி வளர்க்கச் சொல்லுங்களேன் !''

''என்னடா, தப்பு? நாலு வெள்ளைப் பன்றி வாங்கினால், ஒரே வருஷத்தில், கணிசமாய் லாபம் கிடைக்கும் ! தெரியுமா ? பராமரிக்க, ஒரு நல்ல ஆள் இல்லையே என்றுதான் தயங்குகிறேன்!'' என்றபடி அங்கே வந்துவிட்டார், அப்பா.

''திருடக் கூடாது: பொய் சொல்லக் கூடாது. மற்றபடி, எந்த வேலையும் செய்யலாம்டா, கண்ணு! இழிவு என்று எதையுமே வெறுக்கக் கூடாதுடா, ராஜா ! செய்யும் தொழிலே தெய்வம் ! படித்தது, மறந்து போயிற்றா, என்ன?..'' என்று அன்போடு பேசி, இவன் தலையைக் கோதிவிட்டார்.

அப்போது அவனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. பிறகு, 'வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய' கதையாய்..


ஒரு நாள், ''குழந்தையைக் கவனித்தீர்களா? வர வர அவன் போக்கே பிடிபடவில்லை ! பித்துப் பிடித்தமாதிரி உட்கார்ந்துவிடுகிறான்! எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது!'' என அம்மா கவலைப்பட்டார்கள்.



'' நானும் அவனைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அக்கம் பக்கமெல்லாம் அலைந்து, கண்ட குப்பை பத்திரிகைகளை எல்லாம் படிக்கிறான். அதுதான் காரணம். ஜாடைமாடையாகப் புத்தி சொல்லிவிட்டேன். ஆனால் அவனோ பைத்தியம் பிடித்து அலைகிறான்!'' என்று அப்பாவும் பெருமூச்சு விட்டார்.

—அப்படியே பின்வாங்கினான் அரசு.

'பள்ளிக் கணக்கு, புள்ளிக்கு உதவாது!' என்பீர்களே, அப்பா! ஏட்டுச் சுரைக்காய், கூட்டுக்கு உதவாது!' என்பீர்களே அப்பா! 'மெகாலே கல்விமுறையைத் தூக்கி, உடைப்பில் போடலாம்!' என்பீர்களே அப்பா!'



ஒளித்து வைத்திருந்த வார—மாத இதழ்களோடு, பூனை போல் வெளியேறினான். 'அம்பிகா அக்கா, பாலாஜி அண்ணா, பிரபு மாமா ஆகியவர்களுக்கு அனந்த கோடி வணக்கங்கள்! இவர்கள் இல்லையென்றால், இந்தப் பத்திரிகைகளின் உறவெல்லாம் ஏற்பட்டே இருக்காது. உலக ஞானம் அறவே இல்லாமல் போயிருக்கும்!'

அரசு, நன்றியோடு அவற்றை உரிய இடங்களில் ஒப்படைத்தான்: புதிய இதழ்களோடு நடந்தான்.

அந்தப் பேட்டியை, படிக்கப் படிக்கச் சுவையாக இருந்தது. உதிரத்தில் ஒரு புதிய நம்பிக்கை ஊறியது. அரசு, புதிய கற்பனைகளில் மிதக்கலானான்.

அது ஒரு பெரிய பத்திரிகை அலுவலகம். அங்கே, இவனுக்கு, 'ஆபீஸ் பையன்' வேலைதான் கிடைக்கிறது: வேறு வழி இல்லாமல்தான் ஒத்துக் கொள்கிறான். ஆனால் அதுதான் எவ்வளவு நல்லதாகப் போய்விடுகிறது! ஒரு நாள், முதலாளியின் பார்வையில் படுகிறான். அவரோ, 'இவன் இறந்து போன என் மகன் போல் இருக்கிறான்!' என்று துள்ளுகிறார்.

மறு நாளே, அவருடைய ஆஸ்தி பூராவுக்கும் அரசு அதிபதி ஆகிறான். பெரிய பெரிய ஆசாமிகள் எல்லாம் இவனுடைய உறவுக்குஆலாய்ப் பறக்கிறார்கள்!

பத்திரிகையின் முதல் பக்கத்தில் செய்தி வர வேண்டும் என்பதற்காக, அரசியல் தலைவர்கள் அனைவரும் அன்பாய்ப் பழகுகிறார்கள்!

பிரபல நடிகர்களும், நடிகைகளும் வாழ்த்துச் செய்தி அனுப்புகிறார்கள்!

புகழ்பெற்ற எழுத்தாளர்கள் அவ்வளவு பேரும், இவனை வளைய வருகிறார்கள்!

இப்படி அவன் செய்த கற்பனை ரொம்பவும் சுகமாக இருந்தது. அரசு மேலே மேலே போக நினைத்தான். ஆனால், சட்டென்று அப்பா அவனுடைய ஆனந்தத்தைக் கலைத்துவிட்டார்.

'' என்னடா அரசு, எத்தனை தரம் உன்னைக் கூப்பிடுவது ?''

'' உம்...ம்... என்னப்பா ?''

'' நம்ம கழனி வரை போய் வாடா தங்கம். நிறையக் கூலி ஏர் வைத்திருக்கிறேன். சீக்கிரம் விட்டுவிடப் போகிறார்கள். நன்றாக உழவு ஆக வேண்டும்; நாளைக்கு நடவு போட வேண்டும். அப்படியே, நாற்றங்கால் ஆட்களையும் கவனித்துவிட்டு வா. நாற்றைப் படை படையாய்க் கட்டிவிடப் போகிறார்கள். நன்றாக, சேறு இல்லாமல் அலசச் சொல்லு. முடிச்சுகள் பெருசு பெருசாய் இருந்தால்தான் — ஒழுங்காய்ப் பணம் கிடைக்கும் என்றும் சொல்லு !''

''தம்பி, உனக்கு எப்படி முடி வெட்டணும்?''

எங்க அப்பா தலை மாதிரி வெட்டணும். நடுவிலே வட்டமா, வழுவழுப்பா, பூரணச் சந்திரனைப் போலே....''



அரசு சுசப்போடு நடந்தான்....

சிலுசிலு என்று குளிரடித்தது. காலை ஒன்பது மணி ஆகியும், சூரியன் எட்டிப் பார்க்கவில்லை. இது மாதிரி மந்தாரச் சூழ்நிலை, இவனுக்குப் பிடிப்பதே இல்லை.

தலைக்கு மேலே, வேடந்தாங்கல் பறவைகள் சிறகடித்தன...

சேடைக் கழனிகளிலும், நடவு வயல்களிலும் கொக்குகளும், நொள்ளை மடையான்களும் இரை பொறுக்கின.

சில இடங்களில், வரப்பு சரியில்லை, நசுங்கிக் குழைந்து, சகதியாகி, நடக்கவே அருவருப்பாக இருந்தது.

இந்த அழகில், ஒரு ஜோடி மாட்டைப் பிடித்துக் கொண்டு எதிரே வரும் சின்னான் —

ஆடுகளை ஓட்டிவரும் அபிராமி—

நாற்றுக் கட்டைச் சுமந்துவரும் நல்லதம்பி —

சேற்றில் இறங்கி இறங்கி, விலகி வழி விட்டு — ஒரு வழியாய்த் தங்கள் வயல் எல்லையை அடைந்தான் அரசு.

உருவம் இல்லாத காற்று, பசிய நாற்றங்காலில் இழைந்தது : நாற்றுக்கள் நடனமாடின.

ரங்காவும், ரத்தினமும், கடம்பனும், காளியப்பனும் — விறுவிறு என்று நாற்றை இழுத்துக் கொண்டு இருந்தார்கள்.

'' சேறில்லாமல் அலசிக் கட்டுங்கப்பா ..''

''பறிக்கச் சுகமாய் வருதுங்க .. சேறு ஒண்ணும் அதிகமில்லே .. நல்லாவே அலசறோம் ..''

''முடிச்சையும், இதே மாதிரி பெரிசு பெரிசாகவே கட்டுங்க. நேரம் ஏற ஏற, அளவைக்குறைச் சுடப்போறீங்க''

''அப்படிச் செய்வோமுங்களா ? அதுவும், நம்ம வீட்டுக்கு ? ..''

அரசு மேலே நடந்தான். ஏர்களை எண்ணினான். மொத்தம் ஒன்பது இருந்தன. நன்றாகச் சேறாகிவிட்ட கழனியை அவை மேலும் கலக்கின.

வேலை நடக்கும் இடத்திற்கு—ஏதாவது சொல்ல வேண்டுமே என்று — ''சேர ஓட்டுங்க!'' என்றான்.

ஏர் ஓட்டும் போது, 'ஹாய், ஹாய் ..' என்னும் ஆட்களின் குரல்கள் ..

கலப்பைகளை இழுத்துக் கொண்டு, சகதியில் நடக்கும் மாடுகளின் சளசளப்பு ..

—அரசுக்கு அங்கே நிற்கவே வெறுப்பாக இருந்தது. ஆனால், ஏர் விடும் வரை அங்கே இருந்தாக வேண்டும். அதற்கு, இன்னும் இரண்டு மணி நேரமாவது ஆகும்.

அப்பாவின் சொல்லை மீற முடியாது.

'இது என்ன விவசாயம் ? வரவுக்கும், செலவுக்கும் சரியாகிவிடுகிறது. லாபமே இல்லை' என்று அப்பாகூட அடிக்கடி சொல்லுவாரே !

ஒரே இடத்தில், நூறு ஏக்கர் இருக்க வேண்டும். டிராக்டரால் உழ வேண்டும். 'காய்களும், கனிகளும், பூக்களும், நவதானியங்களும்

கொழியோ கொழி என்று கொழிக்க வேண்டும்.

அந்தப் பண்ணைக்கு, என்ன பெயர் வைக்கலாம் ? அப்பா பெயரா, அம்மா பெயரா? அல்லது தன் பெயரேவா?

'இளம் வயதிலேயே இவ்வளவு ஊக்கமா! இந்தப் பகுதியில், அரசுவை மிஞ்ச ஆளே இல்லையே! முன்னேற்ற விவசாயி என்று ரேடியோவிலும், டீ.வி.யிலும் ஓயாமல் பேட்டி காணுகிறார்களே ! எப்போது பார்த்தாலும் விளைச்சல் போட்டியில் பரிசு வாங்கியபடியே இருக்கிறானே !' என்று ஊரே வியக்கிறது.

படித்தவர்களில் இருந்து பாமரர் வரை, இவனிடம் தனிப்பட்ட மரியாதையுடன் நடந்து கொள்கிறார்கள்.

பக்கத்து நகரமான மதுராந்தகத்துக்கு, அடிக்கடி போய்வருகிறான். இவனுடைய காரைக் கண்டாலே, அங்கே பெருங் கூட்டம் கூடிவிடுகிறது !

— கற்பனை நீண்டு கொண்டே போயிற்று.

"அரசு ! .. படி, படி என்று சொன்னாலே படிக்கத் தோன்றாது.... நானும் சொல்லக் கூடாது என்றுதான் பார்த்தேன் ; ஆனால், முடியவில்லை. உனக்கே ஒரு பொறுப்பு வேண்டாமா? நாமெல்லாம், ' முன்னேறிய ஜாதி ' என்று முத்திரை குத்தப்பட்டவர்களப்பா. ஏராளமாய் மார்க் வாங்கினால்தான் கல்லூரியில் இடம் பிடித்துப் படிக்க முடியும் : பட்டம் வாங்க முடியும். புரிகிறதா ?'' என்றார் அப்பா ; அவர் குரலில் கொஞ்சம் சூடு தெரிந்தது.

'படித்துப் பட்டம் வாங்கினால்தானா? படிக்காத மேதைகள் எவ்வளவு பேர் இல்லை ? காமராஜ் பட்டதாரியா ? ம.பொ. சி. பட்டதாரியா? கருணாநிதி பட்டதாரியா ? எம். ஜி. ஆர். பட்டதாரியா ? இவர்களில், யாருமே கல்லூரியில் படித்துப் பட்டம் வாங்கியதாகத் தெரியவில்லையே ! ஆனால், எவ்வளவு சீரும்,சிறப்புமாக இருக்கிறார்கள்! பேரும், புகழுமாக வாழ்கிறார்கள் !'


ஒரு மரியாதைக்காக, அப்பாவின் முன் பாடப் புத்தகத்தைப் பிரித்தான்.

' அப்பா ! பார்த்துக் கொண்டே இருங்கள் .. திடீரென்று ஒரு நாள்: நான் பெரிய தொழிலதிபர் ஆவேன் ! நாலைந்து தியேட்டர் கட்டுவேன்! ஐந்து நட்சத்திர ஹோட்டல் நடத்துவேன். மிகப்பெரிய மனிதனாகி, உலக நாடுகளுக்கு எல்லாம் விமானத்தில் பறப்பேன்! அரசாங்கம், என்னைக் கூப்பிட்டு நகர ஷெரீப் ஆக்கும்! இன்னும்..'

இவனால் மனம் ஒன்றிப் படிக்க முடியவில்லை. ''உரக்கத்தான் படியேண்டா கண்ணு .. '' என்று அம்மாவின் வேண்டுகோளுக்காக,ஏதோ வாய்விட்டு முணுமுணுத்தான்.

அதிக நேரம் அப்படிச் செயல்பட முடியவில்லை. அந்த அறை, ஒரு சிறை போல் இருந்தது. 'படிக்க வேண்டும்' என்கிற நிலை, பெரிய தண்டனை மாதிரி கொடுமைப்படுத்தியது.

' இங்கிருந்து ஓட வேண்டும் ரொம்ப தூரம் ஓட வேண்டும் .. விலாசம் தெரிவிக்காமல் ஓட வேண்டும் .. இவர்கள் தேடிக் களைக்கையில் பணமும், புகழுமாய் வந்து சேரவேண்டும் .. ஆச்சரியத்தால் திணற அடிக்க வேண்டும் !'



''அம்மா, தம்பிக்கு வேர்க்கடலையிலே பாதி கொடுத்திட்டேன்.''

''அதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம்.''

''ஆனாலும் பாரம்மா! அவன் தகராறு பண்றான். அவனுக்குப் பருப்பும் வேணுமாம்.ஓடுமட்டும் போதாதாம்''

அரசுவின் தீவிரம் வலிமை பெறலாயிற்று. மெது மெதுவாக இவன் தயாராகலானான்: திடீரென்று ஒரு நாள் அரசுவைக் காணோம்! எங்கே போனான்? யாருக்கும் தெரியவில்லை!

அம்மாவைச் சமாதானப் படுத்தவே முடியவில்லை ; அவர்களின் அழுகைநிற்க மறுத்தது.

''அரசு ! .. என் கண்ணே ! .. நீ எங்கே போய், எப்படி அவஸ்தைப் படுகிறாயோ ? .. உனக்கு, இங்கே என்னடா ராஜா குறை ?'' என அவர்கள் புலம்பியபடியே இருந்தார்கள்.

அப்பாவோ, உள்ளுக்குள் குமுறிக் கொண்டு இருந்தார் : அவ்வப்போது அரசு எழுதி வைத்துவிட்டுப் போன

சீட்டை எடுத்துப் படித்துப் பார்த்தார்.

'அன்புள்ள அப்பா, அம்மா !

வணக்கம். என்னை வீணாகத் தேடி அலைய வேண்டாம். விபரீதமான கற்பனை எல்லாம் செய்து, பயப்பட வேண்டாம். கூடிய சீக்கிரமே நான் மிகப் பெரிய நிலைக்கு வந்துவிடுவேன்! பேரும், புகழுமாய் நானே உங்களை வந்து பார்ப்பேன்! சொல்லிக் கொண்டு போக நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள் என்பதால், இப்படித் திருடன் போல் போகிறேன். ஆனால், குறுக்கு வழியில் எல்லாம் முன்னுக்கு வர முயலமாட்டேன். இது சத்தியம். தயவு செய்து என்னை மன்னியுங்கள். கவலை இல்லாமல் இருங்கள். என்னை ஆசீர்வதியுங்கள். மறுபடி வணக்கம்.

இப்படிக்கு,
அரசு.'

—அப்பா, அந்தச் சீட்டை மடித்துச் சட்டைப் பையில் வைத்தார்; நெஞ்சின் ஆழத்திலிருந்து பெருமூச்சு வெடித்தது.

ஊரில், பலர் பலவிதமாகப் பேசினார்கள் :

'' ஆனாலும் அரசுக்கு இந்த வயசில் இவ்வளவு பேராசை கூடாது !''

''ஒரே நொடியில் உயர்ந்து போக வேண்டுமாம் !''

'' மந்திரத்தில் மாங்காய் விழுமா, என்ன ?''

'' சொல்ல முடியாதுப்பா இப்படி வீட்டை விட்டு ஓடியவன் எல்லாம் தான், இன்றைக்கு லட்சாதிபதியாக இருக்கிறான்! யார் கண்டது? நாலைந்து வருஷத்தில், அரசு பெரிய புள்ளியாக வந்து இறங்குகிறானோ என்னவோ ?''

அம்பிகாவும், பாலாஜியும், பிரபுவும் மட்டும் — அரசு இப்படிப் போனது குறித்து மிகவும் வருந்தினார்கள் :

'' பாவம், ஊரில்—இவன் வயசில் இப்படி ஒரு நல்ல பையனைப் பார்க்க முடியாது !''

'' சுட்டிப் பயல் ! இதற்குத்தான் இத்தனை புத்திசாலியாக இருந்தானோ?''

'' யாரும்கூட, இங்கே அவனுக்குக் கெட்ட சிநேகிதர்கள் இல்லையே...?''

''கெட்ட சிநேகிதம் ஏண்டா இல்லை? நீங்கள் எல்லாம் ரொம்ப யோக்கியப் பட்டவர்களா ?'' என்று கத்தினார் அப்பா.

'' மாமா... நாங்கள் என்ன செய்தோம்?'' என்று அலறினான் பிரபு.

''கண்ட கண்ட பத்திரிகைகளையெல்லாம் அவனுக்குக் கொடுத்தீர்கள், இல்லையா? இரவு பகலாய் அவைகளைத் தானே படித்தான் ? அதனால் அல்லவோ இந்த விபரீதம் ?'' என முழங்கினார் அவர்.

'' நான் மெட்ராசில் தங்கிப் படித்த காலத்திலிருந்து, எல்லாப் பத்திரிகையும் படிக்கிறேன், சித்தப்பா. அதே சமயம், மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறி இருக்கிறேனாக்கும்!'' என்றான் பாலாஜி.

'' எல்லாம் என் தலை எழுத்து !'' என்றவாறு அங்கிருந்து அப்பால் போனார், அப்பா.

''எதற்கும் மதுராந்தகம் போலீஸ் ஸ்டேஷனில் எழுதி வைப்போம், மாமா !'' என்றபடி, பின்னால் சென்றான் பிரபு.

அம்பிகா, '' எல்லாரும் சேர்ந்து அரசுப் பயலைச் சீக்கிரமே கண்டுபிடித்து விடப் பாருங்கள் !'' என்றாள்.

அவள் குரல், துயரத்தால் கம்மி ஒலித்தது.

• • •

சென்னைக் கடற்கரையில் காந்தி சிலை அருகே அமர்ந்து — குமுறிக் குமுறி அழுதான், அரசு.

'' ஏன் தம்பீ ஏன் அழுகிறாய்?'' என்று ஒரு பரிவான குரல் கேட்டது.

திடுக்கிட்டு நிமிர்ந்தான். இவனுடைய அப்பாவின் வயதில் ஒரு மனிதர். தூய்மையான தோற்றம். கனிவான பார்வை.

ஆசிரியர்: உலகிலுள்ள கண்டங்களிலேயே மனிதன் புக முடியாத கண்டம் எது?
மாணவன்: எமகண்டம் சார்....!
-ராஜிராதா



'' என்னப்பா, உனக்கு இந்த வயசில் என்ன கஷ்டம் ?'' — மேலும் இரக்கத்துடன் அவர் நெருங்கி வந்தார்.

முன்பின் தெரியாதவர்தான். என்றாலும், ஏனோ அவரைப் பார்க்க அச்சமாக இருந்தது: அவமானமாக இருந்தது.

'' அடடே ! உன்னை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே?...''

இவன் பீதி அடைந்தான். மூன்று மாதம் முன்பு, அப்பா ஒரு செய்தித்தாளில், 'காணோம்' என்று விளம்பரம் கொடுத்திருந்தார். பிரபு மாமாவும், பாலாஜி அண்ணாவும், அம்பிகா அக்காவும் சேர்ந்து — இன்னொரு நாளிதழில் வேண்டுகோள் விட்டிருந்தார்கள் ! இரண்டிலும், இவனுடைய புகைப்படம் இருந்தது. அவர்களின் உருக்கமான வாசகங்கள் எல்லாம், இவனை அசைக்கவே இல்லை !

'இதற்கெல்லாம் கரைந்து போனால் நம் எதிர்கால ஏற்றம் என்னாவது ?'— அரசு பிடிவாதமாக அலைந்தான்: வெறி பிடித்து அலைந்தான்.

ஏமாற ஏமாற, இவனுடைய முனைப்பு அதிகமாயிற்று: ' நாளை நம்முடையதே! நாளை நம்முடையதே' என்று நெஞ்சில் ஒரு ராகம் இழைந்தது.

ஓடி... ஓடி... ஓடி...

இதோ, களைத்துப் போனான்!

இனி, இவனால் எந்த வேலைக்கும் செல்ல முடியாது! யார் முகத்தையும் பார்க்க முடியாது! இவன் எதற்குமே லாயக்கில்லாதவன் ! கடவுளே !

'' தம்பீ!...'' என்றார் அவர்.

இவனுக்குத் தன் உணர்வு ஏற்பட்டது. ' ஓ!.... இவர் அந்த விளம்பரங்களைப் பார்த்திருப்பாரோ ?''


அலை வந்த புதிதில், இவன் பயந்து பயந்துதான் வெளியே உலவினான்.... ஆனால், அது அநாவசியம் என்று சீக்கிரமே புரிந்துவிட்டது. ' அவரவர் கவலை அவரவருக்கு' என்கிற மாதிரி சமூகம் இயங்கியது. இவனைப் பார்த்து இரக்கப்பட, இங்கே யாரும் தயாராயில்லை. இவனைக் கண்டு பிடிக்க, யாரும் அப்படி மெனக்கெடுவதாகவும் தெரியவில்லை !

'இதுவும் ஒரு நல்லதற்கே !' என்று சந்தோஷப்பட்டான், அரசு.

ஆனால் —

இத்தனை நாட்களுக்குப் பிறகு —

' நிச்சயம் இவர் அந்த விளம்பரத்தைப் பார்த்தவராகத்தான் இருக்க வேண்டும் !' என நடுங்கினான் இவன்.



ஆசிரியர்: உன் பெயர் என்னவென்று கேட்டால் 'அம்மா—அப்பா' என்கிறாயே அப்படியென்றால்?
மாணவன்: அம்மா பெயர் 'ராதா' அப்பா பெயர் 'கிருஷ்ணன்'. இரண்டையும் சேர்த்தால் என் பெயர்!
-எஸ். தேவாதிராஜன்

அவரோ, அருகே வந்து, அன்போடு அமர்ந்தார். பிரியத்தோடு, தோளில் கை போட்டார். இன்னொரு கையால் பரிவுடன் கண்ணீரைத் துடைத்தார்.

இவனுக்குச் சிலிர்ப்பு ஏற்பட்டது. தன் மேல் பாசம் காட்ட, இங்கே ஓர் ஆத்மாவா !

'' ஆண் பிள்ளைகள் — எதற்கும் அழக்கூடாது, தம்பீ ! ஒரு பெண் நினைத்தாலே, இந்த நாட்டில் எதையும் சாதிக்கலாமே ! காலமும், சூழலும் அவ்வளவு அனுசரணை ஆகிவிட்டதே ! அப்படி இருக்க, ஆண் பிள்ளையான நீ ஏன் கலங்க வேண்டும்? என்ன ஆயிற்று? சொல்லப்பா ! நான் உன் அப்பா மாதிரி... உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்கிறேன்! ''

அவர் பேசப் பேச இவனுக்கு ஆறுதலாக இருந்தது ! செத்திருந்த நம்பிக்கை, புத்துயிர் பெற்றது ! கனவுப் பூக்கள் மணக்க ஆரம்பித்தன !

'இந்த மனிதர், பார்க்கச் சாதாரணமாக இருந்தாலும், மிகப் பெரிய கோடீஸ்வரராக இருப்பாரோ! இவருக்குப் பிள்ளையே இல்லையோ! நம்மைப் பார்த்ததும், இவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டதோ!''

''தம்பீ!...'' என அவர் உலுக்கினார்.

' சே ! இன்னும் அந்த மோசமான புத்தி நம்மைவிட்டுப் போகவில்லையே!' என வெட்கி வருந்தினான், அரசு.

'' உன் சொந்த ஊர், வேடந்தாங்கல் பக்கம்தானே ?''

மீண்டும் இவன் அதிர்ந்தான். வகையாய்ச் சிக்கிக் கொண்டோமே!

உடனே பிடித்து, ஊருக்கு அனுப்பிவிட்டால் என்ன செய்வது? அப்பா முகத்தில் எப்படி விழிப்பது? இப்படிப் போய் நின்றால், எல்லாரும் கேலிசெய்ய மாட்டார்களா?

ஊஹூம் இவர் வலையில் விழுந்துவிடக் கூடாது! இங்கிருந்து, சட்டென்று தப்பிவிட வேண்டும்!

அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை— அரசு, அவரிடமிருந்து 'விலுக்'கென விடுபட்டான்.

அடுத்த விநாடி வேகமாக ஓடத் தொடங்கிவிட்டான்.

"தம்பீ!... நில்லப்பா தம்பீ!..." — பெரிதாய்க் குரல் கொடுத்தபடி இவனைத் தொடர முயன்றார், அவர்.

ஆனால், கொஞ்ச தூரம் ஓடுவதற்குள்ளாகவே, இடறி விழுந்துவிட்டார். நெற்றியில் அடிபட்டு, ரத்தம் வழியலாயிற்று.

சற்றுத் தள்ளி — ஓர் அமைதியான இடத்தில் அமர்ந்து — பாடம் படித்துக் கொண்டிருந்த காத்தமுத்துவின் பார்வையில் இந்தக் காட்சி தெரிந்தது.

அவன் பதற்றத்துடன் எழுந்தோடி வந்தான். "ஐயா என்னய்யா" என்றவாறு இதயம் துடிக்க அவரைத் தாங்கிப்பிடித்துத் தூக்க முயன்றான்.

"முத்து!... எனக்கு ஒன்றும் இல்லையப்பா! என்னை விடு. நானாகவே எழுந்துவிடுவேன். ஆனால், உன்னால் எனக்கு ஒரு உதவி ஆகவேண்டும்! அதோ, ஓடுகிறானே — அந்தப் பையனை நீ எப்படியாவது பிடித்து வந்துவிடு! அது போதும்..!" அவர் குரல் தளர்ந்து கொண்டே வந்தது.

காத்தமுத்து, புத்தகத்தை அவரிடம் வைத்துவிட்டு ஓடினான். வேக வேகமாய் ஓடினான். வேட்டை நாய் போல் ஓடினான்.

குப்பத்தின் நடுவே, அந்தக் குடிசை ஒரு கோயில் மாதிரி விளங்கியது! அதில் வசிப்பவரை எல்லாரும் தெய்வம் போலவே மதித்தார்கள்!

'வெற்றிவேல்' என்ற அவர் பெயரை யாருமே சொல்வதாகத் தெரியவில்லை! ஐயா, ஐயா, ஐயாதான்! குழந்தைகளில் இருந்து, வயதானவர்கள்வரை— ஐயாதான்!

நெற்றியில் இவருக்குப் பட்டிருந்த காயத்தை அனைவரும், தங்களுக்குப் பட்ட மாதிரியே நினைத்துத்துடித்தனர்.

வெற்றிவேல், இங்கே வந்து இரண்டு வருடம் ஆயிற்றாம். குருடர்கள் போல் வாழ்ந்து கொண்டிருந்த குப்பத்து மக்களுக்கு, இவர்தான், — 'பார்வை' தந்தாராம்! குடிகார அப்பாக்களை எல்லாம் திருத்தி—பிள்ளைகளை எல்லாம் நல்வழிப்படுத்தி இருக்கிறாராம்! ஓடிக் கொண்டிருந்த தன்னைப் பிடித்து இங்கே அழைத்து வந்த காத்தமுத்துவின் மூலம் இதையெல்லாம் அரசு தெரிந்து கொண்டான்.

"இவர் பணி — பயன் கருதாதது! இப்படியெல்லாம் தொண்டு செய்கிறவர்கள் இன்னும் இருப்பதால்தான், ஏதோ இந்த அளவாவது மழை பெய்கிறது!" என்று பெரிய மனிதன்போல் பேசினான் காத்தமுத்து.

'இவருக்குத் தன்னால் காயம் ஏற்படும்படி ஆகிவிட்டதே' என வருந்தினான், அரசு. ஒரு வசதியான மனிதர், தான், தன் சுகம் என்று பாராமல் ஏழை மக்களுக்குச் சேவை செய்வதை நினைத்தால், ஆச்சரியமாக இருந்தது!

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று, யாரோ ஒரு பெண் பாடிக் கொண்டு ஓடினாள்.

இவன் ரொம்பவும் யோசிக்கலானான்.



## ஐந்தில் ஒன்று!

இந்த ஐந்தும் மிருகங்கள்தான். ஆனாலும், இவற்றில் நான்கு ஒரு வகையைச் சேர்ந்தவை; ஒன்று மட்டும் வேறு வகையைச் சேர்ந்தது.

அந்த ஒன்று எது?


காரணம் என்ன?

விடை: குதிரை — இதற்கு ஒரு குளம்பு தான் உண்டு. மற்ற நான்கும் இரண்டு குளம்புகள் உள்ளவை.

## ஆமை முட்டை

சில ஆமைகள் கடலிலே வாழும்; சில குளம் குட்டைகளிலும் நிலத்திலும் வாழும். ஆனால் எங்கே வாழ்ந்தாலும் அவை எல்லாமே முட்டை இடுவது நிலத்திலேதான்! மண்ணிலே குழி தோண்டும். குழிக்குள் முட்டையிடும். பிறகு மண்ணைப் போட்டு மூடிவிட்டுப் போய்விடும். சூரிய வெப்பத்தில் அந்த முட்டைகள் பொரிந்து குஞ்சுகள்வெளி வரும். ஆமைகளில் எத்தனை வகைகள் இருக்கின்றன, தெரியுமா?

275 வகைகள்!



இந்தக் குப்பத்து மக்களின் வாழ்க்கைப் போராட்டம் இவனுடைய மனத்தைத் தைத்தது. இவனுடைய கிராமத்து விவசாயக் கூலிகளை விடவும், இவர்கள் மிகவும் நைந்த நிலையில் காணப்பட்டனர்! உலகில், இப்படி எல்லாம்கூட வாழ்கிறார்கள். வாழ வேண்டி இருக்கிறது!

தனக்கு என்ன குறை? அப்பாவும், அம்மாவும், 'ஒண்ணே ஒண்ணு — கண்ணே கண்ணு!' என்றல்லவா, வளர்த்தார்கள்! பத்து ஆட்களை வைத்துக் காப்பாற்றுகிற சக்தி, நம் குடும்பத்துக்கு இருக்கிறதே! போதிய வசதி இருந்தும் நான் ஏன் பேராசை பிடித்து அலைந்தேன்?

'அளவற்ற பணம் வேண்டும்' என நான் நினைத்தது எதனால்? சேவை செய்யும் நோக்கத்தோடா? இல்லையே!

பின், போதிய வசதி இருக்கையில் வீண் அங்கலாய்ப்பு ஏன்?

சே! ஒரு இடமாகவா வேலைக்கு முயன்றேம்? கடந்த மூன்று மாதமாய் நாய் படாதபாடு பட்டாயிற்று!

ஓட்டலில், தியேட்டரில், ஸ்டுடியோக்களில், அச்சகங்களில், கம்பெனிகளில்...

கொஞ்சமான கஷ்டங்களா? சாமான்யமான அவமானங்களா?

திருட்டுப் பட்டம்கூடச் சுமத்தினார்களே! அடித்தார்களே! கொடுமைப்படுத்தினார்களே!

இன்னுமா நான் இந்த மண்ணில் வாழ வேண்டும்?

இந்த வெற்றிவேலின் கண்களில் நான் ஏன் பட்டேன்?

காத்தமுத்துவின் பிடியிலாவது சிக்காமல் போயிருக்கக் கூடாதா?

—அரசு, அந்தக் குடிசையில் தூக்கம் பிடிக்காது புரண்டான். கடந்த இரண்டு இரவுகளாகவே இப்படித்தான் அவதிப்படுகிறான்.

வெற்றிவேல் மட்டும், அன்றுதான் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். நெற்றிக் கட்டு அப்படியே இருந்தது. காயம் — ஆழமாகப் பட்டுவிட்டிருந்ததால், தையல் போட்டிருந்தார்கள். 'குணமாகப் பத்து நாளாவது ஆகும்' என்று டாக்டர் சொல்லியிருந்தார்.

ஒரு முகச் சுளிப்போ, முணுமுணுப்போ இல்லை! இவனை அத்தனை அன்போடு பார்த்துக் கொண்டார்!

"நீ இங்கேயே இரு: சுதந்திரமாக இரு. நன்றாக யோசனை செய். நான் வற்புறுத்தவே மாட்டேன். 'அப்பா—அம்மாவிடம் போகலாம்' என்று, உனக்காக எப்போது தோன்றுகிறதோ அப்போது போகலாம்!" என்று இதமாகச் சொல்லியிருந்தார்.

அப்பா, அம்மாவிடம் போவதாவது? இந்த முகத்தோடா?

மகத்தான தோல்விகளால், அடிபட்டு நசுங்கியா?

சே! கேவலம்!

அதைவிடக் கடலில் விழுந்து சாகலாம்!

—அரசு எழுந்தான்; விடிவிளக்கு வெளிச்சத்தைக் குறைத்தான்.

'இங்கே இருந்தால், இவர், எப்படியும் பிடித்துக் கிராமத்துக்கு அனுப்பியே தீருவார்!' என்று தோன்றியது.

ஓசைப்படுத்தாமல் தாழ் திறந்தான்; ஒரு கணம் திரும்பினான்; மங்கல் வெளிச்சத்தில் தூங்கிக்கொண்டிருந்த வெற்றிவேலைப் பார்த்து — மனத்துள் வணங்கினான்.

குப்பமே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. இங்கொன்றும், அங்கொன்றுமாகத் தெரு விளக்குகள் 'கண் சிமிட்டிக் கொண்டு' இருந்தன. இந்த அகாலத்தில் —

தொலைவில், ஒரு விளக்குக் கம்பத்தின் அடியில் அமர்ந்து படிப்பது யாராயிருக்கும் ?

'அந்தப் பக்கம் போகக் கூடாது' என்கிற 'விழிப்பு' ஏற்பட்டது. அரசு, திசை மாறி நடக்க முனைந்தான்.

எதிர்பாராதவிதமாய் ஒரு நாய் குரைத்தது ; போதாக் குறைக்கு, அது விரட்டிக் கொண்டும் வந்தது !

அரசு, அதனிடமிருந்து தப்பி ஓடினான்; எந்தப் பக்கம் போகிறோம் என்பது தெரியாமல் ஓடினான் ; மூச்சுத் திணற ஓடினான் !

தெரு விளக்கடியில் படித்துக்கொண்டிருந்த காத்தமுத்து, ஆச்சரியத்துடன் இவனை வழி மறித்தான் ! நாயை, அதட்டி அடக்கினான்.

'' அரசு...! இந்தப் பன்னிரண்டு மணி ராத்திரியில், எங்கே கிளம்பிவிட்டாய் ?...''

இவனால் பதில் சொல்ல முடியவில்லை.

''இங்கிருந்து தப்பி ஓடி, என்ன செய்யப் போகிறாய்?''

அரசு தலை குனிந்திருந்தான்.

'' உன்னை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை ! அனாவசியமாய் அலைந்து, அழியவா நாம் பிறந்தோம்? வாழ்க்கையில், ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் தேவை!...''

''எனக்கும் தான் இருந்தது!''

'' உன்னிடம் இருந்தது லட்சியமா இல்லை, அரசு ! ஆசை ! பேராசை ! அவர் படித்தாரா, இவர் படித்தாரா? அவர் முன்னுக்கு வரவில்லையா ? இவர் முன்னுக்கு வரவில்லையா?' என்று நினைத்துக் கெட்டது, உன் முட்டாள்தனம் ! நாலரைக்கோடி மக்கள் தொகையில், அப்படி முன்னேறியவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் ! அவர்கள் எல்லாரும்கூட, ஒவ்வொரு குறிப்பிட்ட துறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, பல ஆண்டுகள் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். பல சோதனைகளுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். நீ நினைக்கிற மாதிரி, திடீர் திடீரென்று யாரும் உயர்ந்து போகவில்லை! இவர்களைப் பற்றி மட்டுமே நினைக்கிறாயே தவிர,வறுமையான சூழலிலும், படித்து, முறைப்படி முன்னேறியவர்களைப் பற்றி ஏன் நினைக்கமாட்டேன் என்கிறாய்? அவர்களின் பட்டியல் ஆயிரக் கணக்காய் நீளுமே !''

காத்தமுத்துவா, இவ்வளவு பேசுகிறான் ! இந்தக் குப்பத்துப் பையனா இத்தனை அறிவாக!

''அம்பேத்கார் தெரியுமா, அம்பேத்கார்? அவர் ஒரு சேரியில் பிறந்தார்; மிக ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். உன்னைப் போல் ஒரே ஒரு பையனாக அல்ல. அப்படியும் ஆர்வத்தோடு படித்தார். எதிர்நீச்சல் போட்டுப் படித்தார். அரசியல் நிர்ணயச் சட்டத்தை வகுக்கும் அளவுக்கு உயர்ந்தார். அப்புறம்...''

அவன் அடுக்கிக் கொண்டே போனான்.....

நடுவில், ''அவ்வளவெல்லாம் ஏன் ? என்னையே எடுத்துக் கொள்ளேன்..... குறைந்தபட்ச மார்க் வாங்கினாலே நான் பாசாகிவிடலாம் ; ஆனால், சலுகைகளால் முன்னேற நான் தயாராய் இல்லை ! தமிழ் நாட்டிலேயே முதலாவதாக வரவேண்டும்...இந்திய அளவில் உயர வேண்டும். உலக அளவில் பேர் பெற வேண்டும் ! புத்திசாலிகள் நடுவில் பாராட்டப்பட வேண்டும் ! இதுதான் என் குறிக்கோள் ! இதில் நான் நிச்சயம் வெற்றிபெறுவேன் !''

காத்தமுத்துவின் பேச்சு, அரசை ஒரே அடியாய்க் குறுகச் செய்தது.

ஒரு சாப்பாடு ஓட்டலில் அடிக்கடி ஸ்ட்ரைக் நடக்கும். தெருவில் நின்று கொண்டு, 'முதலாளி ஒழிக! முதலாளி ஒழிக!' என்று கூச்சல் போடுவார்கள் அந்த ஓட்டல் தொழிலாளர்கள்.

ஒரு நாள் முரளியும் மனோகரனும் அந்த ஓட்டலுக்குச் சாப்பிடப் போனார்கள். அவர்களுக்கு மிகவும் சிறிய கரண்டியால் நெய் விட்டார் பரிமாறுபவர்.

''என்னங்க, இத்தினியூண்டு கரண்டியிலே ஒரு கரண்டிதான் விடுறதா? இன்னொரு கரண்டி விடப்படாதா?'' என்று கேட்டான் முரளி.

''எல்லாருக்குமே ஒரு கரண்டிதான் விடறது'' என்றார் பரிமாறுபவர்.

''அடிக்கடி முதலாளி ஒழிக! முதலாளி ஒழிக'ன்னு தொண்டை கிழியக் கத்தறீங்களே! ஒரு கரண்டிக்கு நாலு கரண்டி தாராளமா விட்டா,முதலாளி தானா ஒழிஞ்சு போறாரு'' என்றான் மனோகரன்.



'' புறப்படு. ஐயா விழித்துக் கொண்டு பதறப் போகிறார். பேசாமல் படு. விடிய விடிய யோசனை செய்'' என்று இவனை அழைத்துக் கொண்டு நடந்தான், காத்தமுத்து.

''எல்லாம் சரிதான், ஐயா. நான் எப்படி மறுபடி கிராமத்துக்குப் போவது? ஊரார் முகத்தில் எப்படி விழிப்பது? அப்பா, அம்மாவை எப்படி நேருக்கு நேர் பார்ப்பது?'' என்று தயங்கினான், அரசு.

'' நீ என்ன திருடிவிட்டாயா? கொலைசெய்துவிட்டாயா? அவர்கள் எல்லாமே, அவமானம் இல்லாமல் வெளியே உலாவுகிறார்களே! உனக்கென்ன வெட்கம்? எல்லாரும், ஏதோ ஒரு வகையில் தப்பு செய்யாமல் இருப்பதில்லை. ஆனால், அதை உணர்ந்து திருந்திவிட்டால் போதும்! அப்புறம், அவர்கள் புடம்போட்ட பொன்னாகி விடுவார்கள்! அப்படித்தான் நீயும் ஆகப் போகிறாய்! எனக்கு நம்பிக்கை இருக்கிறது!...'' என்று உற்சாகமாகப் பேசினார், வெற்றிவேல்.

இவன் மௌனமாக இருந்தான்....

'' பாரதி சொல்கிற மாதிரி, 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்!'' என்று நினைத்துக் கொள். சென்றதை எல்லாம் மறந்துவிடு. 'அதெல்லாம் ஒரு பழைய கனவு' என்று நினைத்து, படிப்பில் அக்கறை செலுத்து. நல்லதோர் வீணை செய்து, யாரும் அதைக் குப்பையில் போடுவார்களா? இந்த மாநிலம் பயனுற, நீ படித்து முன்னேறு. விவசாயச் சூழலை நேசி. அது, உன் சிந்தனைகளை விஞ்ஞானபூர்வமாக வளர்க்கும்; மேன்மைப்படுத்தும்!'' என்றார் அவர், அன்பாக.

இவனுள், ஏதோ மாறுதல் விளைகிற மாதிரி இருந்தது.

'' ஒரே பிள்ளையான உன்னைப் பிரிந்து, உன் பெற்றோர் எப்படியெல்லாம் வேதனைப்படுகிறார்களோ? இனியும் அவர்களை அழவிடுவது நியாயமே அல்ல. எப்போது போகலாம், — சொல்லு!'' என்று அவர் கேட்ட போது, இவனால் பதில் சொல்ல முடியவில்லை.

அழுகைதான் வெடித்தது....

அரசு, தன் ஊருக்கு வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன.

வீட்டில், புதிய மகிழ்ச்சி நிலவியது. அப்பாவோ, அம்மாவோ இவனுக்கு எந்த வேலையும் வைப்பதில்லை!

ஆனால், இவனாகவே பசுவையும், கன்றையும் பரிவோடு கவனிக்கத் தொடங்குகிறான்!

**ஆங்கிலேயர் ஆங்கிலத்தில் எழுதினார்கள்!**

ஆங்கிலேயர்கள் ஆங்கிலத்தில் எழுத ஆரம்பித்தது எப்போது தெரியுமா? சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு தான்!

அப்படியானால், அதற்கு முன்பு?

லத்தின் மொழியிலும், பிரெஞ்சு மொழியிலுமே எழுதிக் கொண்டிருந்தார்கள். 13ம் நூற்றாண்டின் கடைசியில்தான் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினார்கள். ஆனாலும் அப்போது சொந்தமாக யாரும் எழுதவில்லை. எல்லாம் மொழிபெயர்ப்புத் தான்!

பள்ளிக்கூடங்களில் கூட 1350ஆம் ஆண்டுவரை பிரெஞ்சு மொழியில் தான் பாடம் நடத்தினார்கள். நீதிமன்றங்களில் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்ததே 1362ல்தான். இப்படி ஒரு காலத்தில் இருந்த ஆங்கிலம்தான் இப்போது உலகமெங்கும் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது!

இனி போடுகையில், ஐம்பது கோழிகள் — நான்கு மடங்காகி இருப்பது தெரிகிறது!

வயலில், செழுமையான நெற்கதிர்கள் காற்றில் சலசலக்கின்றன!— இவன் ஊரைவிட்டுப் போனபோது, நாற்றாயிருந்து, இவன் இங்கே இல்லாத சமயம், பயிராகி...

ஓ.. மூன்று மாதங்களில், எவ்வளவு வளர்ச்சிகள்!

'' அப்பா! கூடிய சீக்கிரமே நாம் ஆட்டுப் பண்ணையும் ஆரம்பிப்போம், அப்பா!''

''சரிடா தங்கம். வந்து ஓயாமல் புத்தகமும், கையுமாக உலாத்தாதே. எதிலும் ஓர் அளவு வேண்டும். படிப்போ, மூளை சம்பந்தப்பட்டது. உன்னை ரொம்பவும் வருத்திக் கொள்ளாதே!''

''சரியப்பா...'' என்றானே தவிர, படித்ததை மனத்துள் அசை போட்டான், அரசு.

சலுகைகளால் முன்னுக்கு வர வாய்ப்பிருந்தும், 'தகுதிகளால் மட்டுமே உயர்வேன்' என்று ரோஷத்துடன் செயல்படும் குப்பத்துக் காத்தமுத்து — நெஞ்சில் நிறைந்திருந்தான்.

அம்பிகா அக்கா, பாலாஜி அண்ணா, பிரபு மாமா எல்லாருக்கும் — இவனைப் பார்க்க மிகவும் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது!



# குப்புசாமி அப்புசாமி

அழ. வள்ளியப்பா

அண்ணன்:

குப்புசாமி, குப்புசாமி
கோடி வீட்டிலே
அப்புசாமி இருந்திடுவார்
அழைத்து வந்திடு.

தம்பி:

அப்பு சாமி வீட்டிலே
அவரைக் காணோம் என்றிடின்...?

அண்ணன்:

தெப்பக் குளத்தங் கரையிலே
தேடிப் பார்த்து அழைத்துவா.

தம்பி:

தெப்பக் குளத்தங் கரையிலே
தேடிப் பார்த்தும் இல்லையேல்...?

அண்ணன்;

சுப்ர மணியர் கோயிலைச்
சுற்றி வருவார்; அழைத்துவா.

தம்பி:

சுப்ர மணியர் கோயிலைச்
சுற்றிப் பார்த்தும் இல்லையேல்...?

அண்ணன்:

கப்பல் காரன் தெருவிலே
கடையில் இருப்பார்; அழைத்துவா.

தம்பி:

கப்பல் காரன் தெருவிலே
கடையில் பார்த்தும் இல்லையேல்...?

அண்ணன்:

சும்மா திரும்பி வந்திடு
துரித மாகச் சென்றிடு.

தம்பி:


சும்மா திரும்பி வரவாநான்
இம்மாந் தூரம் அலைவது?
அம்மா டியோ! இங்குதான்
நிம்மதி யாய்த் தூங்குவேன்!

Printed and published by V. Murali on behalf of Ms. Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-32. (Phone: 431543)

Editor K. Rajendran.

# STANDARD-20

## It's a Van,
## It's a Micro Bus,
## It's a Micro Lorry.



**STANDARD MOTOR PRODUCTS OF INDIA LTD**
Madras

FDS SMP 3387A

Regd. No. TN MS (S) 281

